KALKI 18.8.91 ரூ. 3.00
கல்கி
பொன்விழா ஆண்டு



முன்னேற்றப் பாதையில்
பெண் சுதந்திரம்


சேமியீர் ரூ.5/-
காம்ப்ளான் மேங்கோ வாங்கும்போது
Complan®
MANGO
Complete Planned Food
Complan
Complete Planned Food
MANGO
உங்களுக்கு மிக
விருப்பமான
காம்ப்ளான்
மேங்கோ
இப்பொழுது
500 கிராம் ரீஃபில்
பேக்கில் கிடைக்கிறது.
இது டின் பேக்கைவிட
ரூ. 5/- விலை குறைவு.
சௌகரியமானதும் கூட.
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு
GX/40/202 TAM
தேர்ந்தெடுக்க
இடங்களில்
மட்டுமே கிடைக்கிறது.
Rs.5/- less
than the tin pack
புதிய ரீ:பில் பேக்

வாழப்பாடியாரின் நாக் அவுட் அரசியல்!





ஏற்கெனவே அ. தி. மு. க. என்ற கம்பைக் கொண்டு, மூப்பனார் கோஷ்டியைக் கட்டுப்படுத்தி வைத்திருந்த வாழப்பாடியார், காவிரி விவகாரத்தில் ராஜினாமா செய்து, தியாகி பட்டம் பெற்றது மட்டுமல்லாமல் மூப்பனார் கோஷ்டியை மூலையில் முடங்கச் செய்து விட்டார்! போஸ்டர் யுத்தத்தில் யாருக்கு வெற்றியோ, தோல்வியோ செல்வாக்கு யுத்தத்தில் இப்போதைக்கு வாழப்பாடியார் கைதான் ஓங்கியிருக்கிறது.

''எங்கள் மூப்பனார் எவ்வளவுக்கு ஒரு கண்ணியமான அரசியல்வாதியோ அவ்வளவுக்கு வாழப்பாடியார் ஒரு 'கட் த்ரோட்' அரசியல்வாதி. பாருங்களேன், ராஜீவ் கொலையைக் கூட அரசியலாக்கி, தேர்தலில் வெற்றிக் கொடி நாட்டி இன்று அசைக்க முடியாதவராகி விட்டார்'' என்றார் மூப்பனாரின் தீவிர ஆதரவாளர் ஒருவர். ''சற்று யோசித்தால் வாழப்பாடியாரின் ராஜதந்திரம் அல்லது தந்திர அரசியல் தெளிவாகப் புரியும். முதலில் காங்கிரஸ் தோல்விக்கு மூப்பனார் மீது பழி போட்டுத் தலைமைப் பதவியிலிருந்து அவரை விரட்டினார். ராஜீவ் கொலையில் தி.மு.க. மீது பழி போட்டு, தேர்தலில் அவர்களை வீழ்த்தினார். இப்போது கடைசியாக, மூப்பனார் கோஷ்டி, தமிழகத்தின் நலன்களுக்கு எதிராகக் காவிரி விஷயத்தில் செயல்படுவதாகக் கூறி, இவர் தியாகியாகி விட்டார். போதாததற்கு ஜெ.யின் ஆசீர்வாதம் வேறு!''

இதற்கு வாழப்பாடியார் முகாம் என்ன சொல்கிறது? ''மத்திய மந்திரி பொறுப்பு கொடுத்து, தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து வாழப்பாடியாரைக் கழற்றி விடப் பார்த்தார்கள் மூப்பனார் ஆதரவாளர்கள். பதவியைச் சரியான நேரத்தில் ஒதுக்கித் தள்ளியதன் மூலம், அரசியலில், வெகு உயரத்திற்குச் சென்று விட்டார் ராமமூர்த்தி'' என்று குறிப்பிட்டார் வாழப்பாடியாரின் சிஷ்யர்களில் ஒருவர்.

ஃப்ரிஜ் பரிசு : கூப்பன் நெ : 18

''நேற்று வரை நந்தவனம்'' தொடர் கதையைக் கவனமாகப் படித்து, இந்த வாரம் நாங்கள் வேண்டுமென்றே செய்துள்ள தவறு என்ன என்று கண்டுபிடியுங்கள். தவறையும் திருத்தத்தையும் கீழே எழுதி, கூப்பனைக் கத்திரித்து வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறே ஒவ்வொரு வாரமும் கூப்பன் சேகரித்து, கதை முடியும் வாரம் 5 - 10 வரி விமர்சனத்துடன் சேர்த்து, எல்லாக் கூப்பன்களையும் அனுப்பி வையுங்கள். மிக அதிகமான தவறுகளைச் சரியானபடி சுட்டிக்காட்டியவருக்கு ஃப்ரிஜ் பரிசு! ஒருவருக்கு மேல் அதிகபட்சத் தவறுகளைச் சுட்டிக் காட்டியிருந்தால் குலுக்கலில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார். ஆறுதல் பரிசுகளும் உண்டு!

தவறு : ______________________ திருத்தம் : ______________________

இதற்கு மறுபுறமாக, ''மந்திரி பதவி என்பது பொறுப்பான கஷ்டமான வேலை. 'எதற்கு அவஸ்தை? அதை விட, தமிழக காங்கிரஸ் தலைமைப் பதவியே போதும் அவ்வப்போது பிறரைக் குறைகூறி அறிக்கை விட்டபடி இமேஜை வளர்த்துக் கொண்டிருக்கலாம்' என்பது வாழப்பாடியார் திட்டம். வாய்ச் சவடால்தான் அவருக்குத் தெரியும்'' என்றார் மூப்பனார் ஆதரவாளரான தாய்க் குலத்தைச் சேர்ந்த ஒருவர். ''காவிரிப் பிரச்னையை, மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பி வைத்தது தெரிந்து இரண்டு நாட்கள் வரை சும்மாதான் இருந்தார் வாழப்பாடி. எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த திண்டிவனம் ராமமூர்த்தி, மத்திய அரசின் செய்கையைக் கண்டித்து அறிக்கை விட்டார். திண்டிவனத்தின் அறிக்கையை, வாழப்பாடியாரின் அறிக்கை என்று நினைத்து, ஜெ. வாழப்பாடியாரைப் பாராட்டி விட்டார். ஜெ. பாராட்டி விட்டதால், சற்றும் பின்வாங்காமல் அவர் எதிர்பார்ப்புக்கும் மேல் தாம் வீரர் என்று நிரூபித்துக் கொள்ளும்விதமாக வாழப்பாடி ராஜினாமா செய்யத் துணிந்தார். போயஸ் தோட்டத்தைத் திருப்தி செய்ய வாழப்பாடியாரின் சந்தர்ப்பவாத அரசியல் இது.''

''தி. மு. க. வைக் களத்தில் இருந்து விரட்டிய பின்னர் எஞ்சியிருப்பது காங்கிரஸ்தான். இன்றில்லாவிட்டாலும், நாளை, அ. தி. மு. க. வை எதிர்க்கும் நிலைக்கு நாங்கள் தள்ளப்படலாம். அந்த நிலைக்கு நாங்கள் சென்றாலும் வலிமையாக இருக்கக் கூடாது என்றுதான் பிரித்தாளும் சூழ்ச்சியில் இறங்கியிருக்கிறார் ஜெ'' என்றார் ஒரு மூத்த காங்கிரஸ் தலைவர். ''வாழப்பாடிக்கு இப்போது கொம்பு சீவி வேடிக்கை பார்க்கும் ஜெயலலிதா, அவரையும் வளர விடாமல் தடுத்து முடக்கத்தான் போகிறார்'' என்றார் அவர்.

ஏது எப்படியானாலும் வருகிற சுதந்திர தினத்தன்றுக்குள், வாழப்பாடியாரைத் தமிழக காங்கிரஸ் தலைமையிலிருந்து தூக்கி விட வேண்டுமென்று மூப்பனார் கோஷ்டி வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.


''வாழப்பாடியார் தலைமைப் பதவியிலிருந்து தூக்கப்பட்டாலும், தொடர்ந்து மூப்பனார் கோஷ்டிக்கு ஒரு தலைவலியாகவே இருப்பார். ராஜீவ் போன்ற உறுதியான தலைவர் கட்சியைக் கட்டுப்படுத்த இல்லாததால் தமிழ்நாட்டில் மட்டுமா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலும் கோஷ்டிப் பூசல் வலுப்பட்டிருக்கிறதே!'' என்றார் எந்தக் கோஷ்டியிலும் சேராத நடுநிலை காங்கிரஸ்காரர் ஒருவர்!

- தில்லப்பா.

''உன் கல்யாணத்துக்கு உன்னோட மாஜி காதலரும் வந்திருந்தாராமே!''

''வந்து என்ன பிரயோஜனம்? அவருக்கு நான் எவ்வளவு சுண்டல் வாங்கிக் குடுத்துருப்பேன்... கேவலம் பத்து ரூபாய் கூட மொய் வைக்கலையே!''

- ஞா. ஞானமுத்து



பயங்கரவாதிகள் பிடியில் துரைசாமி!

திருமதி. சத்யா துரைசாமி, பம்பாய் பாந்த்ராவிலுள்ள தமது வீட்டில், டெலிபோன் அடியிலேயே மோனத்தவம் இருக்கிறார்! கணவரைப் பற்றியச் செய்திக்காகத் தினந்தினம் ஏங்கிக் கொண்டிருக்கிறார். துரைசாமியின் 77 வயதான விதவைத் தாயார், அருமை மகன் திரும்பும் நேரத்தை எதிர்பார்த்து வாசலையே வெறித்துக் கொண்டு அமர்ந்திருக்கிறார். துரைசாமியின் அருமை நாய் ஸாஷி கூட சோகத்தோடு, தெருவையே பார்த்துக் கொண்டு நிற்கிறது. அதன் வால் மகிழ்ச்சியால் ஆடி நாற்பது நாட்களுக்கு மேல் ஆகி விட்டது!


ஸ்ரீநகரிலிருந்து 15 கி.மீ. தூரத்திலுள்ள ஜேவான் என்ற சிற்றூரில் ஒரு கெரஸின் டிப்போ அமைப்பதற்காகத் தக்க இடத்தைத் தேர்ந்தெடுக்க ஜூன் 28 ஆம் தேதியன்று போனார், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் எக்ஸிகியூடிவ் டைரக்டரான 57 வயது கே. துரைசாமி. அந்தச் சமயத்தில்தான் காஷ்மீரின் இக்வான்-அல்-முஸ்லிமீன் என்ற தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப் பட்டார். இன்று வரை அவரது எதிர்காலம் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது!

அவர் விடுதலை செய்யப்பட



✤ துரைசாமி

✤ ஸாஷி



வேண்டுமானால் இந்திய அரசு கைது செய்துள்ள ஐந்து தீவிரவாதிகளை விடுவிக்க வேண்டும் என்பது நிபந்தனை! அந்த ஐவரில் ஷல்லா என்ற ஒரு பயங்கரக் கொலைகாரனும் உண்டு. தீவிரவாதிகளுடன் ஒரு நடுவர் மூலம் பல நாட்கள் பேச்சு வார்த்தை நடத்தியபின், ஷல்லாவைத் தவிர வேறு ஐந்து கைதிகளை விடுவிக்க, அரசு ஒப்புக் கொண்டது. ஆனால் இப்போது தீவிரவாதிகள், ஏழு கைதிகளை விடுவித்தால்தான் துரைசாமிக்கு 'விடுதலை என்கின்றனர்.

துரைசாமி, மைசூரில் பிறந்து வளர்ந்த தமிழர். இள வயதிலேயே தந்தையை இழந்த இவர், தாயின் கடின உழைப்புக்குப் பரிசாக என்ஜினிரிங் படிப்பில் தன் திறமையைக் காட்டிப் பட்டம் பெற்றவர். தொழில் துறையில் - குறிப்பாக - பெட்ரோலிய எண்ணெய்க்கான டிப்போக்கள் கட்டுவதில் நிபுணர்; இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெற வேண்டியவர்.

தமிழில் நம் கேள்விகளைத் துவக்கிய போது ''தயவு செய்து ஆங்கிலத்திலேயே கேட்கிறீர்களா?'' என்றார் திருமதி சத்யா. அப்போதுதான் அவர் ஒரு தமிழர் அல்ல என்பது

புரிந்தது. ''நான் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவள். கன்னடம் பேசுவேன். ஆனால் தமிழ் அவ்வளவாக வராது. என் கணவர் மராத்தி, தமிழ், கன்னடம் எல்லாமே வெகு சரளமாகப் பேசுவார்'' என்றார் திருமதி துரைசாமி. ஆதர்ச தம்பதிகளாகப் போற்றப்படும் இவர்களுக்கு மக்கட்செல்வம் இல்லை. அதனால்தான் போலும், ஒருவருக்கொருவர் அளவு கடந்த அன்பு வைத்துள்ளனர்.

திருமதி துரைசாமிக்கு ஆறுதல் கூற அதிக உறவினர் அருகில் இல்லை. ஆயினும், அன்பு குறையாத, பண்பான நண்பர்கள் பலர் உண்டு. அவர்கள் தங்களுக்குள் முறை போட்டுக் கொண்டு, எப்போதும் யாரேனும் ஒருவராவது அவருக்குத் துணையாக இருந்து கொண்டேயிருக்கின்றனர்.

''அரசாங்கத்திடமிருந்து அவ்வப்போது செய்திகள் வந்து கொண்டிருக்கிறதா?'' என்று கேட்ட போது, ''நானும் உங்களை மாதிரிதான்; டீ.வி., நியூஸ் பேப்பரைப் பார்த்துத்தான் அவ்வப்போது விவரம் அறிவேன். ஆயினும், அரசு மிகவும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறேன்'' என்று துக்கத்தினிடையேயும் நம்பிக்கை தெரிவித்தார் திருமதி துரைசாமி.

ஆனால் ஐ. ஓ. எஸ். அதிகாரிகள் சங்கம், அரசாங்கத்தின் மெத்தனத்தைக் கண்டித்திருக்கிறது. ''அரசியல்வாதியின் பெண் அல்லது பையன் என்றால் அவர்கள் உயிர் வெல்லமா? நாங்கள் என்ன இரண்டாம்தரக் குடிமக்களா?'' என்று ஜனாதிபதியையும், பிரதமரையும் கேட்டிருக்கின்றனர் இவர்கள். இதற்கு மறுபுறமாக ''இன்று ஏழு பேரை விடுவித்தால், நாளை 12 பேரை விடுவியுங்கள் என்பார்கள். இவர்களிடம் பணிந்து போய் இவர்கள் சொல்லும்படியெல்லாம் ஆடுவதற்கும் ஓர் எல்லை வேண்டும். நான் அதிகாரம் பெற்றிருந்தால், ஷல்லா போன்ற கொலைகாரர்களை நடு மைதானத்தில் கட்டி வைத்து விட்டு தீவிரவாதிகளைப் பார்த்து 'உங்களுக்குத் தைரியம் இருந்தால், இவர்களை விடுவித்துச் செல்லுங்கள் பார்க்கலாம் என்று சவால் விடுவேன்! நம் பலத்தைக் காண்பித்துத்தான் நாம் அவர்களைப் பணிய வைக்க வேண்டும்'' என்கிறார் பம்பாய் சிவசேனா தலைவர் பால் தாக்கரே.

''திரு. துரைசாமி உயிரோடுதான் இருக்கிறார். இதோ அவர் ஜூலை 22 ஆம் தேதி 'காஷ்மீர் டைம்ஸ்' நாளிதழைப் படிப்பதைப் பாருங்கள்'' என்று ஒரு புகைப்படத்தை வெளியிட்டிருக்கின்றனர் தீவிரவாதிகள். ஆனால் அவர் எங்கிருக்கிறார் என்பதுதான் இன்னும் ராணுவத்தினருக்குத் தெரியவில்லை. காஷ்மீரத்தையே சல்லடை போட்டு அலசி விட்டார்கள்! இதனிடையே பயங்கரவாதிகளோடு பேச்சு வார்த்தை நடத்த உதவி வந்த நாஜிர் அகமத் சித்திக்கும் பத்து நாட்கள் கடத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்!

நாணயத்துடன், ஊக்கத்துடன் உழைத்துத் தம் உயிரையும் பணயம் வைத்து, காஷ்மீரம் சென்ற தமிழர் துரைசாமிக்காக நாடே ஒருமித்துப் பிரார்த்தனை செய்கிறது.

- ராஜீவி நரசிம்மன்.

அடுத்த இதழில்...



O வரலக்ஷ்மி வருவாள் வரமெல்லாம் தருவாள்
- சிறப்புக் கட்டுரை

● ரத்தம் சிந்தாமல் அறுவைச் சிகிச்சை
- மருத்துவ உலகின் 'லேட்டஸ்ட்' முன்னேற்றம்



இன்று சினிமாவை விட பல நூறு மடங்கு சக்திவாய்ந்த மீடியம் டீ.வி. என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்.

ஒரு மேடை நாடகத்தை அதிகபட்சம் ஆயிரம் பேர் பார்க்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் அது நூறாவது நாளை எட்டும் போது ஒரு லட்சம்·பேர்கள் பார்த்திருப்பார்கள்.

ஆனால் ஒரு சினிமா ரிலீசாகும் அன்றே, குறைந்த பட்சம் 32 பிரிண்ட்ஸ் என வைத்துக் கொண்டாலும், மூன்று காட்சிகளிலும் சேர்த்து, லட்சம் பேர் ஒரே நாளில் பார்த்து விடுகிறார்கள்.

ஆக நாடகம் மூலம் நூறு நாட்களில் எழுதப்படும் தலைவிதி சினிமா மூலம் ஒரே நாளில் எழுதப்படுகிறது!



ஆனால் டீ.வி.யை எடுத்துக் கொண்டால்? மாலை ஏழு மணிக்கு ஒருவன் புதுமுகம். எட்டு மணிக்குள் கோடிக்கணக்கான மக்களால் பேசப்படுபவன். பாராட்டினால் அசுரப் பாராட்டு. திட்டினால் அகோரத் திட்டு. அன்று அவன் படுக்கப் போகுமுன் அவன் தலைவிதி எழுதப்பட்டு விடும்.

ஆக டீ.வி. ஒரு பகாசுர சாதனம் என்பதை நானறிவேன். அதன் மேல் எனக்குக் கண்டிப்பாகக் காதல் உண்டு. ஆனால் இதுவரை அது ஒரு ''ஒரு தலைபட்சக் காதலாக'வே அமைந்திருக்கிறது.

பதினைந்து வருடங்களுக்கு முன் ஒரு தடவை டீ.வி.யில் பேட்டி அளித்தேன். ஒருமுறை நானும் என் தம்பியும் ஒரு நகைச்சுவை இங்கிலீஷ்/தமிழ் மொழிபெயர்ப்பு நிகழ்ச்சி நடத்தினோம். அதோடு சரி. நாடக மேடைக்குச் சொந்தக்காரனான நான் இன்னும் நாடகம் ஒன்றுக்காக டீ.வி. ஸ்டேஷனுக்குள் நுழையவில்லை.

ஏன்?



எனக்குத் 'தான்' என்ற அகம்பாவம் உண்டு. நான் மிகவும் 'சென்சிட்டிவ்' டைப். இவை இரண்டும்தான் முக்கிய காரணங்கள்.

நான் ஒரு கதையை எழுதுகிறேன் என்றால் அதன் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டியது மக்கள் பொறுப்பு. 'குப்பைத் தொட்டியில் வீசி எறிய வேண்டிய சரக்கு' என்று மக்கள் தீர்மானித்தாலும் அதை நெஞ்சுறுதியோடு ஏற்றுக் கொள்வேன் (என்ன! தனிமையில் கொஞ்சம் புலம்புவேன்)

ஆனால் அதைக் குறிப்பிட்ட சில நபர்கள் கொண்ட குழு முடிவு எடுக்கும் என்ற அரசாங்க விதி என்னை உறுத்துகிறது. அந்தக் குறிப்பிட்ட நபர்களுக்கு என்னையோ அல்லது என் கதையையோ பிடிக்கவில்லை என்றால் என் அப்ளிகேஷனையே நிராகரிக்கும் உரிமை இருக்கிறது என்ற உண்மை என்னைத் தளர்ச்சி அடையச் செய்கிறது.



இன்றையத் தேதி வரை சென்னைத் தொலைக்காட்சி நிலையத்துக்கு ஒரு ஸ்கிரிப்ட் கூட அனுப்பவில்லை என்று சொல்லிக் கொள்ளும் போது தங்கச் சுரங்கத்தைத் திரும்பிப் பார்க்காத திரில் இருக்கிறது.

ஒருவேளை நான் ஒரு ஸ்கிரிப்டை அனுப்பி, அது ஏதாவது ஒரு சொல்ல முடியாத காரணத்துக்காக நிராகரிக்கப்பட்டால், நான் மிகவும்.......... I am sorry. I am sensitive.

''என்ன சார் இது? இந்த ஆளு படிச்சவன் மாதிரியா எழுதறார்? டீ.வி.ங்கறது ஒரு அரசாங்க அமைப்பாச்சே! அதுலே தனிப்பட்ட மனிதர்களுக்கு அவங்க எவ்வளவுதான் பாப்புலரா இருந்தாலும், எப்படி சார் விதிமுறைகளைத் தளர்த்த முடியும்?'' என்ற நிலைய அதிகாரிகள் வாதத்தை

டீ.வி. ஒரு பகாசுர சாதனம்

விசு

நூற்றுக்கு நூற்றுப் பத்து சதவிகிதம் ஒப்புக் கொள்கிறேன்.

ஆனாலும் டீ.வி.க்காக, நான் ஒரு நாடகம் எழுதி, இயக்கி, நடித்து, தயாரித்து, என் போதாத காலம், அது மிகவும் மோசமான நாடகமாக அமைந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். ''டீ.வி. ஸ்டேஷனில் யாரோ ஒரு கத்துக்குட்டிக்குச் சான்ஸ் கொடுத்து போரடித்து விட்டார்கள்'' என்று யாரும் சொல்லப் போவதில்லை. ''விசு அறுத்து விட்டார்(ன்)'' என்றுதான் சொல்லப் போகிறார்கள்.

இதைப் படிக்கும் நிலைய ஊழியர்களும் சரி, வாசகர்களும் சரி, என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

நான் ஏ.வி.எம். நிறுவனம் மூலமாக ஹிந்திக்கு ஒரு ஸ்கிரிப்ட் அனுப்பி இருக்கிறேன். அது ஒரு வேளை நிராகரிக்கப்பட்டால், சத்தியமாக எனக்கு வருத்தம் இருக்காது. ஏனெனில் ஹிந்தியில் நான் 'L' போர்டு.

ஆனால் தமிழில் அப்படி அல்லவே?

இதுதான் என் தயக்கத்துக்குக் காரணம்.

இன்னும் சில நாட்களில் தொலைக்காட்சி நிலையத்தினர் ''ஸ்கிரிப்ட்டுகளைக் கொடுக்கலாம்'' என அறிவிப்பு கொடுக்கப் போகிறார்களாம்.


பல தயாரிப்பாளர்கள் என் வீடு நோக்கிப் படையெடுத்து விட்டார்கள். இந்தத் தடவை நான் கண்டிப்பாக ஓரிரண்டு ஸ்கிரிப்டுகளாவது கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்.

என் வீதி குழந்தைகள் 'இந்த மாமாவுக்கு டீ.வி.லே சான்ஸே கிடைக்கலைடா' என்று கேலி செய்கிறார்கள்.

ஆக இன்று நான் ஒரு திரிசங்கு.

நிஜத்தை எழுதி விட்டேன். நிழலில் என்னென்ன நடக்கப் போகிறதோ?

(முற்றும்)



'வகுப்பறையில் விஷமம்'

-போட்டி முடிவு:

'வகுப்பறையில் விஷமம்' என்ற போட்டியில ஏகப்பட்ட வாசகர்கள் கலந்து கொண்டு எங்களைத் திணறடித்து விட்டனர். இவர்களில் பலர் நூறுக்கு மேற்பட்டத் தவறுகளைப் பட்டியலிட்டுள்ளனர்! ஆனால் இவர்கள் சிறுவர்கள் செய்யும் விஷமங்களையும் சேர்த்து எழுதி விட்டனர். ஓவியர் செல்லம் வேண்டுமென்றே செய்த தவறுகள் மொத்தம் 25 மட்டுமே. இவற்றுள் 24 தவறுகளைச் சரியாகச் சுட்டிக் காட்டி ரூ. 250 பரிசு பெறுபவர்:

எம். எஸ். முத்துகிருஷ்ணன்,
11, முதல் தெரு,
நந்தனம் விஸ்தரிப்பு,
சென்னை - 35.

பார்த்தவர்களும் பத்திரிகைகளும் பாராட்டும் படம்



"வண்டிக்காரா சொந்த ஊரு மதுரை" பாடல் காட்சி



விஜயகாந்த் ஆனந்தராஜ் மோதும் விறுவிறுப்பான சண்டைக் காட்சிகள்.



பிரதமராக நடிக்கும் லட்சுமி, பிரதமர் இந்திரா காந்தியைப் போலவே நடித்துள்ளார்.



டி.வி. ஆண்டெனாவில் தலை கீழாகத் தொங்கும் பேபி விசித்ராவின் நடிப்பு பார்க்கி ரசிகர்களின் நெஞ்சை பட படக்கச் செய்கிறது.



திரைப்படக் கல்லூரி மாணவர்கள்
வழங்கும்
புரட்சி கலைஞர் விஜயகாந்த் நடிக்கும்

ஏவி.எம்.மின்
50 ஆவது ஆண்டில்
150 ஆவது படம்

ஏவி.எம்.மின் மாநகர காவல்

CinemaScope

M. தியாகராஜன் B.Sc., D.F.Tech

சந்திரபோஸ் வாலி
ஷிவா D.F.Tech
லியாகத் அலிகான்
G. ஜெயச்சந்திரன் D.F.Tech

AVM audio
இப்படத்தின் வசன கேசட்டுகளும்
பாடல் கேசட்டுகளும் விற்பனையில் உள்ளன


AVM PRODUCTIONS

M. சரவணன் M. பாலசுப்ரமணியன் M.S. குகன்

50 ஆண்டுகளுக்கு முன்...

ஆரம்பத்தில் மாதம் இருமுறையாக வெளிவந்த கல்கி, பிறகு மாதம் மும்முறையாகி, அதன் பின்னர் வாரப் பத்திரிகையானது. தொடக்கத்தில் விலை - பெருமூச்சு விடுங்கள் - இரண்டணாதான்! அதாவது இன்றைய 13 பைசா! ராஜாஜியின் உருவத்தை அட்டைப் படமாகக் கொண்டிருக்கும் இரண்டாவது இதழைப் புரட்டும் போது, முதலிதழுக்கான அமோக வரவேற்பைப் புரிந்து கொள்ள முடிகிறது. ''ரா.கி.'' என்ற பெயரில் தமது சிறைவாச அனுபவங்களை எழுத ஆரம்பிக்கிறார் ''கல்கி'' - ரா. கிருஷ்ணமூர்த்தி. ''கர்நாடகம்'' என்ற பெயரில் அவரது முதல் இசை விமர்சனக் கட்டுரையும் இடம்பெறுகிறது. இன்னொரு ரசமான விஷயம், முதல் இதழ் மேலட்டையில் ஏற்பட்ட தவறைச் சிலர் சுட்டிக்காட்ட, அதற்கு எப்படி ''கல்கி'' கெட்டிக்காரத்தனமாகப் பதில் சொல்லிச் சமாளித்திருக்கிறார் என்பது!

கபர்தார்!



என்ன சேதி?

முன்னொரு சமயம் அகஸ்தியர் என்ற குள்ள ரிஷி சமுத்திர ஜலத்தை ஆசமனீய மாகப் பானம் செய்து விட்டது போல், இன்று ஜப்பானியக் குள்ளன் பஸிபிக் சமுத்திரத்தையே விழுங்கி விடலாமென்று பார்க்கிறான். ''இப்படிப்பட்ட ஆபத்திலிருந்து பஸிபிக் சமுத்திரத்தைக் காப்பாற்றுவோர் யார்?'' என்ற சோகக் குரல் உலகில் கிளம்பிய சமயத்தில், ''இதோ நான் இருக்கிறேன்'' என்று மார்தட்டிக் கொண்டு முன் வந்திருக்கிறது, அநாதைகளின் சரணாகதியான அமெரிக்கா தேசம்.

அமரர் ரவீந்திரர்

நமது நாட்டில் சுதந்திரப் போர் தீவிரமாக நடந்த ஒவ்வொரு சமயத்திலும் ரவீந்திரர் ஒவ்வொரு அற்புதமான செயல் புரிந்திருக்கிறார். அந்தச் செயல் மின்சார சக்தியைப் போல் தேச மக்களை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டிருக்கிறது.

பஞ்சாப் அதிக்ரமங்கள் நடந்த காலத்தில் ஸ்ரீ ரவீந்திரர் பிரிட்டிஷ் சர்க்கார் தமக்கு அளித்திருந்த 'ஸர்' பட்டத்தை வீசி எறிந்தார்.

ஸ்ரீ டாகூர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது கானடாவுக்கும் வர வேண்டுமென்று அந் நாட்டாரிடமிருந்து அழைப்பு வந்தது. ''இந்தியர்களுக்குச் சம உரிமை அளிக்காத நாட்டுக்கு நான் வர மாட்டேன்'' என்று மறுதலித்தார் டாகூர். இந்த மறுப்பினால் இந்திய மக்களின் கௌரவத்தை எவ்வளவோ உயர்த்தி விட்டார்.

(டாகூர் அமரர் ஆகிவிட்டதையொட்டி எழுதப்பட்ட கட்டுரையில் ஒரு பகுதி)

யுத்த அபாயம்

இந்தியாவை யுத்த அபாயம் இரண்டு புறங்களிலிருந்தும் நெருங்கி வந்து கொண்டிருப்பது வெளிப்படை. அந்த அபாயத்தை இந்தியா எதிர்த்து நின்று சமாளிக்க வேண்டுமானால், பகைவர்கள் யார் வந்தாலும் முறியடித்து வெற்றி பெற வேண்டுமானால், தேசத்தில் முக்கியமாக வேண்டிய பாதுகாப்பு சாதனம் யாது? சர்க்காருக்கும் பொது


ஜனங்களுக்கும் உள்ள பூரண ஒற்றுமைதான் அந்த சாதனமாகும். சர்க்காரும் ஜனங்களும் சேர்ந்து ஒரே மனத்துடன் ஒரே உற்சாகத்துடன் யுத்த முயற்சியில் இறங்கினால்தான் இந்தக் காலத்து மின்னல் யுத்தங்களில் ஜயிக்க முடியும். சென்ற இரண்டு வருஷத்து யுத்தப் போக்கைப் பார்த்தால் இந்தப் பாடம் கரதலா மலகமாய் விளங்கும்.

ஆனாலும் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் குறுகிய புத்தியில் மேற்சொன்ன பாடம் ஏறினதாகத் தெரியவில்லை. இந்தியாவில் பொது மக்களின் அன்பைக் கவர்ந்த தலைவர்களை - லட்சக்கணக்கில் வோட்டுப் பெற்ற பிரதிநிதிகளை - மாஜி மந்திரிகளை - இன்னமும் சிறையில் வைத்திருக்கிறார்கள்! இவர்களைச் சிறையில் வைத்து விட்டு மோடியையும் ஜாடியையும் ஆனையையும் பூனையையும் நிர்வாக சபையில் சேர்த்துக் கொள்கிறார்கள்! இதன் மூலம் பொது ஜன ஆதரவைப் பெற்று விடலாமென்று கனாக் காண்கிறார்கள்!

(அஹிம்சையா? அரசியலா? தலையங்கத்தின் ஒரு பகுதி)

ஆகாச வெடி

''சைக்கிள் திருடிய குற்றத்துக்காக, சென்னைப் போலீஸ்காரர் ஒருவரைப் போலீஸார் கைது செய்திருக்கிறார்கள்.''



போலீஸ்காரர்களுக்கு டிமிக்கி கொடுத்துக் கொண்டு சில சைக்கிள்காரர்கள் ஓடுவதன் மர்மம் இப்போது தெரிகிறது.

அக்கப் போர்

இந்தப் புது "V - இயக்கம்'' நம்முடைய ஊருக்கும் வந்து விட்டது. பொதுக் கட்டிடங்களிலும், டிராம் வண்டிகளிலும், மோட்டார்களிலும், இந்த V சின்னத்தைக் காண்கிறோம். ஜனநாயக வெற்றிக்கு இது ஒரு அறிகுறியாம்.

இந்த ''வி'' இயக்கத்தின் சம்பந்தமாக இந்தியர்கள் மிகவும் குதூகலமடைய இடமிருக்கிறது. 'வி' போட்ட இடத்துக்கெல்லாம் வெற்றியும் விடுதலையும் கிடைக்கப் போகிறதென்றால், இந்தியாவுக்கும் கிடைப்பதற்குக் கேட்பானேன்? இந்தியா தேசமே ஒரு பெரிய 'V' போட்டது போல் அமைந்திருக்கிறதல்லவா?''

- கொடுக்கு

மூன்று மாதம் கடுங்காவல்

என்னைச் சிறைக்கு அனுப்புகிற விஷயத்தில் என்னுடைய சிநேகிதர்கள் காட்டிய அபார ஊக்கத்தை நினைத்தால் இப்போது கூட என் இருதயம் பொங்குகின்றது.

சென்ற வருஷம் டிசம்பர் மாத இறுதியில் எனக்கு ஒரு பேரதிர்ஷ்டம் வந்தது. அதாவது ராஜாஜி, ராஜேந்திர பிரஸாத், லார்ட் பீவர் புருக் முதலிய பிரமுகர்களுக்கே உரியதான 'ஆஸ்த்மா' நோய் இந்த ஏழையைத் தேடிக் கொண்டு வந்தது. கடுமையான இருமல் சில நாள் இரவு பகல் இடைவிடாமல் இருந்தது. படுத்துக் கொள்ளவே முடியாது; நடமாடவும் முடியாது; தூக்கமே கிடையாது. இப்படிப்பட்ட நிலைமையில் என்னை வந்து பார்த்த அந்த அருமை சிநேகிதர்களில் யாராவது, ''உனக்குத்தான் உடம்பு சரியாயில்லையே! சிறைக்கு இப்போது எதற்காகப் போக வேண்டும்?'' என்று கேட்க வேண்டுமே? கிடையவே கிடையாது! எப்படியாவது என்னுடைய உடம்பை சொஸ்தப்படுத்திக் குறிப்பிட்ட தேதியில் சிறைக்கு அனுப்பி விடுவதென்று அநேகர் கங்கணங் கட்டிக் கொண்டார்கள்!

- ரா. கி.

வட்டமேஜை

தங்கள் முதல் இதழ் பார்த்தேன். மிகவும் சந்தோஷம். ''கல்கி'';யின் உதயம் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் ஒரு முக்கிய சம்பவம் என்று கருதுகிறேன். கற்றிலும் நான் பார்ப்பதிலிருந்தும் கேட்பதிலிருந்தும், தமிழ்நாடு இந்த விசேஷ சம்பவத்தைக் கொண்டாடி மகிழ்வதாகத் தெரிகிறது.

க. நா. சுப்பிரமண்யம்.

(தமிழ் மக்களின் கொண்டாட்டம், அநேக இடங்களில் தமது ஏஜெண்டுகளின் திண்டாட்டமாக முடிந்த தென்றும் தெரிய வருகிறது. சிரமமடைந்தவர்கள் எல்லாரிடமும் மன்னிப்புக் கோருகிறேன்.

- ஆசிரியர்)

'கல்கி'யின் முகப்பு அட்டைப் படத்தில்

சித்திரித்திருக்கும் மூவர்ண தேசியக் கொடியின் மேல் பாகத்தில் பச்சை நிறமும் கீழ்ப் பாகத்தில் சிவப்பு நிறமும் காணப்படுகின்றன. ஆனால் இன்னும் சில தேசியக் கொடிகளில் மேல் பாகத்தில் சிவப்பு நிறமும் கீழ்ப் பாகத்தில் பச்சை நிறமும் சித்திரித்திருக்கிறது. மேற்சொன்ன இரண்டு விதக் கொடிகளில் எது உண்மையான தேசியக் கொடி என்பதைத் தெளிவுபடுத்தும்படி கோருகிறேன்.

- சு. துரைக்கண்ணு.

(இரண்டும் உண்மையான தேசீயக் கொடிதான். சாதாரணமாய் தேசீயக் கொடியில் சிவப்பு நிறம் மேலேயும் பச்சை நிறம் கீழேயும் இருப்பதுதான் வழக்கம். சிவப்பு நிறம் இந்து சமூகத்தையும், பச்சை நிறம் முஸ்லீம் சமூகத்தையும், வெள்ளை நிறம் மற்ற எல்லா சமூகங்களையும் குறிப்பிடுகின்றன. இந்தக் காலத்திலுள்ள ஹிந்து முஸ்லிம் மனவேற்றுமையை உத்தேசித்து முஸ்லிம் சகோதரர்கள் சிலர், 'எங்களைக் கீழே அமுக்கி விட்டார்களே' என்று கேட்கக்கூடும் என்பதை முன்னிட்டும், சிவப்புக்குப் பக்கத்தில் சிவப்பு அவ்வளவு நன்றாயிராது என்பதை உத்தேசித்தும் தமது சித்திரக்காரர் வர்ணங்களை மேல் கீழாக மாற்றி விட்டார். விஷயம் தெளிவாகி விட்டதென்று நம்புகிறேன்.

- ஆசிரியர்.

சங்கீதத்துக்கு யோகம்

''கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்கள் அதிகம் பாட வேண்டும்'' என்ற பல்லவியைச் சில சிநேகிதர்களுடன் நானும் வெகு நாளாகப் பாடிக் கொண்டு வந்திருக்கிறேன்.

தமிழில் பாடும் போது உச்சரிப்பு, அர்த்தம், சமய சந்தர்ப்பம் இதையெல்லாம் கவனித்துப் பாட வேண்டும். வேறு பாஷைப் பாட்டாயிருந்தால் இந்தக் கவலையே கிடையாது. எப்படி வேணுமானாலும் ஹதம் செய்யலாம்!

ஒரு பெரிய மனிதர் பெரிய மாளிகை கட்டி கிரகப்பிரவேசம் நடத்தினார். அதில் கச்சேரி செய்த வித்வானை ஹிந்துஸ்தானி பாடச் சொன்னார்கள்.


''இஸ் கர்கே ஆக் லக் கயி'' என்று அவர் அபூர்வ பிர்க்காக்களுடன் பாடிய போது கரகோஷம் பிரமாதமாய்க் கிளம்பிற்று. அந்த வரிக்கு அர்த்தம் மட்டும் தெரிந்திருந்தால் வித்வான்தான் பாடுவாரா? கேட்பவர்கள்தான் கரகோஷம் செய்திருப்பார்களா? லட்சம் ரூபாய் செலவழித்து வீடு கட்டி கிரகப் பிரவேசம் செய்யும் சமயத்தில்,

''இந்த வீட்டிலே தீப் பிடித்துக் கொண்டது''

என்று பாடினால், யாருக்குத்தான் அது சம்மதமாயிருக்கும்?

குடியிருப்பவர் : செட்டியார்வாள்! நிற்க இடம் இல்லாதபடி, இப்படி வீடு முழுவதும் ஒழுகுகிறதே! இதற்கு எப்போது விமோசனம்?

வீட்டுக்காரர் : நான் கண்டேனா, ஸ்வாமி! மழை எப்போது நிற்குமோ?



''கர்நாடகம்''



''என்ன, செம்மங்குடி ஸார்! கொஞ்சம் வாயைத் திறந்துதான் சொல்லுங்களேன்! ஸ்வாதித் திருநாள் கீர்த்தனைகளைப் பாடிப் பிரபலப்படுத்தியது போல் தமிழ்க் கீர்த்தனைகளை எப்போது பாடிப் பிரபலப் படுத்தப் போகிறீர்கள்?''



மன்மோகன்சிங்
நோ, பாரு... லோடெல்லாம் குறைச்சிட்டேன், சுறு சுறுப்பா எழுந்து ஓடி பார்க்கலாம்!
விவசாயி
கொர்ர்ர்... கொர்ர்ர்...
காலா காலத்தில முழிச்சிக்காமே இப்படி உதய— சூரியனைக் கோட்டை விட்டுட்டியே?
இந்தத் தாத்தாதான் நல்ல தாத்தா.. செல்லத் தாத்தா...
நரசிம்மராவ்
சோனியா மாமிதான் சமத்து... ஜெ அத்தைதான் சாக்லேட் இடுப்பா!



கல்கி



1991
ஆகஸ்ட் 18
மலர் : 50
இதழ் : 3
பிரஜோத்பத்தி
ஆவணி 2

பதுங்கும் புலிகளும் பாயும் புலிகளும்

தமிழக போலீஸும் மத்திய ஸி. பி. ஐ. நிறுவனமும் சமீப காலத்தில் இணைந்து செயலாற்றி, விடுதலைப் புலிகள் பதுங்கும் குகைகள் பலவற்றைப் பல ஊர்களில் கண்டுபிடித்து, ஆயுதங்களையும், ஆயுதம் தயாரிக்கும் இயந்திரங்களையும், இதர பல உபகரணங்களையும் கைப்பற்றியிருக்கிறார்கள். சில புலிகள் தற்கொலை செய்து கொண்டாலும் வேறு பல புலிகள் சிக்கியும் உள்ளனர். இதனால் தெரியவரும் விஷயங்கள் பல :

விடுதலைப் புலிகள் இங்கே அழுத்தமாகக் கால் ஊன்றிக் கொண்டால்தான் அங்கே தமிழீழத்துக்காக அவர்களால் வலுவாகப் போராட முடியும். இந்த வசதியை நாம் அவர்களுக்கு மறுத்து விட்டால், புலிகள் தங்கள் லட்சியத்தை அடைவது ரொம்ப ரொம்பக் கஷ்டமாகி விடும்.

இவ்வாறு புலிகள் இங்கே காலூன்ற அனுமதிப்பது ஆபத்தானது; அது விபரீத பின்விளைவுகளை உருவாக்கும் என்று நாட்டு நலனில் அக்கறை கொண்ட அறிஞர்களும் பத்திரிகைகளும் ஆரம்பத்திலிருந்தே எச்சரித்து வந்ததை அடுத்தடுத்து வந்த தமிழக அரசுகளும் மத்திய அரசுகளும் அலட்சியம் செய்து வந்துள்ளன.

தி. மு. க. அரசு மட்டுமின்றி, அதற்கு முந்தைய அ. தி. மு. க. அரசும், மத்தியில் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, வி. பி. சிங் ஆட்சிகளும் மனம் வைத்திருந்தால் விடுதலைப் புலிகள் இந்த அளவுக்கு இங்கே வேரூன்றாமல் தடுத்திருக்கலாம். இதற்கு மாறாக, விடுதலைப் புலிகளுக்கு மறைமுக ஆதரவு தந்து, இலங்கை அரசுக்கு ஒரு தர்மசங்கடத்தை உருவாக்குவதில் இவர்கள் அனைவருமே ஒவ்வொரு காலகட்டத்தில் ஆர்வம் காட்டி வந்திருக்கின்றனர். இதன் மூலம், இலங்கை அரசுக்கு ஒரு நெருக்கடியையோ, அச்சத்தையோ உருவாக்கினால், அந்த அரசு கீழிறங்கி வந்து, ஈழத் தமிழர் விஷயத்தில் நியாய உணர்வுடன் நடந்து கொள்ளும் என்று எதிர்பார்த்திருக்கின்றனர்.

ஆனால், 'ஒரு நல்ல காரியத்தைப் பின்பற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறையும் நல்லதாக இருக்க வேண்டும்' என்ற தேசத் தந்தையின் வாக்கை மறந்ததன் விளைவு, விபரீதங்களுக்கே அடிகோலியது!

தவறான அடிப்படையில் செய்து கொள்ளப்பட்ட ராஜீவ் ஜெயவர்த்தன ஒப்பந்தம், தோல்வி கண்டது. அமைதிப் படை என்ற பெயரில் சென்ற இந்திய ராணுவம், விடுதலைப் புலிகளுடன் நேரிடையாக மோதும்படியாயிற்று. கண் துடைப்பாக ஒரு தேர்தலை நடத்தி, வரதராஜ பெருமாளை முதல்வராக்க, அமைதிப் படை திரும்பியதுமே அவரும் தலைமறைவாகி ஓடிப் போக நேர்ந்தது. அவமானத்துக்கு மேல் அவமானமாக, விபரீதத்துக்கு மேல் விபரீதமாக, ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். வளர்த்த கடா மார்பிலே பாய்ந்த கொடுமையை உணர்ந்த பிறகுதான் கட்சி வேறுபாடின்றி இன்றுள்ள தலைவர்கள் எல்லோருக்குமே விடுதலைப் புலிகளுக்கு இடம்தந்தது தவறு என்ற ஞானோதயம் உண்டாகியிருக்கிறது.

இங்கே காவல் துறை முடுக்கி விடப்பட்டிருப்பது மட்டுமின்றி, மத்திய அரசின் ஸி.பி.ஐ.யும் கடலோரப் பாதுகாப்பும் சுறுசுறுப்படைந்திருக்கின்றன. கப்பல் படை கூட கடலோரப் பகுதிகளில் காவலிருக்கும் என்று சவான் கூறிச் சென்றிருக்கிறார். இவர்களுடைய விழிப்புணர்ச்சிக்குத் தரப்பட்ட விலை பயங்கரமானது என்றாலும், 'ஏதோ இப்போதாவது விழித்துக் கொண்டார்களே' என்று தமிழன் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறான்.

ஆனால் இதுவும் போதாது. விடுதலைப் புலிகளுக்கு, அவர்கள் இங்கே காலூன்ற இடமில்லை என்பதை நிதர்சனமாக்கும்போதே, அவர்கள் ஈழ அரசுடன் ஓர் உடன்பாட்டுக்கு வருவதுதான் நல்லது என்பது உணர்த்தப்பட வேண்டும். அதே போல் இந்திய அரசின் ஒத்துழைப்புக்குப் பிரதியாக, இலங்கை அரசு, ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதும் வற்புறுத்தப்பட வேண்டும். 'இது இலங்கையின் உள் விவகாரம்' என்று ஒதுங்குவது அர்த்தமற்றது. அங்கு இருப்பவர் நம்மவர்கள்.

'அமைதிப் பூங்கா', 'துப்பாக்கிக் கலாச்சாரம்' என்றெல்லாம் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. மத்திய அரசு ராஜதந்திரத்துடன் செயல்பட வேண்டும். இல்லையெனில் வட இலங்கையில் வெடிக்கும் குண்டுகளின் எதிரொலி அவ்வப்போது தமிழகத்திலும் கேட்டுக் கொண்டுதான் இருக்கும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

கல்கி ஸ்ரீராம் சிட்ஸ்

இணைந்து அளிக்கும் பரிசுப்போட்டி!

"கை கொடுத்த கடன் தொகை"

தனி நபர்களுக்குத்தான் பணமுடை ஏற்பட்டுக் கடன் வாங்குகிறார்கள் என்பதில்லை. வியாபாரமோ, தொழிலோ கூடக் கடன் பெறாமல் இன்று நடத்தப் படுவதில்லை. கடன் பெறுவதில் தவறில்லை, அதை எப்படி பயன் படுத்தி, தொழில் அல்லது வியாபாரத்தை எவ்வாறு விருத்தி செய்கிறோம்; கடனைத் தவணை களில் திருப்பித்தர என்ன முயற்சிகள் மேற்கொள்கிறோம் என்பதெல்லாம் தான் முக்கியம்.

நீங்கள் பெரிய, சிறிய தொழில் அதிபராகவோ, வர்த்தகராகவோ இருக்கலாம் அல்லது சராசரி மத்தியத்தரக் குடும்பத்தில் உள்ள வராகவும் இருக்கலாம். ஒரு நெருக்கடியில் கடன் வாங்கிய கால கட்டத்தை எண்ணிப் பாருங்கள். உங்களுக்குக் கடன் கொடுத்து உதவியது தனி நபரா, வங்கியா, கூட்டுறவு அமைப்பா, சீட்டு நிறுவனமா எது? அவர்கள் விதித்த நிபந்தனைகள் என்ன? கடன் பெற உங்களுடைய ஏதோ ஒரு விதமான சேமிப்பு உதவியதா? எப்படி? கடனைத் திருப்பித் தர எவ்வாறு புத்திசாலித்தனமாகத் திட்ட மிட்டீர்கள்? எப்படி முழு மூச்சுடன் பாடுபட்டு திட்டத்தை நிறைவேற்றி னீர்கள்? உங்கள் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அது எவ்வாறு அமைந்து முன்னேற்றத்துக்கு உதவியது?

கல்கியில் ஒரு பக்கத்துக்கு மேற்படாத அளவில் கட்டுரை எழுதுங்கள்:

உறையின் மேல் ''கை கொடுத்த கடன் தொகை'' என்று குறிப்பிட்டுக் கட்டுரைகளை அனுப்பவேண்டிய முகவரி: **ஆசிரியர், கல்கி, சென்னை 600 032.**

அனுப்பி வைக்கக் கடைசி தேதி: ஆகஸ்ட் 31, 1991.

பரிசு பெறும் கட்டுரைகளைத் தவிர மற்ற கட்டுரைகளையும்

தங்கள் விருப்பப்படி உபயோகித்துக் கொள்ள ஸ்ரீராம் சிட்ஸுக்கு பூரண உரிமை உண்டு. அவ்வாறு பயன்படுத்தப் பெறும் கட்டுரைக்குச் சன்மானம் உண்டு.

ஏற்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப இயலாது. கடிதப் போக்குவரத்து கிடையாது. கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.


முதல் பரிசு, இரண்டாம் பரிசு கட்டுரைகள் கல்கியில் பிரசுரமாகும்.

1-முதல் பரிசு:
ஒரு 165லி ரெப்ரிஜிரேட்டர்

2-இரண்டாம் பரிசுகள்:
'யூரோகிளின்' வாக்கும் கிளீனர்

4-மூன்றாம் பரிசுகள்:
பிலிப்ஸ் 2-இன்-1
(அல்லது ரொக்கம்)

50-ஆறுதல் பரிசுகள்:
ஸ்ரீபெட் கிப்ட் பேக்!



'ஆண்டு மலரிலிருந்து இன்னும் மீண்டு வரவில்லை...!'

O இந்த ஆண்டு கல்கிக்கு மட்டுமல்ல; என்னைப் போல் தொடர்ந்து கல்கியை ஐம்பது ஆண்டுகளாக வாசித்து வரும் வாசகர்களுக்கும் பொன் விழா ஆண்டுதான்.
சென்னை - 4, வெ. முத்துகிருஷ்ணன்.

O சுஜாதாவின் இனிய தொடர், பாலகுமாரன், அசோகமித்திரன், பிரபஞ்சன்.... பலரின் சிறு கதைத் தேன் துளிகள், தமிழன்பனின் கடும் கவிதை, உபயோகமாய்ப் பல கட்டுரைகள்... பொன் விழா மலர் ஒவ்வொரு அங்கமும் தங்கமாய் இருந்தது.
மதுரை, கே. வேல்சாமி.

O பக்கத்துக்குப் பக்கம் நிரம்பி வழிந்த சிரிப்புத் துணுக்குகள் இனைறபடுத்தன!
திருவெண்ணெய்நல்லூர், சுந்தர வெங்கடேசன்.

O கிராமப்புறப் பகுதிகளுக்குப் பணிமாற்றம் கிடைத்தாலே ஆபத்து வந்து விட்டது போல் அச்சமுறுகிற அவலமான நடைமுறைக்கு மாறாக, தாமே வலியச் சென்று, காட்டு கிராமங்களில் மருத்துவப் பணிசெய்யும் டாக்டர். சுப்ரமணியன் பற்றிய கட்டுரை கற்கண்டாய் இனித்தது. யாமிருக்க பயமேன் என்று சுப்ரமண்ய கடவுளே அங்கு குடிகொண்டுள்ளது போலிருக்கிறது.
மகிழஞ்சேரி, எஸ். கே. ரவிச்சந்திரன்.

O ஜெ.வுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்கள் அவரைப் பற்றிக் கூறியிருந்தது கண்ணியமாகவும், சுவையாகவும் இருந்தது.
திருவெண்ணெய்நல்லூர், எஸ். எஸ். பூங்கதிர்.

O பொன் விழா ஆண்டு மலரின் அட்டைப் படமே அசத்தலாக இருந்தது. கல்கியின் வயதுடன் அதன் மெருகும் ஏறிக் கொண்டே போகிறது என்பதற்கு இது ஒரு நல்ல முன்னுதாரணம்.
தஞ்சாவூர் - 6, மா. வித்யப்ரியா.

O கடந்த பதினாறு வாரங்களாக நல்ல நல்ல கருத்துக்களைச் சொல்லி வந்த கவி.சிவம் அவர்களுக்குப் பாராட்டுக்கள்! நிறைவாக, 'திருவடியின் சிறப்பு இப்போது புரிந்திருக்குமே!' என்று அவர் சொல்லியிருப்பதிலிருந்து 'எல்லாமும்' புரிந்து கொண்டேன்! (ஹிஹி)
நந்தியநல்லூர், க. இளங்கோ.

O பதினாறு வாரங்களாக நல்லவண்ணம் வாழ வழிகாட்டிய கவி.சிவம் அவர்களின் கட்டுரைத் தொடர் இன்று நிறைவடைகிறது என்பதையறிய மனம் வருந்துகிறேன். இன்னும் சொல்ல வேண்டியது எவ்வளவோ இருக்க இதற்குள் ஏன் முடித்து விட்டார் என்று தெரியவில்லை. திருவடியின் சிறப்பை மாலை மூலம் விளக்கியதை எப்படிப் பாராட்டுவது என அறியாமல் திகைக்கிறேன். சிந்தனையைத் தூண்டும் சிறந்த கட்டுரைகளை அளித்த ஆசிரியருக்கு நன்றி.
சென்னை - 19, ஆர். வி. சுப்ரமணியன்.

O 'சமீபத்தில் வெளியான எனது படம் தோல்வியிலும் சூப்பர் தோல்வியாகி விட்டது! இருப்பினும் எனக்கு வருத்தமில்லை' - டைரக்டர் ஸ்ரீதரின் இந்த வரிகள் 'வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு' என்ற பொன் மொழியை எனக்கு நினைவூட்டின!
கும்பகோணம் - 1, கே. மதுரநிதா.

O ''டெலிவிஷனால் பத்திரிகைகள் பாதிக்கப் படுகின்றனவா?'' என்ற புதுமையான தலைப்பின் கீழ் மாலன், எஸ். வி. ரமணன், ஞாநி ஆகிய மூவரும் நிகழ்த்திய உரையாடலில் அவ் விஷயம் அக்குவேறு, ஆணிவேறாகப் பிய்த்து, சரியான படி ஆராயப்பட்டிருந்தது. கல்கியின் பொன் விழா ஆண்டு மலருக்கு இக் கட்டுரை தனிச் சிறப்பையே ஏற்படுத்தி விட்டது.
கும்பகோணம், ஆமருவியப்பன்.

O கல்கியின் முதல் சந்தாதார், ''விநாயகம்'' (அந்தக் கால அரசியல் - இலக்கிய பிரமுகர்) தாமாகவே வந்து முதல் சந்தாவை வழங்கியது, கல்கிக்கு விநாயகரே ஆசி வழங்கியது போல் என்று கல்கி அவர்கள் குறிப்பிட்டு எழுதியது ஞாபகம் வருகிறது. விநாயகரின் திருவருளால் 'கல்கி' என்றென்றும் வற்றாத ஜீவ நதியாக, வாசகர் மத்தியில் ஓடிக் கொண்டிருக்கும் - நூற்றாண்டையும் கொண்டாடும்...
மதுரை - 6, எம். பி. துரைஸ்வாமி.

O தங்களின் ஆண்டு மலரிலிருந்து இன்னும் மீண்டு வர முடியவில்லை. 'ஒன்றுமில்லாதவர்கள்'லேயே நின்று கொண்டிருக்கிறேன். இன்னும் சி ந் தி த் து க் கொண்டிருக்கிறேன். 'ஆகஸ்டு 15' நானும் என் தம்பியும் கடற்கரை மணலில் நிலவை ரசித்தபடி அந்தக் கடல் காற்றுடன் கைகோத்து ஆடிய போது எங்களுக்கும் கிடைத்தது காவலரின் அர்ச்சனை. இந்தக் கதை அந்த நினைவுகளைக் கிளறி விட்டது. 'எல்லைகளில்லா உலகத்தில்' காதல் தேசத்தில் மட்டுமே மனக்கண்ணால் பார்க்கும் மனிதர் கூட்டம் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. படித்து முடித்தபின் விழிகளின் ஓரத்தில் சந்தோஷ ஈரம். அப்புறம் 'புலிராஜா' ஆண்டு மலரின் அரியாசன அந்தஸ்து இந்தக் கதைக்குத்தான். அடுத்து வரும் இதழ்களுக்குக் காத்திருக்கிறேன்.
சென்னை - 50, சி. இராம்மோகன்.

O பரிசு பெற்ற கதையைப் படித்து முடித்ததும் பிரமித்துப் போனேன். என்ன சார் எழுத்தா அது? சாதாரண வார்த்தைகள்தான். ஆனால் அவற்றைத் தேர்ந்தெடுத்தவிதம் அற்புதம். அவை வெளிப்படையாகச் சொன்னதை விட மௌனமாய்ச் சொன்னவைதான் அதிகம். இப்படிக் கூட எழுத முடியுமா என்று என்னுள் மலைப்பு.
தீவாம்பாள்புரம், உத்தமசோழன்.

போதும் இந்தத் தண்டனை!

விசுவநாதனும், அவன் அம்மாவும் ஹீரோ ஹோண்டாவில் மரவனேரி வழியாகப் போய் அம்மாபேட்டை பிள்ளையார் கோயில் சந்தில் திரும்பி, கீதா வீட்டுக் கதவைத் தட்டினார்கள்... கீதாவைப் பெண் பார்க்க.

சப்தம் கேட்டு - விஸ்வநாதன் - இருபத்தொன்பது, அஸ்வினி நட்சத்திரம், கோடு மாதிரி மீசை, பிரபல கம்பெனி வேலை - மாப்பிள்ளை என்ற வார்த்தை போலவே இனிமைத் தோற்றம்... மெல்லிய புன்சிரிப்பு...

எழுந்து வந்து - அம்மா. ஐம்பத்திரண்டு வயதுக்குரிய சற்றே தடித்த உடல் வாகு. ப்ளாக்கிஷ், ஒயிட் தலைமுடி. ஏகப்பட்ட பொறுப்புணர்ச்சி - முகத்திலோ - பாசமும், அன்பும் தெரியும் தாய்க் களை....

கதவைத் திறந்தது - கீதாவேதான்! அவளையும் வர்ணித்து விடலாம். கடைசிச் சொட்டுச் சாயமும் போன ஒரு புடைவை! கலைந்த ஷாம்புக் குளியல் தலை. பவுடர் கூட போடாத முகம், கையில் ஏதோ ஒரு வாரப் பத்திரிகை. வெரி காஷுவல். ஞாயிற்றுக் கிழமை நாலு மணிக்கே உரியதொரு சோம்பேறித்தனம்.

''வாங்கோ... யாரைப் பார்க்கணும்?'' என்றாள் கீதா.

''அப்பாவைப் பார்க்கலாம்னு....'' என்று தயங்கும்போதே கீதாவின் அம்மா வந்து விட்டாள். உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்தார்கள். தண்ணீர் வைத்தார்கள்.

''அவர் இல்லை... என்ன விஷயம் சொல்லுங்கோ...''

''மெட்ராஸ்ல இருக்கற உங்க உறவுக்காரா மூலமா உங்க பெண்ணோட ஜாதகம் வந்தது. பொருத்தம் எல்லாம் பார்த்தாச்சு. பொண்ணை நேர்ல பார்த்துட்டுப் போலாம்னு வந்திருக்கோம்.''

''இப்படி திடீர்னு வந்திருக்கேளே... ஆச்சரியமா இருக்கு. இந்தச் சமயம் பார்த்து இந்த மனுஷர் வேற எங்கேயோ போய்ட்டாரே....!''

''பரவாயில்லை. இவனுக்கு முன் கூட்டியே சொல்லிட்டு, கும்பலா போய், டிபன் சாப்பிடறது. பாட்டு பாடறது, நமஸ்காரம் பண்றது. இந்த மாதிரி ஃபார்மாலிட்டிஸ் எல்லாம் பிடிக்காது. அதனால் ரொம்ப கேஷுவலா ஒரு ப்ரெண்டு ஆத்துக்குப் போறா மாதிரி வந்திருக்கோம்...'' என்றாள் விஸ்வநாதனின் அம்மா.

விஸ்வநாதனின் கண்கள் உள்ளே போய் விட்ட கீதாவைத் தேடின. அப்போதே மனசுக்குள் சந்தோஷ ஆச்சர்யம். இவளா எனக்கு மனைவியாக வரப் போகிறவள்? என் கனவுத் தேவதையையே கைப்பிடிக்கப் போகிறேனா?

''உங்க பூர்வீகம் எல்லாம் எங்கே?'' என்று கேட்டாள் விஸ்வநாதனின் அம்மா.

''நாங்கள்ளாம் மதுரை பக்கம். சேலத்தில் செட்டிலாகிப் பதினெட்டு வருஷமாச்சு....''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, உள்ளே போன கீதா பிஸ்கெட் கம் காப்பியுடன் வந்தாள்.

''இவதான் என் பொண்ணு கீதா. எல். ஐ. சி. யில் வொர்க் பண்றா...'' அறிமுகப் படலம் ஆயிற்று. விஸ்வநாதனுக்குள் ஒரு பொறி ஆரம்பமாகியது. இவளே என் மனைவி....

''உட்காரும்மா'' என்று அம்மா சொன்ன உடன் விஸ்வநாதனுக்கு எதிரில் இருந்த சேரில் உட்கார்ந்தாள்.

கீதாவே பேச்சையும் ஆரம்பித்தாள்.

''நீங்க எந்த ஸ்கூல்ல இருக்கீங்க?''

''குமாரபாளையத்தில் இருக்கேன்...''

''தெனம் அவ்வளோ தூரம் போய்ட்டு வர்றீங்களா...?'' பொதுவாகக் கொஞ்ச நேரம் பேசினார்கள். தயக்கமின்றிப் பேசினார்கள்.

கீதா பேசியவிதமும், இயல்பான பழகுதலும் விஸ்வநாதனை வெகுவாகக் கவர்ந்து

எஸ். லக்ஷ்மிகாந்தன்

விட்டன.

இவள்தான் மனைவி. நான் இத்தனை நாள் தேடிய பொக்கிஷம் இவளேதான், என் வாழ்க்கையில் ஒரு பகுதியாக வேண்டும். இந்தத் தங்கமீன் எனக்குக் கிடைத்தால் அது என் மகத்தான அதிர்ஷ்டம்தான்...

கிடைப்பாள். நிச்சயம் கிடைக்கப் போகிறாள்.

விஸ்வநாதன் பலமான நம்பிக்கையுடன் பேசிக் கொண்டிருந்த போதுதான் அந்தக் கேள்வியைக் கேட்டாள் கீதா.

''நீங்க ரெகுலரா எத்தனை மணிக்குக் கிளம்புவேள்? எந்த பஸ்ஸில்?''

''எட்டு பத்து. ஷண்முகம் டிரான்ஸ் போர்ட்ஸ்...''

''ரெண்டு வருஷமா அதிலேயே போய்ட்டு இருக்கீங்களா?''

''ஆமாம்... ஏன்?''

கீதா விஸ்வநாதனை நிமிர்ந்து பார்த்தாள். மனத்தை ஊடுருவிச் செல்லும் வெப்பப் பார்வை.



கொஞ்சம் தயக்கத்துடன் நிதானமாகக் கேட்டாள்.

''உங்களுக்குச் சுப்ரஜாவைத் தெரியுமா?''

விஸ்வநாதன் இலேசான அதிர்ச்சியுடன் கீதாவைப் பார்த்தான்.

அர்த்தங்கள் பொதிந்த அதே அம்புப் பார்வை.

சுப்ரஜா அவள் ஒரு பொன் கனவு. மகத்தான அற்புதக் கவிதை. அது கலைந்து போனது என்னாலதான். அந்தக் கொடுமையைச் செய்தவனும் நானேதான்.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு, ஒரு பனிச் தினத்தில் தற்செயலான அறிமுகச் சந்திப்பு.

பார்த்ததும் மறக்கவே முடியாத அதிரடி அழகு. வட்ட முகத்தின் புன்சிரிப்பைக் கொண்டே வாழ்க்கையை ஓட்டி விடலாம்.

அழகு மாதிரியே அறிவும் புத்திசாலித்தனமும். அதிகமாகவே...

பஸ் அறிமுகம். துளிர் செடி போல சந்தோஷமாய்ப் பு த் து ண ர் வோ டு முளைத்து வளர்ந்தது.

ஒருவரையொருவர் புரிந்து கொள்ள நிறையப் பேசினோம்.

''இவ்வளவு சிறுகதைகள் படிக்க நீங்களே, ரிஸர்ச் ஏதாவது செய்றீங்களா?'' என்பாள் - இலக்கிய ஆர்வம்.

''அப்பா செளக்யமா? தம்பிக்கு உடம்பு எப்படி உள்ளது?'' குடும்பப் பாசப் பொறுப்பு. எனக்கு அவளைப் பிடித்திருந்தது. அவளுக்கும் என்னைப் பிடித்துத்தான் இருந்தது. பிரியமாய் நேசமாய் இருந்தோம்.

பழக்கம் வளர்ந்தது. மனத்தின் நெருக்கமும் தொடர்ந்தது. அவளில்லாமல் என் வாழ்க்கையை நடத்தவே முடியாது எனத் தோன்றியது. அதுதான் காதலா? என்று தெரியவில்லை.

இருவீட்டாருக்கும் தெரிந்தே பழகினோம். அடிக்கடி ஒருவர் வீட்டிற்கு மற்றொருவர் செல்வோம்.

எம்.காம் முடித்தவுடன் அவளுக்கும் பாங்கில் வேலை கிடைத்தது. மனசுப் பொருத்தம் இருந்தது. பிடித்திருந்தது. காதல் என்று கூடச் சொல்லலாம்.

நாங்களே பெற்றோர்கள் மூலம் கல்யாண ஏற்பாடுகள் பேச ஆரம்பிக்கலாம் என முடிவு செய்தோம்.

வீட்டில் எடுத்துச் சொல்லிக் கல்யா

ணம் பேசச் செய்தோம்.

ஜாதகப் பரிமாற்றம் செய்யப்படும் நேரத்தில்தான் எனக்குப் புத்தி மாறிப் போனது.

பல சராசரி ஆண்களுக்கு இருக்கும் சந்தேகக் குணம் எனக்கும் இருந்தது.

சுப்ரஜாவின் ஆபீசில் வேலை செய்யும் கௌதம் என்பவனைப் பற்றி அவள் அடிக்கடி சொன்னாள். அவனுடன் பழகினாள்.

என் கெட்ட புத்தி வேறுவிதமாய்த் தப்புக் கணக்குப் போட்டது. சுப்ரஜா என்னை விட்டு விலகிப் போகிறாள். கௌதமுக்கு என்னை விடப் பெரிய வேலை. சில விஷயங்களில் என்னை விட அதிக தகுதியே அவனுக்கு. எனவே அவனை விரும்புகிறாள் என நினைத்துக் கொண்டேன்.

சுப்ரஜாவுக்கும் கௌதமுக்கும் இருந்தது, ஒரு நல்ல ப்ரெண்ட்ஷிப் மட்டும்தான் என அப்புறமாய்த்தான் தெரிந்தது.

அதற்குள் நான் ஆட்டத்தைக் கலைத்து விட்டிருந்தேன். ஏக ரகளை செய்து, சுப்ரஜாவைக் கதறி அழவைத்து அவள் சொன்ன எந்த விளக்கத்தையும் கேட்காமல், பேச வந்த பெரியவர்களையும் மதிக்காமல், அத்தனைப் பிடிவாதமாக, குரூரமாக, கொடூரமாக இன்னும் மோசமாக சுப்ரஜாவை மௌன சித்திரவதைக்குள்ளாக்கினேன்.

'சரிதான் போடி' என்று அவளைப் பிரிந்தேன். தவிர்த்தேன். வந்தவனை மிரட்டினேன். மிரட்டினேன்.

கடைசியில் அவள் அமைதியாக யாருடனோ எப்படியோ வாழ்க்கையை அமைத்துக் கொண்டாள்.

என் கோணல் புத்தியால் சுப்ரஜா என்னும் பொன் கனலை, மகத்தான அற்புதக் கவிதையைக் கலைத்து விட்டேன்.

"உங்களுக்கு சுப்ரஜாவைத் தெரியுமா?"

சீதா மறுபடியும் கேட்டாள்.

இருவரின் அம்மாக்களும் சமையல் அறையில் இருக்க இவர்கள் இருவர் மட்டுமே.

விஸ்வநாதன் குழம்பினான். 'தெரியும் எனச் சொல்வதா, தெரியாது எனச் சொல்வதா? இவளுக்கு ஒருவேளை சுப்ரஜாவைத் தெரியுமோ? நான் அவளுக்கு இழைத்த துரோகமெல்லாம் இவளுக்குத் தெரிந்திருக்குமோ? இல்லை என்று சொன்னால் இந்த சீதா என்னைச் சத்தியமாக ஏற்க மாட்டாள். எழுந்து வெளியே போடா என்று கூடச் சொல்லலாம். இந்த சீதாவையும் இழப்பதா? என்ன சொல்வது?'

கடைசியில் விஸ்வநாதன் ''தெரியும்'' என்றான் தலையைக் குனிந்தபடி.

சீதா நிமிர்ந்து நோக்கினாள்.



''மிஸ்டர் விஸ்வநாதன் சுப்ரஜாவும், நானும் கொஞ்ச நாள் ஒண்ணா திருச்செங்கோடுல வொர்க் பண்ணினோம். அவளைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். அப்போ நீங்கதான் அந்த....''

''ஆமாம். நானேதான்.''

விஸ்வநாதனுக்குக் சீதாவின் கேள்வி புரிந்து விட்டது. எல்லாம் தெரிந்துதான் கேட்கிறாள். போச்சு. இந்த சீதாவும் அவ்வளவுதான்... கட்டாயமாய்க் கல்யாணத்திற்குச் சம்மதிக்க மாட்டார்கள்...

சீதாவின் முகபாவம் மாறிக் கொண்டே இருந்தது. புன்னகைக் கீற்றுகள் மறைந்து போயின.

''ஏன் அப்படிச் செய்தீர்கள்? இப்படி அநியாயமாய்...?''

''வேண்டாம்... ஸ்டாப் இட் ஜோ. ஏதாவது சொல்லி என்னை இன்னும் வேதனைப்படுத்தாதே. சுப்ரஜாவுக்கு நான் செய்தது தப்புதான், என் குற்றம்தான். ஏற்கெனவே நான் செய்த அந்தத் தப்புக்கு இன்னும் ஃபீல் பண்ணிண்டுதான் இருக்கேன். சுப்ரஜாவைப் பார்த்து மன்னிப்புக் கேட்கணும் போல இருக்கு... என் விதி என் தலையெழுத்து என் சந்தேகப் புத்தியால் சகலமும் மாறிப் போச்சு. என் தப்புக்கு மனசால நானா தெனம் தெனம் வேதனைப்படறேன்...

''சுப்ரஜாவுக்குத் துரோகம் பண்ணினதுக்கு இதோ இப்பக்கூட ஒரு தண்டனை கிடைக்கிறது. நீ நிச்சயமா என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்க மாட்டாய். இதுவே கூட எனக்கு இழப்புத் தான்.''

ஜோ பேசாமல் ஒரு நிமிடம் நின்றிருந்தாள்.

''சரி ஜோ... நான் கிளம்பட்டுமா? உன்னைச் சந்திச்சதில் எனக்குச் சந்தோஷம், வருத்தம் இரண்டுமே உண்டு. என் வாழ்த்துக்கள்...''

விஸ்வநாதன் முகம் வாடிப் போயிருந்தது. நெஞ்சு முழுக்க ஏதோ வேதனை படர்ந்து வலித்தது.

தலைகுனிந்தபடி எழுந்து நின்று, அம்மாவைக் கூப்பிட்டு மௌனமாய் அவர்களிடம் விடைபெற்றுக் கிளம்பினான்.

ஹாலைக் கடக்கும் போது, திரும்பி ஒருமுறை ஜோவைப் பார்க்க யத்தனித்தான். அவளைக் காணோம்.

வாசலுக்குச் சென்று தன் சிவப்பு ஹீரோ ஹோண்டாவைத் திருப்பி, ஸ்டார்ட் செய்யும் போது ஜோ வெளியே வந்தாள்.

''ஒரு நிமிடம் உள்ளே வருகிறீர்களா?''

ஆச்சர்யக் குறிகளுடன் விசுவநாதனும் அம்மாவும் திரும்பி வந்தார்கள்.

''என்ன ஆச்சு? என்ன விஷயம்?'' என்றான் விசுவநாதன்.

ஜோ உறுதியான பார்வையுடன் திரும்பினாள்.

''எல்லா மனிதர்களுமே எத்தனையோ தவறுகளைத் தினம் தினம் செய்தவண்ணம் இருக்கிறார்கள். ஆனாலும் தான் செய்த தவறைத் தவறு என ஒப்புக் கொள்பவர் கொஞ்சம்தான். அதற்கு நிறையத் தைரியமும் பெருந்தன்மையும் வேணும்.

''நீங்க சுப்ரஜாவுக்குச் செய்தது துரோகம்தான், நியாயமில்லைதான்! ஆனால் முன்பின் தெரியாத, பெண் பார்க்க வந்த இடத்தில் கூட அதற்கென வருத்தப்பட்டு, மன்னிப்பு கேட்டது உங்களோட போலித்தனமில்லாத உண்மை மனசைக் காட்டுகிறது. செய்த தப்புக்கு மனசார ஃபீல் பண்றதே கூட ஒரு தண்டனை மாதிரிதான். உங்களுக்கு இது போதும்.... அந்தப் பழைய குற்ற உணர்வுகள் நமக்குள் வராம அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டா சந்தோஷமாய் நாம் வாழலாம் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. இனி உங்களுக்குச் சம்மதம்னா எனக்கும் நம் கல்யாணத்திற்குச் சம்மதமே.''

''நிஜமாகவேவா?''

நம்ப முடியாமல் பொம்மை போல் விஸ்வநாதன் நின்றிருந்தான்.

''சத்தியமாகத்தான்.''

''சொல்லப் போனா உன்னைக் கட்டிக்கிறதே கூட ஒரு தண்டனை மாதிரிதான்'' என்றான் கிண்டலாய்.

''என்ன சொன்னீங்க?'' என்றபடி பொய்க் கோபத்துடன் கையை ஓங்கினாள் ஜோ.

''அதுக்குள்ளே அ வ ச ர ப் ப ட ா தேம்மா!'' எ ன் ற ா ள் விஸ்வநாதனின் அம்மா.

'யோ'



பிதர்களுக்கு சிராத்தம் ஏன்? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

—ஆதாரம் வைகறை 1991-92



புலிகளுக்குப் பயந்து...



பத்திரிகைகளில் பெரும் பங்குச் செய்திகளை விடுதலைப் புலிகளே இப்போது அடைத்துக் கொள்கின்றனர்.

டி.வி., ரேடியோ இவற்றிலும் புலிகள் பற்றிய செய்திகளும் அவர்களைப் பிடிக்க அதிகாரிகள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும் ஒலிபரப்பானவண்ணமிருக்கின்றன.

யாருக்காவது வீட்டை வாடகைக்கு விட வேண்டுமானால் வீட்டுச் சொந்தக்காரர்கள் பயப்படுகிறார்கள்.

'புலி சம்பந்தப்பட்ட ஆட்களாயிருக்குமோ' என்ற அச்சத்தில், மிகவும் தெரிந்தவர்களுக்குத்தான் வாடகைக்கு விடுவது, இல்லாவிட்டால் பூட்டியே கிடக்கட்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள்.

நான் குரோம்பேட்டையில் உள்ள என் வீடு ஒன்றை, இப்படித்தான் புலிகளுக்குப் பயந்து பூட்டியே வைத்திருந்தேன். இந்தச் சமயத்தில் என் மாமா பிள்ளை தனிக் குடித்தனம் போக ஆசைப்பட்டான். அவன் வந்து வீட்டைக் கேட்டான். வாடகைக்குத்தான்.

என் சொந்த மாமா பிள்ளையாயிருந்தாலும் கூட அவனையும் சில கேள்விகள் கேட்டேன். நேரடியாகக் கேட்காமல் மறைமுகமாகக் கேட்டேன்.

''காட்டிலுள்ள சில மிருகங்களின் பெயரைச் சொல்லு,'' என்றேன்.

என் மாமா பிள்ளை மகா கெட்டிக்காரன். ''சிங்கம், கரடி, மான், ஓநாய், யானை...'' இப்படிச் சொன்னானே தவிர 'புலி' என்ற பெயரைச் சொல்லவில்லை.

''சரி, இவனால் நம் நாட்டுக்கு அபாயமில்லை'' என்று தீர்மானித்துக் கொண்டாலும், மேலும் துருவித் துருவிச் சில கேள்விகள் கேட்டேன்.

''அறுசுவைகள் என்னென்ன?''

''காரம், உப்பு, இனிப்பு, துவர்ப்பு, கசப்பு'' என்று ஐந்து சுவைகளை மட்டும் சொன்னான். 'புளிப்பு' என்ற வார்த்தையில் புலி ஓசை கிட்டத்தட்ட வருவதால் அதை அவன் சொல்லவில்லை.

அப்புறம் இன்னொரு கேள்வி கேட்டேன்: ''கணிதமேதை ராமானுஜத்தை

கணக்கில் என்னவென்று கூறுவார்கள்?''

''கணக்கில் கரடி என்பார்கள்'' என்றான்.

அவன் மட்டும் 'கணக்கில் புலி' என்று சொல்லியிருந்தால் நிச்சயம் வீட்டை அவனுக்கு விட்டிருக்க மாட்டேன்.

அப்புறம் அவன் கழுத்தில் ஏதோ வெள்ளித் தாயத்து மாதிரி கட்டியிருந்தான். யாரோ சினேகிதனுடன் சாமியார் ஒருத்தரைப் பார்க்கப் போன போது அவர் மாட்டி விட்டாராம். அதைக் கழற்றச் சொன்னேன்.

''கழற்றக் கூடாது என்று சாமியார் சொல்லியிருக்கிறார்'' என்றான்.

''அப்படியானால் வீடு கிடையாது'' என்றதும் கழற்றித் தந்தான்.

தாயத்தைத் திறந்து உள்ளே ஏதாவது ஸயனைட் போன்ற பொடி இருக்கிறதா என்று பார்த்தேன். கறுப்பாக ஏதோ உதிர்ந்தது.

''அரக்குப் பொடி,'' என்றான். நான் நம்பவில்லை.

என் மனைவி அதற்குள் வந்து, ''நீங்கள் வேணும்னா கொஞ்சம் நாக்கில் வைத்துப் பாருங்களேன்'' என்றாள். என் மீது எவ்வளவு பிரியம் பாருங்கள்!

நான் பாரன்ஸிக் டிபார்ட்மெண்ட்டுக்கு அந்தத் தாயத்துப் பொடியை அனுப்பி வைத்தேன்.

ஒரு வாரத்தில் முடிவு தெரிந்தது. அது வெறும் 'அரக்குப் பொடிதான் என்று எழுத்து மூலம் அவர்கள் உறுதி செய்த பின் மாமா பிள்ளைக்கு வீட்டை வாடகைக்கு விட்டேன்.

அப்படியும் எனக்குச் சந்தேகம்தான். மாமா பிள்ளை நல்லவனாயிருக்கலாம். அவன் பெண்டாட்டி எப்படியோ? நமது பிரதமரைக் கொன்ற பாவி கூட ஒரு பெண் பிள்ளைதானே!

ஆகவே அவளுடைய நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டுமென்று மனைவியிடம் சொன்னேன்.

மனைவி திடீர் திடீரென்று குரோம்பேட்டையிலிருந்த அந்த வீட்டுக்குப் போய் வந்தாள்.

மாமா பிள்ளை ஆபீசுக்குப் புறப்பட்டுச் சென்றதும் அவன் மனைவி ஏதோ தையல் வகுப்புக்குப் போகிறாள் என்று தகவல் தெரிந்தது.

எனக்குத் திக்கென்றாகி விட்டது.

''பைத்தியக்காரி! அது தையல் வகுப்புத்தானா? சதிகாரப் புலிகளின் கொலைகாரக் கூடாரமா? தையல் மிஷின் போர்வையில் என்ன சதி நடக்கிறதோ?' என்று திட்டி விட்டு நானே ஒரு சட்டைத் துணியை எடுத்துக் கொண்டு, தைத்துக் கொடுக்கச் சொல்லலாம் என்று குரோம்பேட்டையில் தையல் வகுப்புக்குப் போனேன்.

ஒரு கிழவி மட்டும் தைத்துக் கொண்டிருந்தாள். ''ஏன் பாட்டி, தனியாக இந்த வீட்டில் தையல் வகுப்பு நடத்த நீங்களே? பயமாயில்லையா?'' என்றேன்.

அந்தக் கிழவி என்னை உற்று உற்றுப் பார்த்தாள். ''எங்கே, மூக்குக் கண்ணாடியைக் கழற்று,'' என்றாள். நான் கிழவியின் மூக்குக் கண்ணாடியைக் கழற்றினேன்.

அவள், ''சாமர்த்தியசாலிதான்! என்னுதை ஏன் கழற்றுகிறே? உன்னுதைக் கழற்று,'' என்றாள்.

கழற்றினேன். உற்றுப் பார்த்து விட்டு, ''சரி சரி மூக்குக் கண்ணாடியை அணிந்து கொள்'' என்றாள்.

பிறகு, ''உன் பேரென்ன?'' என்றாள்.

''எஸ். ராஜன்'' என்றேன்.

அவ்வளவுதான். கபால் என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கீழே தள்ளி, அருகிலிருந்த கயிறு கொண்டு இறுக்கிக் கட்டி விட்டாள்.

''அடிப் பாவிக் கிழவி! உன்னை நான் என்ன செய்தேன். ஏன் கட்டிப் போட்டுட்டே?'' என்று கத்தினேன்.

''துரோகி! கொலைகாரா! என்னை ஏமாற்ற முடியாது, தெரிஞ்சுக்கோ. எஸ். ராஜன்னா ஏமாந்துடுவேனா? நீ சிவராஜன் தானே?'' என்றாள்.

நல்லவேளையாக அதற்குள் தையல் கற்றுக் கொள்ள என் மாமா பிள்ளையின் பெண்சாதி அங்கு வந்தாள்.

அவளிடம் சொல்லி அழுத பிறகு கிழவி என்னை அவிழ்த்து விட்டாள்.

கயிறு இறுகிய பகுதிகளில் விண்விண் என்று தெறிக்க, நொண்டியடித்துக் கொண்டு ஒருவழியாக வீடு வந்து சேர்ந்தேன்.

''என்ன ஆச்சு?'' என்று என் பரிதாப நிலையைப் பார்த்து விட்டுக் கேட்டாள் என் மனைவி.

நடந்ததைச் சொன்னேன்.

''ஹூம் உங்க மாமா பிள்ளையின் பெண்சாதி சமயம் பார்த்து வந்து குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுக்கணுமா? பத்து லட்சம் நஷ்டம்! என் பங்குக்கு ஐந்து லட்சமாவது கிடைத்திருக்கும்'' என்றாள்!

விஷ்ராம்

கம்ப்யூட்டர் கிராமம்



3

''மனோஜ் நீங்க இந்த வேலையை விடறதா இருந்தாலும் சரி - நான் என் ஹஸ்பண்டுகிட்டச் சொல்லி வேற வேலை வாங்கித் தரேன்'' என்றாள். மாமியாராகப் போகிறவளை இப்போதுதான் உன்னிப்பாகப் பார்த்தான். அப்படியே ப்ரமிளா. இன்னும் பதினெட்டு வருஷம் கழித்துப் பிரமிளா இந்த மாதிரித்தான் இருக்கப் போகிறாள் என்பது இப்போதே பகீர் என்றது. என்ன ஒரு முட்டாள்தனம் பண்ணி விட்டேன்?! இதைவிட அருமையாக யாராலும் தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ள முடியுமா? என்னதான் ப்ரமிளாவின் இளமையான இனிய முகத்தைக் கொண்டு வந்தாலும் தாயின் முகம் குறுக்கிட்டது. குரலும் இந்த மாதிரித்தான் இருக்கிறது பெண்ணுக்கு. அதட்டலாக உலகத்தையே சொந்தமாக்கிக் கொண்டு! இவள் மகளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வள்ளிக்குப்பத்தில குடித்தனம் வைப்பதாவது!

''நீங்க போங்கம்மா பார்த்துக்கறேன்...''

''ப்ரூஃப்?''

''நாளைக்குத் தரேனே.''

''அதெல்லாம் முடியாது! ப்ரஸ்ஸுக்குப் போகணும். இப்பவே உக்காந்து கரெக்ட் பண்ணிக் கொடுத்துருங்க. உங்க பேரை மனோஜ்னு இன்னும் ஒரு 'ஓ' சேர்த்துக்கிட்டா ந்யுமராலஜிக்குச் சரிப்பட்டு வரும்னு சொன்னாங்க.''

''அதெல்லாம் அப்புறம் மாத்திக்கறேன். இப்ப மாத்தினா கல்யாணம் செல்லுபடியாகாது. திஸ் இஸ் ஷண்பேகர் என்கூட கிராமத்துக்கு வரப் போறவன்.''

''ஷண்பேகர்னா மராட்டியா?''

''ஆமாம்.''

ஷண்பேகரை உன்னிப்பாகப் பார்த்தாள். அவன் தன் கண்ணாடியை எடுத்துத் துடைத்துக் கொள்ளும் போது அம்மணமாக இருந்தது போலத் தோன்றியது.

''மனோஜைப் பத்தி எல்லா விவரமும் தெரியும் எனக்கு.''

''சிகரெட் குடிப்பாரா?''

''குடிப்பான்'' என்றான்.

''இந்தக் காலத்தில் எல்லாரும்தான் குடிக்கிறார்கள். ப்ரமிளாவின் அப்பா சுருட்டு கூட குடிக்கிறார். நான்வெஜ்?''

''அதும் உண்டு.''

''வெரி குட்!'' என்றாள். ''அப்போதான் ப்ரொட்டின் சக்தி அதிகமாக இருக்கும். ப்ரமிளாவுக்குச் சின்ன வயசிலிருந்தே முட்டை கொடுத்துப் பழக்கியிருக்கிறேன்.''

அவள் போனதும் ஷண்பேகர் ''யு ஆர் மாரியிங் திஸ் க்ரீச்சர்?'' என்று கேட்டான்.

''இவளை இல்லை இவள் பெண்ணை.''

''இவளையும் சேர்த்துத்தான் கல்யாணம் செய்து கொள்கிறாய்!'' என்று வினோதமாகச் சொல்லி விட்டு, ''வாழ்க்கையைச் சில பேர் எதற்காகத்தான் சுயமாகச் சிக்கல் பண்ணிக் கொள்கிறார்களோ!''என்றான்.

''நாட்யுர் பிஸினஸ்'' என்றான்



மனோஜ் கோபத்துடன்.

சுஜாதா

கல்பாதேவியில் வெளிவந்தபோது ப்ரின்ஸஸ் தெரு முனையில் மழை பிடித்துக் கொண்டு திரை போட்டாற்போல பெய்தது. மான்ஸூன் மழை. நகரம் அனைத்துக் குடைகளையும் விரித்துக் கொள்ள, கார்களின் வைப்பர்கள் நூற்றுக் கணக்காக, நடன அசைவுகள் போல நீரைத் தடவத் துவங்க, ட்ராபிக் விளக்கில் வீக்லியைப் ப்ளாஸ்டிக்கில் போட்டு ஒருவன் விற்றுக் .கொண்டிருந்தான். சொட்டச் சொட்ட நனைந்து அந்தப் பெண் ''பாபு சார் அனா தே'' என்று கார் சன்னலில் கேட்டாள்.

''மான்ஸூனுக்காக பம்பாய் பிச்சை எடுப்பதைக் கூட நிறுத்துவதில்லை'' என்றான் ஷண்பேகர். மனோஜ் மௌனமாக வந்தான்.

ஜிம்கானா ஹாலில் கல்யாணம் நடந்தது. மனோஜின் அம்மா அப்பா விருந்தாளிகள் போலத்தான் வந்திருந்தார்கள். தங்கைகள் யாரும் வரவில்லை. மழை பெய்தது. மஞ்சள் பூக்கள் ஈரத்தில் ஓரத்தில் சிதறியிருக்க, ஷாமியானா இடைவெளிகளில் எல்லாம் மழை வந்து புஃபேயைக் கெடுத்தது. சாஸ்திரிகள் கூட ரெயின் கோட்டு அணிந்திருந்தார். எல்லோரும் தாலி கட்டின பின் லேட்டாக வந்தார்கள். தாலி கட்டும் சமயம் இடி இடித்தது. சிலர் நல்ல சகுனம் என்றார்கள்.

மனோஜுக்கு அதெல்லாம் பொருட்டாகவே இல்லை. பக்கத்தில் அரக்கு கலர் புடைவையில் ப்ரமிளாவைப் பார்ப்பதே மனோகரமாக இருந்தது. ஒரே தினத்தில் வயசு ஆறு கூடி, தளதளவென்று முழுப் பெண்ணாகி விட்டாள். சாதிக்கட்டின் அங்க சாட்சியங்கள் கிறக்கத்தை ஏற்படுத்தின. மெகிந்தியின் சித்திரங்கள் எழுதிய கையைப் பிடித்த போது உள்ளத்தின் உள்ளே வலியை ரத்து செய்த வேல் பாய்ச்சியது போல உணர்ந்தான். கல்யாணம் முடிந்து எல்லாரும் மாதுங்காவுக்குக் காரில் நெருக்கமாகப் போகும் போது, சரிகையும் பட்டும் ரோஜாவும் அரபு செண்ட்டும் கலந்த ஒரு மணத்தில் சொர்க்க விவரங்கள் இருந்தன. முதன் முதலாக ஒரு பெண்ணை இஷ்டப்படி தொட்டுக் கொள்ள முடிகிறது என்பதே எந்த சாசனத்திலும் இல்லாத மகத்தான சுதந்திரமாக இருந்தது.

ஷண்பேகர், கல்யாணத்துக்கு ஒரு விநோதமான பரிசு - 'மேரேஜ் அண்ட் மாரல்ஸ்' என்னும் ரஸலின் புத்தகமும் ஸோப் ஸ்டோனில் ஒரு கஜுராகோ சிலையும் கொடுத்திருந்தான். ''எப்போதாவது

தேவைப்படும்'' என்றான். ப்ரமிளாவின் கையைப் பிடித்துக் குலுக்கினான்.

அன்று இரவே மனோஜுக்குச் சாந்தி கல்யாணம் என்று ஏற்பாடு செய்திருந் தார்கள். பவானி ஜமக்காளம் போட்டு மாதுங்கா கிங்ஸ் ஸர்க்கிள் ஃப்ளாட்டில் படுக்கை ஏற்பாடு செய்திருந்தார்கள். யாரு டைய ஐடியாவோ தெரியவில்லை. தமிழ் சினிமாவின் கற்பகம் காலத்திலிருந்து முதல் இரவு பாட்டுக்களாகத் தொகுத்து ஒரு காஸட் பண்ணி வைத்திருந்தார்கள். ப்ரமிளா வளையல்கள் புலம்ப உள்ளே வந்து ''எத்தனை கண்ணாடி வளையல். சப்தம் போடுது'' என்றாள். அவற்றைக் கையைப் பிடித்து ஒவ்வொன்றாகக் கழட்டு வதிலேயே சுகம் இருந்தது. சன்னலைத் திறந்தால் எலக்ட்ரிக் ரெயில் தடக் தடக் கென்று அவன் இதயம் போல சென்றது. மனோஜ் கட்டியிருந்த பட்டு வேஷ்டியின் சரிகை அவன் காலைக் கீறி ரத்தக் கோடு பண்ணியிருந்தது. காலை எடுத்து வைக்கும் போது துடையில் நெறி கட்டி வலித்தது. மனைவி மாரேஜ் அண்ட் மாரல்ஸ் புத்த கத்தைப் பிடுங்கித் தூர எறிந்த போது கொஞ்சம் கோபம் வந்தது. அவளை ஹிந்தி சினிமா டூயட் போல் கழுத்தில் காதில் எல்லாம் முத்தமிடப் போனான். ப்ரமிளா, 'ஷேவ் பண்ணிக்கலையா? குத்துது...' என்றாள்.

பின்குறிப்பாக ''குத்தினாப் பரவா யில்லை. நல்லாத்தான் இருக்கு..'' என் றாள். அவன் கையை வாங்கிக் கொண்டு அதன் சிற்சில முயற்சிகளைத் தடுத்தாள். அந்தத் தடுப்பின் வலிமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து போய் மற்றொரு உலகத்தில் இருவரும் நழுவிப் போனார்கள்.

பின்னிரவில் அவளை மறுபடி எழுப்பி னான்.'

காலை எழுந்த போது அவனை அசைத்து எழுப்பிய ப்ரமிளாவை, 'வா' என்று கூப்பிட, திடுக்கிட்டு எழுந்தான் - அவன் மாமியார்!

''என்ன இத்தனை நேரம் தூங்கறீங்க! மகாபலேஷ்வர் போகணும்...''

''ப்ரமிளா எங்கே?''

''அவ எழுந்து குளிச்சிட்டு ரெடியா இருக்கா, நீங்கதான் பாக்கி.''

''ஒரு நிமிஷம்.''

''யு லுக் டயர்ட் டூ'' என்றாள்.

அதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

ஆபீஸிலிருந்து போன் வந்து பாஸ் கூப்பிட்டிருந்தார்.

''கல்யாணம் ஆச்சில்லை.. ஆபீஸுக்கு வரது தானே?''

''இன்னிக்கா?''

''ஆமாம்!''

''நேத்திக்குத்தான் கல்யாணம் முடிஞ் சிருக்கு ஸார்.''

''அது நேத்திக்கு இன்னிக்கு என்ன? கல்யாணம் செய்து கொள்ள ரெண்டு மணி நேரம் போதுமே. நான் கல்யாண தினம் மத்தியானமே ஆபீஸ் வந்துட்டேன்.''

''ஒரு வாரம் லீவு போட்டிருக்கேன் ஸார்.''

''லீவு கான்ஸல்ட். அன்டென்னா வந்துருச்சு. ஷிப் பண்ணியாச்சு, ஸைட் டுக்கு. வாரண்ட்டி எக்ஸ்பைர் ஆய்டும். உடனே வா.''

ப்ரமிளா மகாபலேஷ்வர் போகத் தயா ராக, ஜீன்ஸ் எல்லாம் அணிந்து, தலையில்

பெரிசாக சில்க் துண்டு கட்டி, கூலிங் கிளாஸ் போட்டிருந்தாள். அவளிடம், 'மாதுரி திக்ஷித் மாதிரி இருக்கிறாய்' என்று யாரோ பொய் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''ஒரு மணி நேரம் ஆபீஸ் போய்ட்டு வந்துர்றேன் நீங்கள் எல்லாம் ரெடியாறதுக்குள்ள வந்துருவேன்'' என்று அம்மாவிடம் சொல்லாமல் புறப்பட்டு விட்டாள்.

ரயிலில் தன்னை யோசித்தாள். கல்யாணமான மறுதினம் ஆபீஸுக்குப் போகிறவர்கள் இருக்கலாம். அதில் கொஞ்சம் சந்தோஷம் கொள்பவர்கள் அதிகம் பேர் இருக்க மாட்டார்கள்! எதற்காக சந்தோஷம் என்று புரியவில்லை. ப்ரமிளாவின் நேற்றைய அனுபவங்கள் இவ்வளவுதானா? கல்யாணம் என்கிற ஒரு திகட்டலை, கடைசிக் கசப்பை ஏற்படுத்தி விட்டது. மொத்தமே ஒரு பெண் ஒரு கண நேரப் பரவசம்தானா? மேலும் என்ன என்னவெல்லாம் இருக்கிறது? தெரியவில்லை. குழப்பமாக இருந்தது. ஏதோ ஒருவிதத்தில் ஏமாற்றப்பட்டு விட்டது போல உணர்ந்தாள். யாருடைய துரோகம்? யார் செய்த துரோகம்? புரியவில்லை. தனக்குத்தானே துரோகம் இருக்க முடியுமா?

ஆபீஸில் டெலக்ஸும் ஃபாக்ஸும் பறந்தன. ஷண்பேகரின் மேசையில் ஆஷ்டிரே நிரம்பியிருந்தது. மனோஜ் இன்ஸ்டலேஷன் டிராயிங்களை ஒழுங்குபடுத்தினான். எல்.என்.ஏ. ஃபீட் ஹார்ன் எல்லாம் டிஸைன் புதுசாக இருந்தது. போன தடவைக்கு இந்தத் தடவை எல்லாவற்றையும் மாற்றி விட்டு, இன்னும் சின்னதாக, இன்னும் சுலபமாக, இன்னும் சிறப்பாகப் பண்ணி விட்டார்கள். அந்த மறைமுக அமெரிக்க விஞ்ஞானியை வியந்தாள்.

ஷண்பேகர் ''எப்படி இருந்தது?'' என்றான்.

''ஷண்பேகர் இதைவிட க்ரூடா கேக்க முடியுமா?''

''முடியும்!''

''வேண்டாம்!''

''தே ஆர் ஆல் தி ஸேம்'' என்றான்.

''இல்லை ஷண்! திஸ் இஸ் டிஃபர்ரண்ட்.''

''எந்தவிதத்தில?''

''அதை நான் ஏன் சொல்ல வேண்டும்?!''

''நாளை புறப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் பாஸ்.''

''எங்கே?''

''கிராமத்துக்கு. உன் மகாபலேஷ்வர் கான்ஸல்ட்!''

பாஸின் அறைக்கு விரைந்த போது அவர், ''லுக், ஜூலை பதினெட்டுக்குள் இன்ஸ்டலேஷன் பண்ணவில்லையெனில் வாரண்ட்டி காலாவதியாகிறது. லட்சக்கணக்கில் நஷ்டம்!'' என்றார்.

''ஸார்! நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு ஒருநாள் புதிய மனைவியுடன் இருக்கிறேன்'' என்று கையில் இருந்த மஞ்சள் கயிறைக் காட்டினாள்.

''ஒரே தீர்வு அவளையும் அழைத்துச் செல்வதுதான்.''

(தொடரும்)





"எவ்வளவோ வாதாடியும் உங்களுக்கு நீதிபதி ஆயுள் தண்டனை விதிச்சுட்டார்.... ஐயாம் ஸாரி!"

"பரவாயில்லை சார்! நீங்க வாதாடினதைப் பார்த்து எங்கே தூக்கு தண்டனை கிடைக்குமோன்னு பயந்துக்கிட்டிருந்தேன்!"

- வேதபுரி எஸ். இரமேஷ்

நியாயம் எது?

★ பெர்னார்ட்ஷா ஒரு பத்திரிகையில், நாடக விமரிசனம் எழுதிவந்தார். அந்தப் பணியிலிருந்து அவர் விலகிவிடவே, வேறொருவர் நியமிக்கப்பட்டார். அவரிடம் பத்திரிகை அதிபர் சொன்னார் : "ஷாவுக்குக் கொடுத்து வந்த ஊதியத்தை நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. அதை விடக் குறைவாகத்தான் தர இயலும்."

புதிதாக வந்தவர் சொன்னார் : "அவருக்கு நாடகம் கைவந்த கலை. எனவே, சிரமமே இல்லாமல் அவரால் விமரிசனம் எழுத முடிந்தது. எனக்கு நாடகத்தைப் பற்றி எதுவுமே தெரியாது. எவ்வளவு சிரமப்பட்டு நான் எழுத வேண்டும்! எனவே, ஷாவை விட எனக்கு அதிக ஊதியம் கொடுப்பதுதான் நியாயம்!"

-நல்லாலம் காசிதாசன்
(ஜோக்ஸ் என்ற நூலிலிருந்து)

துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு; ஆனால், அது உனக்கு விட்டுச் சென்ற பாடத்தை மட்டும் மறக்காதே!

- அல்பேனியா பழமொழி

- ஆர்.கே. லிங்கேசன்

அமரம்

செம்மை நிறத்தில் சூரியனின் மிச்சத்தில் தகதகக்கும் கடல். கரைப் பறவைகளின் ரிச்ட், ரிச்ட் ஓசை. ஒற்றைப் படகு. துடுப்புப் போட்டுக் கொண்டே மம்முட்டி. படகுக் குழியில் விளையாடும் பெண் குழந்தை. அவர் மகள்? ஆமாம் என்று கரைக்குத் திரும்பியதுமே தெரிந்து விடுகிறது. கடலும், கடல் சார்ந்த இடமும், அந்த மனிதர்களும் - சம்பவங்களுமேதான் மொத்தக் கதையும்.

தினசரி கடலை நம்பிப் பிழைக்கும் ஒரு மீனவனுக்குத் தன் மகளைப் பற்றி கிலோ கிலோவாய்க் கனவுகள். நன்றாகப் படிக்கும் அவளை, மேலும் படிக்க வைத்து, உயர்நிலையில் அமர்த்தி, அவளுக்கேற்ற கணவன், வாழ்க்கை, அந்தஸ்து.. ஆனால் யதார்த்தம் குறுக்கிடுகிறது! அதிகம் படிக்காத குப்பத்து இளைஞனுடன் நேசம். விவரம் புரிந்து... மோதல், பிரிவு, பெண் தன் காதலனுடன் பதிவுத் திருமணம். முடிவில் சின்னத் திருப்பம். மீண்டும் சிவப்புக் கடலில் ஒற்றை ஆளாய்க் கதாநாயகன்.

நம்ப ஊர்க்காரர்கள் யோசிக்கவே தயங்குகிற திரைக்கதை. மீன்கள், கூடைகள், ஏலம், குடிசை, மணல்வெளி. ஆனால் மலைநாட்டு பரதனும், மது அம்பட் (காமெரா), தன் சகாவுடனும் (லெனின் - எடிட்டர்) மிருதுவாய் அசத்தி இருக்கிறார்கள்.

மூக்குப் பொடியின் சிட்டிகை அளவு கதை விஷயத்தில் காரம், மணம், குணம் போல காதல், நெகிழ்ச்சி, பாசம், இயல்பு என்று குழைத்து வைத்துத் தருகிறார்கள். யதார்த்தமான படப்பிடிப்பு, காட்சிகள், சம்பவங்கள் : மகள் முத்தம்மே தன் தந்தையின் திருமணம் பற்றிச் சந்தோஷப்படுவது, ஸ்வர்ணப் பதக்கம் பெறுகையில் நெகிழ்ச்சியுடனான அழுகை, மம்முட்டி - சித்ரா பார்வையில் காதல், வளையல் நிறைந்த கைகளைப் பற்றி உயர்த்தி, தன் உயரத் தோளில் வைத்து... சிக்கனமாகப் பல உணர்வுகளை இயல்பாகச் சொல்லும் காட்சிகள்.

கடல்தான் 'அமரத்தின்' முக்கியக் கதாபாத்திரம். அலையும் கடல், சீறிப் பாயும் கடல், அடுக்கடுக்காய்க் கரைக்கு மிதந்து வரும் கடல், ததும்பும் கடல், குமுறும் கடல், தகதகக்கும் கடல், படகுகளால் கிழிபடும் கடல், காற்றுடன் விளையாடும் கடல், வானத்தை உற்றுப் பார்க்கும் கடல்... எத்தனை எத்தனை பாவங்கள் இந்தக் கடலிடம்!

மிக மெதுவாக நகரும் கதைதான். அதை ஒரு பொருட்டாக நினைக்காமல் மற்ற விஷயங்களில் மனதை நகர்த்திக் கொண்டால் அமரம் மன உணர்ச்சிகளை வெளிப்படுத்தி நெகிழ வைக்கும்.

- சுந்தர்ஜி.



சிவகாமியின் சபதம்

ஐம்பத்து மூன்றாம் அத்தியாயம்
பாரவி இட்ட தீ

மகேந்திர சக்கரவர்த்தி சபா மண்டபத்துக்குள்ளே பிரவேசித்த போது அவ்விடத்தில் ஏற்பட்ட ஆரவாரத்தையும் கோலாகலத்தையும் சொல்லி முடியாது.

சற்று நேரம் வரையில் ஒரே ஜய கோஷமும் எதிரொலியுமாயிருந்தது.

மாமல்லர் பாய்ந்து சென்று மகேந்திர பல்லவரைத் தழுவிக் கொண்டார். மந்திரிகளும் அமைச்சர்களும் கோட்டத் தலைவர்களும் சம்பிரதாய மரியாதைகளை மறந்தவர்களாய்ச் சக்கரவர்த்தியைச் சூழ்ந்து கொண்டார்கள். ஏககாலத்தில் பலர் பேச முயன்றார்கள்.

தளபதி பரஞ்சோதி மட்டும் சற்றுத் தூரத்தில் ஒதுக்குப்புறமாக நின்றார். அவருடைய கண்களிலே வெட்கத்தின் அறிகுறி காணப்பட்டது. ''நான் கூட ஏமாந்து போனேனல்லவா? சக்கரவர்த்தியைப் பற்றி இவ்வளவு தெரிந்திருந்தும், இவர் பகைவர்களால் சிறைப்பட்டிருக்கக்கூடும் என்று நம்பி விட்டேனல்லவா?'' என்ற எண்ணத்தினால் அவ்வீர வாலிபர் வெட்கமடைந்தார் போலும்!

ஆரவாரம் சற்று அடங்கியதும், மகேந்திர சக்கரவர்த்தி சபையோரைச் சுற்றி வளைத்துப் பார்த்து, ''ஏது, எல்லாரும் ஒரே குதூகலமாயிருக்கிறீர்கள்? உங்களுடைய உற்சாகத்தைப் பார்த்தால், யுத்தத்திலேயே ஜயித்து விட்டது மாதிரி தோன்றுகிறதே? நமது கோட்டைத் தளபதி மட்டும் சிறிது வாட்டமடைந்து காணப்படுகிறார்!'' என்ற போது எல்லாருடைய கண்களும் பரஞ்சோதியை நோக்க, அவருடைய வெட்கம் இன்னும் அதிகமாயிற்று.

முதன் மந்திரி சாரங்கதேவர், ''பல்லவேந்திரா! தாங்கள் வருவதற்கு ஒரு வினாடி நேரத்துக்கு முன்னால்தான், நம் சைனியத்தைக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ப் புலிகேசியுடன் போர் நடத்துவதாக நாங்கள் இங்கே தீர்மானித்திருந்தோம். தங்களுடைய வரவினால் அதற்கு இடமில்லாமற் போய் விட்டதே என்று நமது கோட்டைத் தளபதிக்கு வருத்தமாயிருக்கலாம்!'' என்றார்.

''என்ன? என்ன? நம்முடைய சைனியத்தைக் கோட்டைக்கு வெளியே கொண்டு போவதாக உத்தேசமா? இந்த அபூர்வமான யோசனையை யார் செய்தது? சேனாதிபதி! எப்படி என்னுடைய கட்டளையை மீறத் துணிந்தீர்? உமக்குக் கூட என்னிடம் நம்பிக்கை இல்லாமல் போய் விட்டதா?'' என்று பல்லவேந்திரர் சிம்ம கர்ஜனை போன்ற குரலில் கேட்க, சேனாதிபதி கலிப்பகையார் தாழ்ந்த குரலில், ''பிரபு! தாங்கள் பகைவர்களால் சிறைப்பட்டிருப்பதைக் கேட்ட பிறகு நாங்கள் எப்படிக் கோட்டைக்

குள்ளே, பதுங்கிக் கொண்டிருக்க முடியும்? தங்களை விடுவிக்க முடியாத பல்லவ சைனியம் இருந்தென்ன, இல்லாமற் போயென்ன?'' என்றார்.

''ஆகா! நான் பகைவர்களால் சிறைப் பட்டிருந்தேனா? இது என்ன கதை?'' என்று சக்கரவர்த்தி கேட்ட போது, அங்கே கூடியிருந்தவர்களின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லாமல் போய் விட்டது.

முதன் மந்திரி சாரங்கதேவர், சற்று முன்னால் சக்கரவர்த்தியின் தூதன் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் வந்ததையும், அவன் கூறிய அதிசயமான செய்தியையும், அதன் மேல் தாங்கள் தீர்மானித்ததையும் சுருக்கமாகக் கூறினார்.

எல்லாவற்றையும் கேட்டு விட்டு, ''ஆகா! நாகநந்தியடிகள் நான் நினைத்ததற்கு மேலே கெட்டிக்காரராயிருக்கிறார். சற்று நேரம் தாமதித்து வந்திருந்தேனானால் காரியம் அடியோடு கெட்டுப் போயிருக்குமே!'' என்றார் மகேந்திர சக்கரவர்த்தி.

''பிரபு! அப்படியானால், அந்தத் தூதன் கூறியது பொய்யா? தாங்கள் பகைவர்களிடம் சிறைப்படவில்லையா?'' என்று சேனாதிபதி கலிப்பகையார் கேட்க மகேந்திரர் கூறினார் :- ''அது பொய்தான். நான் பகைவர்களிடம் சிறைப்படவில்லை. அப்படி நான் சிறைப்பட்டிருந்தாலும் என்னை விடுவிப்பதற்காக நீங்கள் படை திரட்டிக் கொண்டு புறப்பட்டிருக்க வேண்டியதில்லை. என்னை விடுவித்துக் கொள்ள எனக்குத் தெரியும். முன்பின் தெரியாத தூதனுடைய வார்த்தையை அவ்வளவுக்கு நீங்கள் நம்பி விட்டீர்களே? நாகநந்தி நமது எதிரியின் ஒற்றன் என்பதை மாமல்லனாவது பரஞ்சோதியாவது உங்களுக்குத் தெரிவிக்கவில்லையா?''

''பிரபு! தாங்கள் சிறைப்பட்டீர்கள் என்ற செய்தி என்னுடைய அறிவைக் குழப்பி விட்டது. பல்லவ குமாரரும் மனம் கலங்கிப் போய் விட்டார்'' என்றார் பரஞ்சோதி.

''அவன் ஒற்றனா? அப்படியானால் சிங்க இலச்சினை அவனிடம் எப்படி வந்தது?'' என்று முதல் அமைச்சர் கேட்டார்.

''நான்தான் அவனிடம் கொடுத்தேன். இந்த அதி சாமர்த்தியசாலியான ஒற்றனைக் கைப்பிடியாய்ப் பிடிப்பதற்காகவே நான் வடக்குப் போர் முனையிலிருந்து தெற்கே போயிருந்தேன்...''

''பிரபு! எதிரியின் ஒற்றனிடம் சிங்க இலச்சினை ஏன் கொடுத்தீர்கள்? கொடுத்த போது அவன் ஒற்றன் என்று தெரியாதா?''

''ஒன்பது மாதத்துக்கு முன்னாலேயே தெரியும். நமது கோட்டைத் தளபதி காஞ்சிக்கு வந்த அன்றே அந்தச் சந்தேகம் என் மனத்தில் உதித்தது. வாதாபி ஒற்றர்கள் பல்லவ ராஜ்யமெங்கும் பௌத்த சங்கங்களின் மூலமாக வேலை செய்து வருவதை அறிந்தேன். அவர்களையெல்லாம் பிடிப்பதற்காக இத்தனை நாளும் நாகநந்தியை வெளியில் விட்டிருந்தேன். கோட்டை முற்றுகை தொடங்குவதற்குள் நாகநந்தியை எப்படியாவது பிடித்து விட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு தெற்கே போனேன். கடைசியாக, மண்டபப்பட்டுக் கிராமத்தில் கண்டுபிடித்தேன்.''

''என்ன, மண்டபப்பட்டிலா?'' என்று மாமல்லர் தூக்கிவாரிப் போட்டவராகக் கேட்டார்.

''ஆமாம், மாமல்லா! மண்டபப்பட்டிலேதான். அங்கே நமது ஆயனரையும் சிவகாமியையும் கூடப் பார்த்தேன். அவர்களைப் பெரும் வெள்ளத்திலிருந்து நீ காப்பாற்றியது பற்றிச் சொன்னார்கள். இருவரும் சந்தோஷமாயிருக்கிறார்கள். ஆயனர் அங்கே மலைக் கோயில் அமைக்கும் பணியில் ஈடுபடுவதற்குத் தக்க ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேன். நாகநந்தியைத் தேடிக் கொண்டு மண்டபப்பட்டுக்குப் போனதில் இந்த ஒரு நன்மையும் ஏற்பட்டது...''

ஆயனரும் சிவகாமியும் எதிரிகளின் ஒற்றர்கள் என்று நாகநந்தி கூறிய விஷங் கலந்த வார்த்தைகளினால் புண்பட்டிருந்த மாமல்லரின் உள்ளம் இதைக் கேட்டுக் குதூகலித்தது. அவருடைய மனத்தில் பொங்கிய உற்சாகம் முகமலர்ச்சியாகப் பரிணமித்தது.

''பிரபு! ஒற்றனைச் சிறைப்படுத்தியாகி விட்டதா?'' என்று சேனாதிபதி கலிப்பகை கவலை தோய்ந்த குரலில் கேட்டார். அவருக்குப் போர்க்களத்தில் யுத்தம் செய்யும் முறைதான் தெரியுமே தவிர, இந்த மாதிரி ஒற்றர் தந்திரங்களெல்லாம் தலைவேதனை அளித்தன.

''ஆம். சேனாதிபதி! வாதாபியின் மிகவும் கெட்டிக்காரனான ஒற்றனைச் சிறைப்படுத்தியாகி விட்டது. பாதி யுத்தத்தை நாம் ஜயித்து விட்டது போலத்தான்!'' என்றார் சக்கரவர்த்தி.

உடனே மாமல்லர், தந்தையிடம் துள்ளி வந்து வணக்கத்துடன் கைகூப்பி நின்று, ''பல்லவேந்திரா! பாதி யுத்தத்தைத் தாங்கள் ஜயித்தாகி விட்டது. மற்றப் பாதி யுத்தத்தை ஜயிக்க எனக்கு அனுமதி கொடுங்கள். நமது வீர பல்லவ சைனியத்தை நடத்திக் கொண்டு போய் வாதாபி அரக்கர் சைனியத்தை அடியோடு அழித்து நிர்மூலம் செய்ய அனுமதி கொடுங்கள். என் அருமைத் தோழர் பரஞ்சோதியையும் என்னுடன் அனுப்பி வையுங்கள்!'' என்றார்.

அப்போது மகேந்திர பல்லவர் மாமல்லரைத் தழுவிக் கொண்டு ''குழந்தாய்! உன்னுடைய வீரத்தை மெச்சுகிறேன். ஆனால், கொஞ்சம் நான் சொல்லுவதைக் கேள்!'' என்று கூறி விட்டு, சபையோர்களைப் பார்த்து, ''மந்திரிகளே! அமைச்சர்களே! கோட்டைத் தலைவர்களே! எல்லாரும் சற்றுச் செவி கொடுத்துக் கேளுங்கள். இந்த யுத்தத்திற்கு ஆதி மூலமான காரணத்தை உங்களுக்குச் சொல்கிறேன். பிறகு, உங்களுடைய விருப்பம் என்ன என்பதை எனக்குத் தெரிவியுங்கள்'' என்றார்.

நிசப்தம் நிலவிய மந்திராலோசனை சபையைப் பார்த்து மகேந்திரபல்லவர் மேலும் கூறியதாவது :-


''நான் இளம் பிள்ளையாயிருந்த போது யுத்தம் என்னும் எண்ணமே இல்லாதவனாயிருந்தேன். என் தந்தை சிம்ம விஷ்ணுவின் வீரப்புகழ் தென்னாடெங்கும் பரவியிருந்தது. நான் பிறப்பதற்கு முன்னாலேயே என் தந்தை ஈழைச் சோழ நாட்டைப் பல்லவ ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். உறையூர்ச் சோழர்களை அடக்கிக் கப்பம் கட்டச் செய்தார். பாண்டியர்களையும் கர்வபங்கம் செய்தார். மேற்கே கங்கரும் வடமேற்கே கதம்பரும் சிம்ம விஷ்ணு மகாராஜாவிடம் பயபக்தி கொண்ட நண்பர்களாயிருந்தார்கள். வடக்கே வேங்கி நாட்டரசனோ எனக்குத் தாய்மாமன். ஆகவே, யுத்தம் என்ற நினைவே இல்லாமல் நான் வளர்ந்து வந்தேன். சித்திரம், சிற்பம், கவிதை, சங்கீதம், நடனம் ஆகிய கலைகளில் ஈடுபட்டுக் காலம் கழித்தேன். எந்தெந்த தேசத்தில் என்னென்ன கலை சிறந்து விளங்கியது என்று அறிந்து, அந்தக் கலையில் வல்லாரைத் தருவித்து இந்தப் பல்லவ நாட்டிலும் அக் கலையை வளர்க்க முயன்றேன்.

இப்படியிருக்கும் போது, கங்க மன்னன் துர்விநீதனுடைய சபையில் பாரவியென்னும் வடமொழிக் கவி ஒருவர் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர் வடக்கே அசலபுரத்தில் இருந்தவர். வாதாபி இராஜகுமாரர்களின் சிநேகிதர். புலிகேசியும் அவனுடைய சகோதரர்களும் சிற்றப்பனுக்கு பயந்து காட்டிலே ஒளிந்திருந்த போது பாரவியும் அவர்களோடு கொஞ்ச காலம் அலைந்து திரிந்தார். பிறகு அவர் கங்கநாட்டு 'மன்னனுடைய சபையைத் தேடி வந்தார். துர்விநீதனுடைய மகளைப் புலிகேசியின் தம்பி விஷ்ணுவர்த்தனனுக்கு மணம் பேசி முடித்து, அதன் மூலம் புலிகேசிக்குப் பலம் தேடிக் கொடுப்பதற்காக அவர் வந்தார்.

துர்விநீதன் என்னுடைய தந்தைக்குப் பெரிதும் கடமைப்பட்டவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகையால், கங்கபாடியில் நடக்கும் காரியங்கள் எல்லாம் அவ்வப்போது காஞ்சிக்குத் தெரிந்து கொண்டிருந்தன. பாரவி அங்கு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டதும், அவரைக் காஞ்சிக்கு வரவழைக்க வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். என் தந்தையும்

முதன் மந்திரி சாரங்க தேவர், சற்று முன்னால் சக்கரவர்த்தியின் தூதன் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் வந்ததையும், அவன் கூறிய அதிசயமான செய்தியையும், அதன்மேல் தாங்கள் தீர்மானித்ததையும் சுருக்கமாகக் கூறினார்.

அவ்விதமே துர்விநீதனுக்குச் செய்தி அனுப்பினார். அதன்பேரில் பாரவி இங்கு வந்தார். வந்தவர் காஞ்சி சுந்தரியின் மேல் மோகம் கொண்டு விட்டார். இந்தக் காஞ்சி நகரின் திருக்கோயில்களும் இராஜ வீதிகளும் மாடமாளிகைகளும் பூந்தோட்டங்களும் பாரவியை அடியோடு கவர்ந்து விட்டன. புலிகேசி வாதாபி சிம்மாசனத்தில் ஏறிய பிறகு, அவனும் அவன் தம்பி விஷ்ணுவர்த்தனனும் பாரவிக்கு ஓலை மேல் ஓலையாக விடுத்துக் கொண்டிருந்தார்கள். வாதாபிக்குத் திரும்பி வந்து விடும்படியாகத்தான். ஆனால் பாரவி அதற்கெல்லாம் இணங்கவில்லை. காஞ்சியை விட்டுப் போவதற்கு அவருக்கு மனம் வரவில்லை. புலிகேசியின் ஓலைகளுக்கெல்லாம் பாரவி தம்மால் வர முடியாதென்று மறு ஓலை அனுப்பினார். அவற்றில் காஞ்சி நகரைப் பற்றி வர்ணனைகள் செய்தார். அந்த ஓலைகளில் ஒன்றிலேதான் ;



, 'புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு
நாரீஷு ரம்பா நகரேஷு காஞ்சி

என்ற சுலோகத்தை அவர் எழுதினார். இதையெல்லாம் அப்போது படிக்கையில் எனக்கு எவ்வளவோ சந்தோஷமா யிருந்தது. ஆனால், அப்போது அந்த பாரவி கவி மூட்டிய தீதான் இப்போது இந்தப் பெரும் யுத்தமாக மூண்டிருக்கிறது. புலி கேசி பாரவிக்கு எழுதிய ஓலை ஒன்றில், 'என்றைக்காவது ஒரு நாள் நான் காஞ்சி நகருக்கு வருவேன்; உம்முடைய வர்ண னையெல்லாம் உண்மைதானா என்று பார்ப்பேன் என்று எழுதியிருந்தான். அது வும் எனக்குப் பெருமையாயிருந்தது அப்போது. வாதாபி சக்கரவர்த்தி காஞ்சிக்கு வரும் போது அவருக்குப் பிரமாதமான வரவேற்பு நடத்த வேண்டுமென்று எண்ணி யிருந்தேன். ஆனால், சபையோர்களே! நான் நினைத்ததற்கு மாறாக இப்போது கோட்டைக் கதவுகளைச் சாத்தி வாதாபி சக்கரவர்த்தியை வெளியில் நி று த் த வேண்டியிருக்கிறது....''

இத்தனை நேரமும் சபையோர் அனைவரையும் போல ஆவலுடன் மகேந் திரர் கூறிய வரலாற்றைக் கேட்டுக் கொண் டிருந்த மாமல்லர் குறுக்கிட்டு, ''பல்ல வேந்திரா! எதற்காக நம் கோட்டைக் கதவு களைச் சாத்தித் தாளிட வேண்டும்? வேல் களையும் வாள்களையும் கொண்டு புலி கேசியை ஏன் வரவேற்கக் கூடாது?'' என்றார்.

''ஆம்; வரவேற்கத்தான் போகிறோம். நமது கோட்டைச் சுவர்களின் மீது பல்லவ வீரர்கள் நின்று, வாள்களாலும் வேல்க ளாலும் சளுக்கர்களை வரவேற்பார்கள். வர வேற்று நமது அகழிகளிலுள்ள முதலை களுக்கு விருந்தளிப்பார்கள்! நான் சொல்ல ஆரம்பித்ததை முழுதும் சொல்லி விடு கிறேன். அந்த அரக்கன் புலிகேசி நமது காஞ்சி சுந்தரியின் மேல் எத்தகைய மோகம் கொண்டிருக்கிறான் என்பதை நேரில் நானே பார்த்தேன். ஆகா! காஞ்சியின் சௌந்தரியத்தை நான் வர்ணிக்க ஆரம்பித்த தும், அவனுடைய கண்கள் எப்படி ஜொலித்தன. தெரியுமா....?''

''இதென்ன? புலிகேசியைத் தாங்கள் நேரில் பார்த்தீர்களா? எங்கே? எப் போது?'' என்று சாரங்கதேவர் கேட்டார்.

''வடபெண்ணை நதிக்கரையில் சளுக் கர் படைக்கு நடுவில் அவனை நான் பார்த்தேன்'' என்று மகேந்திரர் கூறியதும், சபையில் பெரும் வியப்புக்கு அறிகுறியான 'ஹாஹாகாரம்' எழுந்தது.

''பிரபு! இப்படியெல்லாம் தங்களை அபாயத்துக்கு உட்படுத்திக் கொள்ள லாமா? இந்தப் பெரிய பல்லவ சாம் ராஜ்யம் தங்கள் ஒருவரையே நம்பி யிருக்கிறதே!'' என்றார் முதல் அமைச்சர்.

(தொடரும்)



பிரபல தொழிலதிபர் அமெ ரிக்கா சென்றிருந்தார். பெரிய தொழிற் சாலைகளைப் பார்வையிட்டு வந்தார். ஆங்காங்கு எதை யும் தள்ளிப் போடா மல் உடனுக்குடன் செய்து முடித்து விடுங்கள் என்ற வாசகம் பொறித்த போர்டுகள் தொங்கின. அவற்றைப் பார்த்த அவர், ஆஹா இது நல்ல யோச னைதான் என்று இந்தியா திரும்பியதும் தமது தொழிற்சாலை முழுவதும் அது போன்ற போர்டுகளை நிறைய எழுதி வைத்தார். சில மாதங்கள் கழித்து அவர் மீண்டும் வந்து, அலுவலக மேலாளரிடம் 'ஏதாவது பலன் கிடைத்ததா?' எனக் கேட்டார். அவரோ ''ஏகப்பட்ட பலன்கள். கேஷி யர் பத்தாயிரம் பணத்துடன் தலைமறைவாகி விட்டார். ஆபீஸ் பையன் முன்னறிவிப்பு இல்லாமல் ராணுவத்தில் சேர்ந்து விட்டான். குமாஸ்தா - டைப்பிஸ்டு காதலியுடன் ஓடி விட்டார். தொழிலாளர்களும் ஊதிய உயர்வு கேட்டு உடனடியாக ஸ்டிரைக் நோட்டீஸ் அனுப்பி விட்டார்கள். ஆக எதையும் தள்ளிப் போடாமல் உடனுக்குடன் செய்து விட்டார்கள்'' என்றார் - முதலாளியோ தலைகுனிந்தார்.

- அறிஞர்கள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் நூலிலிருந்து.

- ரேவதி ப்ரியன்.

500 உஜாலா ரொக்கப் பரிசுகள்

உஜாலா

பொது மக்களின் வேண்டுகோளின்படி இந்த பரிசுத் திட்டம் செப்டம்பர் 30, 1991 வரை நீடிக்கப் பட்டுள்ளது.



உஜாலாவின் விஞ்ஞானத் தன்மை

மனோதத்துவம்

குழந்தைகள் இளமனதில் வெள்ளை ஆடைகள் எந்த அளவிற்கு சுகாதாரம், ஒழுக்கம், இலட்சியம் மற்றும் இதரப் பண்புகளை வளர்க்க உதவுகின்றன என மனோதத்துவ நிபுணர்கள் உங்களுக்கு கூறுவார்கள்

பௌதீகம்

வெள்ளை ஆடைகள் எவ்வாறு சூரிய ஒளியிலிருந்து பெருமளவு உஷ்ணத்தை வெளியேற்றி சருமத்தைக் காக்கின்றன என்றும் உஷ்ணத்தினால் சருமம் கருமையாகாமல் எவ்வாறு காக்கின்றன என்றும் பௌதீக நிபுணர்கள் உங்களுக்கு கூறுவார்கள்

இரசாயனம்

ஒப்பற்ற, நுட்பமான இரசாயனம் மட்டுமே பளிச்சென்ற, மாசற்ற ஒளி வீசும் வெண்மையை வெள்ளை ஆடைகளுக்கு தர முடியும். இவை அனைத்தும் அடங்கிய தயாரிப்பே உஜாலா. இது ஒரு சாதாரண சொட்டு நீலம் அல்ல. நீரில் விரைவாக கரைய வேண்டும் — உடைகளின் இழைகளில் ஆழ ஊடுருவி வேகமாக உறிஞ்சப்பட வேண்டும் — விஞ்ஞான முறை அற்ற தயாரிப்புகளில் இருப்பது போன்ற இரசாயனம் இருத்தல் கூடாது. அவற்றை தொடர்ந்து உபயோகித்தால் துணிகளுக்கு சேதமுண்டாகும் அல்லது குழந்தைகளின் சருமத்திற்கு தீங்கு உண்டாக்கும். தவிர துணிகளில் படிந்திடும் கறை போன்றவையினால் சோபையிழந்து காணப்படும். இவை அனைத்து விஷயங்களையும் மனதில் கொண்டே, அங்கக இரசாயனத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ள விஞ்ஞானி ஒருவரால் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை செய்யப்பட்டு உருவாகி உள்ளது உஜாலா

உஜாலா பாதுகாப்பின் சின்னம்

வாய்வழி நச்சு மூலம் (ORAL TOXICITY TEST) நடத்திய ஆராய்ச்சிகள், உஜாலா நச்சுத் தன்மை அற்றது என நிரூபித்து உள்ளன. சரும அரிப்பு பரிசோதனை (SKIN IRITATION TEST) நடத்தியதில் சருமத்திற்கு அரிப்பு ஏற்படுத்துவது இல்லை என்றும் கண்டு அறியப்பட்டுள்ளது

உஜாலாவில் ஆடைகளுக்கு சேதமுண்டாக்கும் எந்த இரசாயனமும் கிடையாது. எனவேதான் உஜாலாவை மீண்டும், மீண்டும் வாங்குகிறார்கள்

500 உஜாலா ரொக்கப் பரிசுகள் :

இன்றைய நுகர்வோர்கள் இலவசமாய் கிடைக்கும் மற்ற பொருள்களுக்காக இன்றி உஜாலா போன்ற நல்லதொரு பொருளை வாங்குவதன் காரணம் என்ன ? நுகர்வோர்கள் உஜாலாவை எப்படி கவனித்து வாங்குகிறார்கள் என்றும் ? எப்படி உஜாலாவைப் போல் தோற்றமளிக்கும் விஞ்ஞான முறையற்ற சொட்டு நீலங்களை வாங்குவதை தவிர்க்கிறார்கள் என்பதையும் உஜாலா பாட்டிலில் உள்ள விலாசத்திற்கு செப்டம்பர் 30ம் 1991 முன்பு அனுப்பவும். தகுந்த விமர்சனங்களுக்கு ரூ. 50 வீதம் 500 நபர்களுக்கு ரொக்கம் பரிசாக வழங்கப்படும்

JYOTHY LABORATORIES

Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.

Regd. Office:
Sreekrishna Nagar
Bombay-400 066.

முப்பது கோடி முகங்கள்!

"ஐஸ்வர்யாவா?! அடையாளமே தெரியலையே!'' என்று அதிசயப்படுகிற மாதிரி no-make up make up! அதுவே நம்மை நிமிர்ந்து உட்காரச் செய்ய, முப்பது கோடி முகங்கள் டீ.வி. தொடரின் முதல் பகுதியை உன்னிப்பாய்க் கவனிக்கிறோம்.

கனமான இழையாய்த் திலகவதியின் கதை. காட்சிகளின் நிலைக்களனைத் திறமையாக மாற்றி மாற்றி அமைத்து விறுவிறுப்பான திரைக்கதை பின்னியிருக்கிறார் லெனின். எளிமையான - அதே சமயத்தில் உணர்ச்சிபூர்வமான - வசனங்களின் மூலம் கதாபாத்திரங்களுக்கு வடிவம் கொடுத்திருக்கிறார். கைதேர்ந்த திரையுலகக் கலைஞர் - எடிடிங் அனுபவம் கைகொடுத்திருக்கிறது.

திரையுலகத்துக்கே உரிய சினிமாத்தனம் இல்லாமை மகிழ்ச்சியூட்டுகிறது. அடடா! டீ.வி. நிகழ்ச்சியென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும் என்று சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்த போது அந்த முடிவு... முடிச்சுகள் போட்டுக் கதையைப் பொட்டலம் கட்டித் தராத திறந்த முடிவு...

''முடிவின் மூலம் என்ன உணர்த்த முயன்றிருக்கிறீர்கள்...?'' - முப்பது கோடி முகங்கள் படப்பிடிப்பில் லெனினைச் சந்தித்துக் கேட்டோம்.

''கதாநாயகி தன் இலட்சியத்துக்காகத் தொடர்ந்து போராடுவாள். அவள் தோழன் அவளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தருவான்...''

''வெகு ஜனங்களுக்கு இந்த முடிவு புரியுமா...?''



ஐஸ்வர்யாவா...?





ஜோதி

''நாம் யாரையும் குறைந்து எடை போடக்கூடாது. யோசிப்பார்கள். யோசித்துப் புரிந்து கொள்வார்கள்.''

''கதைகளையும் கதாபாத்திரங்களையும் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுத்தீர்கள்?''

''அந்த விஷயத்தைத் தயாரிப்பாளர்கள் (கண்மணி கிரியேஷன்ஸ்) கவனித்துக் கொண்டார்கள். அவர்கள் தேர்வு செய்த பலர்,

ரொம்ப நாட்களுக்குப் பின், அடுத்த வாரத்தை ஆவலுடன் எதிர்பார்க்க வைக்கும் ஒரு டீ.வி. தொடர்!



◆ சேது

புதுமுகங்கள். இரண்டாவது வாரக் கதையில் நடித்துள்ள நெப்போலியன் அதற்கு முன் ஒரு படத்தில்தான் தோன்றியிருக்கிறார். அதே கதையின் நாயகி ஜோதிக்கு இது முதல் நடிப்பு அனுபவம்...''

''இரண்டாவது கதை மிக வலிமையானது. அதை ஆரவாரம் இல்லாமல் சொல்லியிருப்பதால் அதன் வலிமை கூடியிருப்பதாகத் தோன்றுகிறது...''

''மனைவி சாது, புத்தகப் பிரியை, கணவன் முரடன், பொறுப்பில்லாதவன்... இந்த முரண்பாடு நெப்போலியன் - ஜோதியின் உருவ உயரத்தில் உள்ள வித்தியாசத்தின் மூலமே உணர்த்தப்பட்டு விடுகிறது. வசனம் தன் பங்கைச் செய்கிறது. அதற்கும் மேல் நடிப்பில் ஆரவாரம் தேவையில்லை என்பது என் கருத்து. கணவன் முரடன் என்பதை உணர்த்த வன்முறைக் காட்சிகள் தேவையில்லை. வாழ்க்கையில் போதும் போதும் என்கிற அளவுக்கு வன்முறை இருக்கிறது. அதனால்தான் அந்தக் கதையில் முதலில் அமைத்திருந்த கோழி உரிக்கும் காட்சியை நீக்கி விட்டேன். அதைப் பார்த்த போது மிகவும் குரூரமாகப் பட்டது. சில கணங்களுக்குக் கூட அது வரக் கூடாது என்று தோன்றியது... ஆக்கபூர்வமான விஷயங்களை நாம் சொல்ல வேண்டும். இந்தத் தொடரில் எல்லாக் கதைகளுமே ஆக்கபூர்வமானவை.''

''எல்லாக் கதைகளும் பெண் விடு



◆ தொடரின்...



◆ ....சில காட்சிகள்



தலை, சமத்துவம் பற்றியனவா?''

''பெரும்பாலானவை அப்படித்தான் அமைந்து விட்டன...''

''சுகாசினி எடுத்த 'பெண்' தொடரை இது நினைவூட்டுமே?''

''அதனால் என்ன? சில விஷயங்களைத் திரும்பச் திரும்பச் சொல்லத்தான் வேண்டும். அதில் தவறில்லை...''

''இலகவதியின் சிறு கதைகளை டீ.வி.க்குத் திரைக்கதையாக்கிய அனுபவம் எப்படியிருந்தது...? நடைமுறை சிக்கல்கள் என்ன...?''

''சிக்கல்கள் எதுவும் இல்லை. இந்தப் பணியை மிகவும் ரசித்து, சந்தோஷத்துடன் செய்து வருகிறேன். தயாரிப்பாளர்களின் ஒத்துழைப்பு இதற்குக் காரணம். சினிமா துறையில் உள்ளது போன்ற சில நிர்ப்பந்தங்கள் இத் துறையில் இல்லை. 'கலெக்ஷனுக்காக'க் காட்சிகள் அமைக்க வேண்டியதில்லை. அதனால் மிகச் சுதந்திரமாக 'டென்ஷன்' இன்றிப் பணியாற்ற முடிகிறது. இந்த யூனிட்டில் எல்லோருமே அப்படி உணர்கிறார்கள். முதன் முதலாகக் காமெராவைச் சந்திக்க வந்த காயத்ரி பயத்துடன் வந்தார். 'நடிப்பு இவ்வளவு இலகுவானதா!' என்று வியந்து போனார். அனுபவமுள்ள ஐஸ்வர்யா கூட எங்களுடன் பணியாற்றுவது மிகவும் சந்தோஷம் அளிக்கிறது என்றார். இதற்குக் காரணம் நடிக நடிகையர்களின் கவர்ச்சியைப் பிரதான மாக்காமல் இயல்பான நடிப்புக்கு முக்கியத்துவம் தந்திருப்பதுதான்...'' என்றார் லெனின்.

இயக்குனர் சோமு, ஒளிப்பதிவாளர் கண்ணன், லெனின் ஆகியோரிடையே சிறப்பான ஒத்துழைப்பு காணப்படுகிறது. 'பெண்' தொடருக்கு அடுத்தபடியாக இளையராஜா இசையமைத்துள்ள டீ.வி. தொடர் இதுதான்.

– சீதா ரவி

படங்கள் : யோகா

அருள்வாக்கு

வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள், ஏழை விடுதிகள், அநாதாசிரமங்கள் முதலியவற்றைப் போய்ப் பார்த்தால் தெரியும் மனுஷ்யர்கள் எத்தனை தினுசான கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள் என்பது. இவற்றை மஹான்கள் தான் என்றில்லை, சாதாரண ஜனங்களான நாமும் ஓரளவுக்குத் தீர்த்து வைக்க முடியும். இம் மாதிரியான இடங்களைப் போய்ப் பார்த்தால் நம் போன்றவர்களின் உபகாரத்தைக் கூட ஈச்வரன் எத்தனை ரூபங்களில் வந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று தெரியும்.

நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், துக்கம் எங்கே உண்டோ அங்கே வலுவில் போய், அந்த துக்க நிவிருத்திக்கு நம்மால் ஆகக் கூடியதை யெல்லாம் பண்ண முயலுவதேயாகும். பணத்தாலோ, சரீரத்தாலோ, வாக்காலோ நம்மால் முடிந்த உதவியைப் பண்ண வேண்டியது நம் கடன், கடமை.

இதைத்தான் தர்மம், அறம் என்று சொல்வது. இதைச் செய்வதால் எதிராளிக்கு வாஸ்தவத்தில் எந்த அளவுக்கு துக்க நிவிருத்தி உண்டாகுமோ அதற்கு நாம் 'காரண்டி' சொல்ல முடியாது. அதற்கு நாம் ஜவாப்தாரியும் அல்ல. ஆனால் இப்படிச் செய்வதால் நமக்குச் சித்த சுத்தி நிச்சயமாக ஸித்திக்கிறது. அதாவது மனமாசு அகல்கிறது. திருவள்ளுவர் கூட தர்மத்துக்கு லக்ஷணம் சொல்லும் போது 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்றுதான் சொல்கிறார்.



– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பரிசு

ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

எழுத்தாளர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, கல்கி பொன் விழா நாவல் போட்டியின் முடிவு தேதி, அக்டோபர் 31, 1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/-
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/-
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-

முடிவு தேதி : அக்டோபர் 31, 1991

O இதற்கடுத்த ஒன்பது மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து, கல்கி பொன் விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.

O நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.

O கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.

O ஒவ்வொரு வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 - 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.

O கடிதப் போக்குவரத்து கிடையாது.

O சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெற போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.

O அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன் விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.


- ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.

இன்று முதல் தேதி. சம்பள நாள். மாதாந்திர அவஸ்தை தினம். கணேசனுக்கு அறவே பிடிக்காத நாள். தூங்கி எழுந்திருக்கும்பொழுதே மனக்கண் முன்னால் வந்து பயமுறுத்தினார்கள் கடன்காரர்கள்.

மற்ற நாட்களில் இவனைக் கண்டாலே 'கல் விழுந்த காக்காய்க் கூட்டம்' மாதிரி பயந்து ஓடுபவர்களுக்குச் சம்பள நாளன்று பயம் அற்றுப் போகும். இடைத் தேர்தல் தொகுதி மாதிரி இவனையே சுற்றிச் சுற்றி வருவார்கள். கையில் கிடைக்கும் சொற்ப சம்பளத்தில் யார் யாருக்கு எவ்வளவு கொடுப்பது என்று புரியாமல், தொகுதிப் பங்கீட்டுப் பிரச்னையில் சிக்கிக் கொண்ட தலைவர் மாதிரி தலையைப் பிய்த்துக் கொள்வான் இவன்.

கணேசனின் கடன் இடம், பொருள், ஏவல் பார்ப்பதில்லை; கௌரவம் பார்ப்ப தில்லை; 'ஜாதி, மதம், ஆள், நேரம், காலம், அளவு எதையும் பார்ப்பதில்லை. பியூன் முதல் மானேஜர் வரை எல்லாரிடமும், கடன் வாங்குவான் கணேசன். வட்டியில்லா 'கைமாத்து'க் கடனிலிருந்து ஆளையே அமுக்கி விடும் 'அஞ்சு வட்டி' கடன் வரை வாங்குவான்.

காப்பி குடிப்பதற்குக் கூட கால் மணி நேரம் யோசனை செய்து, பின் கைவிட்டு விடும் ரகம்தான் கணேசன். இருப்பினும் செலவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வாங்கும் சம்பளத்தில் பெரும் பகுதியை மனைவி, குழந்தைகளின் மருத்துவச்



முதல் தேதி

செலவே சாப்பிட்டு விட, எஞ்சிய பணத்தில் குடும்பத்தைச் சமாளிக்க முடியாமல், கடன், கைமாற்று என்று திண்டாடிக் கொண்டிருக்கிறான்.

''ஏங்க... இன்னிக்குச் ச ம் ப ள நாள்...'' என்றபடி வந்தாள் மனைவி கௌரி.

''ம்... ம்...'' என்றான் கணேசன்.

''இந்த மாசமாவது கிரைண்டர் வாங்கித் தாங்க...'' என்று கொஞ்சம் கெஞ்சல், கொஞ்சம் தயக்கம், கொஞ்சம் ஆவல் எல்லாம் கலந்த குரலில் கேட்டாள் அவள்.

''ம்.. வாங்கிடலாம்... வாங்கிடலாம்...'' என்று அவனும் நம்பிக்கை, சந்தேகம், பயம் எல்லாவற்றையும் சம விகிதத்தில் கலந்து 'பட்டும்' படாமலும் பதிலளித்தான்.

''நானும் ஒரு வருஷமாக் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீங்களும் சரி... சரின்னு சொல்லி ஏமாத்திக்கிட்டே இருக்கீங்க...'' என்றாள் அவள் குற்றம் சாட்டும் தொனியில்.

வாஸ்தவம்தான். அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போவதால் ஆட்டுக்கல்லில் மாவாட்ட முடியவில்லை அ வ ள ா ல். வெளியில், காசு கொடுத்து 'மாவு மிஷினில்' அரைத்து வரும் மாவு அவனுக்குப் பிடிப்பதில்லை. எனவே, எப்படியாவது

ப.ஜீவானந்தம்

கிரைண்டர் வாங்கித் தருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறாள். வாங்கித் தர அவனுக்கும் ஆசைதான். ஆனால், முடியாமல் போய்க் கொண்டிருக்கிறது.

''பேசாமலே இருந்தீங்கன்னா எப்படி? நீங்க என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. இந்தத் தடவை கிரைண்டர் வாங்கித் தந்தே ஆகணும்... ஆமாம்.... சொல் விட்டேன்...!'' என்றாள் கௌரி.

இந்த முறை எப்படியும் கிரைண்டர் வாங்கித் தந்து விடுவது என்று நேற்றே முடிவு செய்து விட்டிருந்தான் கணேசன். காரணங்கள் இரண்டு. கௌரி சொன்னது போல், கடந்த ஒரு வருடமாகவே 'இதோ!... அதோ!' என்று கூறிக் கொண்டிருக்கிறான்; இனிமேலும் இப்படியே இழுத்

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப்
போட்டி - '91
ரூ. 500/-
மூன்றாவது பரிசுக்
கதை - 1





''டி.வி. டைரக்டர் பதவிக்குப் பல பேர் போட்டியிட்டுக் கடைசியில் 'தொல் பொருள்' ஆராய்ச்சியாளருக்குத்தான் சான்ஸ் கிடைச்சுதாமே!''

''ஞாயிற்றுக்கிழமை சினிமா செலக்ட் பண்றதுக்காகத் தேர்ந்தெடுத்திருப்பாங்க!''

- குரு கிருஷ்ணா

தடிப்பது முறையல்ல.

இரண்டாவது காரணம் : 'பயம்'. இவ்வளவு நாட்களாக அவளும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். 'ரேடியோ விளம்பரப் பெண்களை'ப் போல் எப்பொழுது சப்தம் போடப் போகிறாளோ தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் ரேடியோ வைக்கவே பயமாக இருக்கிறது கணேசனுக்கு. ஒவ்வொருத்தியும் புருஷனை என்ன விரட்டு விரட்டுகிறார்கள். 'கிரைண்டர் வந்தால்தான் இட்லி, இல்லையென்றால் பட்டினி' என்று மிரட்டுகிறாள் ஒருத்தி; கௌரி இது வரை இப்படியெல்லாம் பேசவில்லை. எனினும் எந்தக் கணமும் அவள் 'மிரட்டல் பேர்வழி'யாக மாறக்கூடிய அபாயம் இருப்பதை உணர்ந்ததால் உடனடியாக கிரைண்டர் வாங்கித் தர முடிவு செய்து விட்டிருந்தான் கணேசன்.

அதைச் சொல்லவும் செய்தான்; ''இந்தத் தடவை கண்டிப்பா வாங்கித் தர்றேன் கௌரி.. போதுமா?'' என்று. ஆனால் கௌரிக்கு நம்பிக்கை வரவில்லை. எத்தனை முறை ஏமாந்திருக்கிறாள் அவள்! எனவே சந்தேகம் விலகாத குரலில் கேட்டாள். ''அதெப்படி அவ்ளோ நிச்சயமாச் சொல்றீங்க?''

''ஆபீஸ்ல இரண்டாயிரம் ரூபா சீட்டு கட்டிக்கிட்டு வர்றம் இல்ல. இன்னிக்குச் சீட்டு ஏல நாள். எப்படியாவது அந்தச் சீட்டை எடுத்துடறேன். கிரைண்டர் வாங்கிடலாம்...''

''நிச்சயமாத்தானே சொல்றீங்க? ஏமாத்த மாட்டீங்களே?''

''நீ கவலையே படாதே. சாயந்திரம் வரும்போது கிரைண்டரோட வர்றேன். போதுமா?''

கௌரியின் கண்களில் மெல்ல மெல்ல நம்பிக்கை படர, இப்பொழுதே கிரைண்டர் வீட்டுக்கு வந்து விட்டாற்போன்ற சந்தோஷம் முகத்தில் பூத்தது.

கிரைண்டர் பற்றிய ஞானம் ஏதும் இல்லாத காரணத்தால், எந்த பிராண்ட் வாங்குவது, எந்தக் கடையில் வாங்குவது என்பதையெல்லாம் ஆபீஸ் நண்பர்களிடம் கேட்டறிந்தான் கணேசன். மதியம் உணவு இடைவேளையின் போது கடைக்கு ஃபோன் செய்து விலை விவரம் விசாரித்தான். ''எப்பப் பார்த்தாலும் 'இல்லை...' பாட்டுப் பாடறவன் கிரைண்டர் வாங்கப் போறானா?'' என்று பார்த்த ஆச்சரியப் பார்வைகளை 'ஹி... ஹி...' என்று அசடு வழிந்து சமாளித்தான்.

சாயந்திரம் ஐந்து மணிக்குச் சம்பளக் கவர் கைக்கு வந்து விடும். கடன்காரர்கள் மதியம் மூன்று மணிக்கே முற்றுகையைத் தொடங்கி விட்டார்கள். இப்போது விட்டு விட்டால் இவனை அடுத்த மாதம்தான் பிடிக்க முடியும் என்பது எல்லோருக்குமே தெரியுமாதலால், கசாப்புக் கடை காக்கை மாதிரி ரொம்பவும் நெருங்கியும் வராமல், ரொம்பவும் விலகியும் போகாமல் இவன் பக்கமே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

சம்பளக் கவர் கைக்கு வந்தது. குறுநில மன்னர்களுக்கு மானியம் அளிக்கும் மகாராஜாவைப் போல், அவரவர்க்குச் சேர வேண்டியதைக் கொடுத்து விட்டு, தன்னைச் சுற்றியிருந்த வியூகத்தை உடைத்துக் கொண்டு வெற்றிகரமாக வெளியே வந்த கணேசன், அவசர அவசரமாக லஞ்ச் ரூமை நோக்கி ஓடினான்.

ஏற்கெனவே தொடங்கிச் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்த ஏலத்தில் இவனும் போய்ச் சேர்ந்து கொண்டான். இவனைப் போலவே 'பணமுடை'க்காரர்கள் பலர் இருந்திருக்க வேண்டும். ஏலத் தொகை கன்னாபின்னாவென்று போய்க் கொண்டிருக்க, போட்டி போட முடியாமல் பின் தங்கிப் போனான் கணேசன். இறுதியாக, ஏகப்பட்ட தொகை தள்ளி எவனோ ஒருத்தன் சீட்டை எடுத்துக் கொள்ள, இவன் வெறுத்துப் போய் வெளியே வந்தான்.

கிரைண்டர் இல்லாமல் வீட்டுக்குப் போக வேண்டும் என்பதை நினைத்த போதே வேதனையாய் இருந்தது. வெறுங் கையோடு போய், கௌரியின் முகத்தில் எப்படி விழிப்பது என்ற குழப்பத்திலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். ''சரி... எப்படியும் சமாளித்துத்தானே ஆக வேண்டும்'' என்ற எண்ணத்தில் வீட்டை

நோக்கி நடந்தவனுக்கு, 'பிள்ளைகளுக்காவது ஏதாவது வாங்கிப் போகலாம்' என்ற எண்ணம் தோன்ற, ஏதோ ஒரு கடைக்குள் நுழைந்தான்.

பிஸ்கெட், கேக், சாக்லேட் என்று வகை வகையாய்க் குவிந்து கிடக்க, எதை வாங்குவது என்று புரியாமல் திணறிப் போன கணேசனின் பார்வையில் பட்டது அந்த பிஸ்கெட் பாக்கெட். யார் வீட்டிலோ ஒசியில் டீ.வி. பார்த்த போது, அதில் இந்த பிஸ்கெட்டைப் பார்த்ததாக ஞாபகம். ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வரும் கணவன் கையில் பிஸ்கெட்டைத் தூக்கிப் பிடித்தபடி வீட்டுக்குள் நுழைய, 'கமுக்... மொமுக்...' குழந்தைகளும் கவர்ச்சியான மனைவியும் சந்தோஷக் கூச்சல் போட, பிஸ்கெட் தின்பதே பிறவிப் பயன் என்பது போல் எல்லோரும் 'இந்த' பிஸ்கெட்டைத்தான் தின்று கொண்டிருந்தார்கள். எனவே, கணேசனும் இந்த பிஸ்கெட்டையே வாங்கினான்.

போகும் வழியில் இரண்டு ரூபாய்க்கு மல்லிகைப் பூ வாங்கிக் கொண்ட கணேசன், கௌரியை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று சிந்தனையிலேயே வீட்டை அடைந்தான். கதவைத் திறந்த கௌரியின் பார்வை அவனைத் தாண்டித் தெருவைத் துழாவியது. வெறும் தெருவைப் பார்த்தவளின் கண்களில் ஏமாற்றம் இருளாய்க் கவிய, உள்ளே செல்லத் திரும்பினாள்.

என்ன சொல்வது என்பது புரியாமல் தடுமாறிய கணேசன் ''கௌரி, இந்தா பூ'' என்று பூவை அவளிடம் கொடுத்தான். அவனை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல் பூவை வாங்கியவள் அப்படியே மேஜை மேல் வைத்து விட்டு உள்ளே போய் விட்டாள். படித்துக் கொண்டிருந்த பிள்ளைகளிடம் பிஸ்கெட்டைக் கொடுத்தான் கணேசன். வாங்கிக் கொண்ட பிள்ளைகள் உடனடியாக அதைப் பிரித்துத் தின்னாமல், ஒரு ஓரமாக வைத்து விட்டு, பிஸ்கெட்டில் ஒரு கண்ணும் புத்தகத்தில் ஒரு கண்ணுமாய்ப் படிப்பைத் தொடர்ந்தார்கள். என்ன செய்வது என்பது புரியாத கணேசன் படுக்கையில் சாய்ந்தான்.

மணி ஒன்பதுக்கு மேல் ஆகி விட்டது. சாப்பிட்டு முடித்தாயிற்று. பிள்ளைகள் தூங்கியும் விட்டார்கள். கௌரி கிரைண்டர் பற்றி இன்னமும் எதுவும் கேட்கவில்லை. சாப்பாடு பரிமாறும் போது கூட எதுவும் பேசவில்லை. அவளின் இந்த மௌனம் தான் அவனுக்கு வேதனையாய் இருந்தது. நெடுநேரம் தவித்துக் கொண்டிருந்தவன் அதற்கு மேலும் இந்த இறுக்கத்தைத் தாங்க இயலாதவனாய்த் தயங்கித் தயங்கி அடுக்களைக்குள் சென்றான்.

பாத்திரங்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்த கௌரி இவன் வந்ததை உணர்ந்தாள். எனினும் தெரிந்த மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை.

''கௌரி...'' என்றான் கணேசன்.

''ம்...''

''ம்.. வந்து... நீ சரியாச் சாப்பிடல போலருக்கே. உடம்புக்கு ஏதாவது...?'' என்று இழுத்தான்.

தலைநிமிர்ந்த கௌரி அவனை ஒரு வெற்றுப் பார்வை பார்த்தாள். மீண்டும் தலையைக் குனிந்து கொண்டு பாத்திரம் தேய்ப்பதில் மும்முரமானாள்.

''ம்... கௌரி... இந்தத் தடவை சீட்டு ரொம்ப ஜாஸ்தியா தள்ளிப் போயிடிச்சி. எடுக்க முடியல. அடுத்த மாசம் எப்படியாவது எடுத்து கிரைண்டர்...''

''நான் கிரைண்டர் பத்தி ஒண்ணுமே கேக்கலியே...'' என்றாள் அவள் 'பட்' டென்று.

''அது... வந்து... கௌரி...''

''தோ பாருங்க.. கிரைண்டர் பேச்சை விட்டுடுங்க. நான் அதையெல்லாம் மறந்தாச்சு. அதைத் தவிர வேற ஏதாவது இருந்தா பேசுங்க...'' என்றாள் அவள் அழுத்தமாக.

கணேசன் இப்போது மறுபடியும் தடுமாறினான். ''அதில்லை கௌரி... அது... வந்து...'' என்று ஏதேதோ உளறிக் கொட்டியவன், ''பூவை டேபிள் மேலேயே வச்சிட்டு வந்துட்டியே. அதைக் கொடுக்கலாம்னுதான் வந்தேன்'' என்று கையில் இருந்த பூவை அவளிடம் கொடுத்தான்.

''பூவுதானே... அங்கேயே வச்சிடுங்க. அது ஒண்ணுதான் எனக்குக் கொறச்சல்...''

முகத்திலறைந்தாற்போல் உணர்ந்த கணேசன் திரும்பி நடந்தான். பூவை மேஜை மேல் போட்டு விட்டுப் படுக்கையில் போய் உட்கார்ந்தான். ''உன் பூவுமாச்சு... நீயுமாச்சு... போய்யா...'' என்பது போல் அவள் பேசி விட்டதில் கோபம் கிளர்ந்தெழுந்தது. அடுத்த கணமே அடங்கியும் போனது. அவளைக் கோபித்து என்ன

''லிப்ட் தர்றதப் பத்தியில்லே.... இடையில் பாலம் வருதே... அதான் யோசிக்கறேன்...''

''லிப்ட்டுக்கும் பாலத்துக்கும் என்ன சம்பந்தம்...?''



பயன்? ஒரு கிரைண்டர் கூட வாங்கித் தர இயலாத தன்னுடைய 'கையாலாகாத் தனம்'தானே இதற்கெல்லாம் காரணம்!

எனினும், கௌரியின் எல்லை மீறிய கோபம், என்னதான் நியாயமானது என்றாலும், அவனை வெகுவாகப் பாதிக்கவே செய்தது. ஏனெனில், இந்தப் பத்து வருடத் தாம்பத்தியத்தில் அவள் இப்படியெல்லாம் கோபப்பட்டோ அலட்சியப்படுத்தியோ அவன் பார்த்ததில்லை. இதுவரையிலும் அவள் ரொம்பவும் நல்ல மனைவியாகத் தான் நடந்து கொண்டிருக்கிறாள்.

இப்பொழுதுதான் முதல் முறையாகக் கேட்டிருக்கிறாள். அதுவும் என்ன கேட்கிறாள்? 'பட்டுப் புடவை வாங்கித் தா...! நகை நட்டு வாங்கித் தா...!' என்றா கேட்கிறாள்? இல்லையே! 'எனக்கு உடம்புக்கு முடியவில்லை. கிரைண்டர் வாங்கித் தா' என்கிறாள். 'அதைக் கூட வாங்கித் தர எனக்குத் துப்பில்லாமல் போனதே' என்று தன்னையே நொ ந் து கொண்டவன் 'என்னை மன்னிச்சுடு கௌரி' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். பின் பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்து அந்த மாதத்திற்கான பட்ஜெட்டில் மூழ்கிப் போனான்.

அடுக்களை வேலைகளை முடித்துக் கொண்டு வந்த கௌரி, துவைத்துக் காயப் போட்டு எடுத்து வைத்திருந்த துணிகளை மடித்து பீரோவில் வைக்கலாம் என்று போன போது கண்ணில் பட்டது அந்த போட்டோ. கல்யாணமான புதிதில் எடுத்துக் கொண்டது. சற்றே வெட்கத்துடன் கௌரி பக்கத்தில் நின்றிருக்க, 'பளீ'ரென்று சிரித்துக் கொண்டிருந்தான் கணேசன். போட்டோவில் இருக்கும் கணேசனுக்குத் துளியும் சம்பந்தமில்லாத 'இப்போதைய' கணேசனின் முகம் மனக்கண் முன் வந்து நிற்க, கௌரிக்கு உள்ளுக்குள் ஏதோ உடைந்து நொறுங்கியது.

''ஏன் இப்படி மாறிப் போனார் இவர்? முன் வழுக்கை விழுந்து... முதுமை தட்டிப் போய்... முகமெல்லாம் இருளடைந்து... பத்தே வருடத்தில் ஏன் இந்த மாறுதல்? வயதானால் முடி கொட்டிப் போகலாம். முகக் களையும் போய் விடுமா என்ன? கண்ணில் இருந்த கவர்ச்சி மறைந்து போய், சோர்வும் சோகமும் ஏன் வந்து கப்பின? டக்... டக்கென்ற கம்பீர நடை ஏன் இப்படித் தளர்ந்து போனது? ஏன்... ஏன்...? இதற்கெல்லாம் வயதா காரணம்? இல்லை...! நாங்கள்தான் காரணம்! ஆம்! நோயாளியான நானும் நோஞ்சானான என் பிள்ளைகளும்தான் காரணம்! எங்களுக்காக உழைத்து உழைத்துத்தானே இப்படி ஓடாய்ப் போனார் இவர்!

எந்த விஷயத்தில் குறை சொல்ல முடியும் இவரை? எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லை. எப்பொழுதாவது என்னை அடித்திருப்பாரா, இல்லை அதிர்ந்துதான் பேசியிருப்பாரா? அல்லது, 'அப்பன் வீட்டிலிருந்து அதைக் கொண்டு வா.. இதைக் கொண்டு வா...' என்று அதிகாரம்தான் செய்திருப்பாரா? எனக்கும் என் பிள்ளைகளுக்கும் கொட்டிக் கொட்டி, கடனாளியாய்ப் போனதைத் தவிர வேறு என்ன சுகத்தைக் கண்டார் இவர்? இவரைப் போய்க் கோபமாகப் பேசி விட்டேனே நான்! கிரைண்டர் இல்லாவிட்டால் போனால் போகிறது.. சனியன்... செத்தா போய் விடுவேன்? இப்படித் தாறுமாறாக நடந்து கொண்டேனே! இன்னைக்கின்னு பாத்து ஏன் என் புத்தி இப்படிப் போச்சு! ஐயோ!

- மனத்திலேயே புலம்பிக் கொண்டிருந்தவளுக்கு அடுக்களை நிகழ்ச்சி கண் முன் வந்து நின்றது. பூவைக் கொடுத்த போது தன்னுடைய அலட்சியமான பதிலினால் தாக்கப்பட்ட கணேசன், அடிபட்ட முகத்துடன் அங்கிருந்து நகர்ந்தது நினைவுக்கு வர நெஞ்சுக்குள் ஏதோ 'பகீ'ரென்றது. அடி வயிறு கலங்கியது. கை கால் வெலவெலத்துப் போனது. கணவன் மேல் பரிதாபமும் பச்சாதாபமும் ஒருசேர எழுந்தது. ஒரு குழந்தையைப் போல் அவனை ஆதரவாய் மார்போடணைத்துச் சமாதானப்படுத்தும் தாயன்பு பொங்கிப் பெருக, அந்தக் கணமே அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல் கையும் காலும் பரபரத்தன.

துணிகளையெல்லாம் அப்படியே வீசியெறிந்து விட்டு ஓடியவள், மல்லிகைப் பூவை அப்படியே அள்ளிக் கொத்தாகத் தலையில் செருகிக் கொண்டு மழலையை வாரியணைக்கும் தாயின் உத்வேகத்துடன் அவசர அவசரமாகப் படுக்கைக்கு ஓடி வந்த போது, மன உளைச்சலினாலும் மாதாந்திரப் பற்றாக்குறையினாலும் களைத்துப் போன கணேசன், கால்களை மடக்கி, கைகளைக் கழுத்துக்கடியில் இடுக்கிக் கொண்டு குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாய்த் தூங்கிப் போயிருந்தான்.

''அங்கேதான் ஓசியில் உட்கார்ந்திருப்பவரைப் பிடிச்சுத் தள்ளணும்கிற வெறி எனக்கு வரும்!''

- போத்தனூர் புலிச்சோழன்



மாத்திரைகளால் ஞாபகசக்தி பெருகுமா?

O டி. கே. சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்.

OO கோடை காலத்தில் குழந்தைகள் முதல் பெரியவர் வரை ஐஸ்க்ரீம், ஐஸ் வாட்டர் சாப்பிட விரும்புகின்றனர். ஐஸ் சம்பந்தப்பட்டது தொண்டைக்குக் கெடுதல் என்பது உண்மையா? தாகம் தணிவதற்கு ஐஸுக்குப் பதில் என்ன சாப்பிடலாம்?

O டாக்டர் வித்யா, சென்னை.

OO மிகக் குளிர்ந்த நிலையில் உள்ள ஐஸ்க்ரீம் அல்லது குளிர்பானங்கள் பரிசுத்த மான முறையில் தயாரிக்கப்படுவ தாக இருந் தாலும் கூட நமது உடல் உஷ்ண நிலைக்கு நேர்மாறானவையாத லால் தொண்டைப் பகுதியில் தொற்று நோய்க் கிருமிகள் பற்றிக் கொள்ள அவை வசதி செய்யும். இத னால்தான் மிக அதிக உஷ்ணத்தில் இருந்து விட்டு வந்து உடனே குளிர்பானங்களை அருந்துவது உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கும் என்கிறோம். மேலும், உப்பு சேர்க்கப் படாத ஐஸ்க்ரீமும், பானங்களும் தாகத் தைத் தணிப்பதில்லை. இளநீர் அல்லது உப்பு சேர்த்த மோர் போன்றவைதாம் கோடைக் காலத்திற்குச் சிறந்தது.

O சிவ. ஸ்ரீநிவாசன், கும்பகோணம்.

OO ஞாபக சக்திக்காக இப்போது மருந்துக் கடைகளில் மாத்திரைகள் வந்துள்ளனவே அவற்றைப் பயன்படுத்த லாமா?

O டாக்டர். இராஜகோபாலன் (ஹோமியோபதி) :

OO அலோபதியில் ஞாபக சக்திக் கென்று தனி மருந்து ஒன்றும் கிடையாது. பொதுவாக இது ஊட்டச் சத்துக்குறை வால் ஏற்படுவதால் பாதிக்கப்பட்டவ ருக்கு விட்டமின் சத்து நிறைந்த மாத்தி ரைகளை அலோபதி மருத்துவர்கள் கொடுப்பார்கள். இப்போது கடைகளில் பிரபலமாக உள்ள ஞாபக சக்தி மாத் திரை, ஹோமியோபதி வகையைச் சேர்ந் தது. இதை ஹோமியோபதி மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் உட்கொள்வது தவறு.

O டி. திருமால்வளவன், தஞ்சாவூர்.

OO "Fungus" என்று சொல்லப் படும் சரும நோய் எதனால் ஏற்படுகின்றது? இதனைப் போக்குவதற்கு என்ன வழி?

O டாக்டர். கிருஷ்ணா, சென்னை - 4.

OO "Fungus' என்பது காளான் வகையைச் சேர்ந்த சருமப் பாதிப்பு. உட லைச் சுத்தமாக வைத்துக் கொள்ளா விடில், விரல் இடுக்குகள், அக்குள், இடுப்புப் பகுதி, தொடை இடுக்குகள் போன்ற இடங்களில் இது தோன்றக் கூடும். வியர்வை போக இருமுறை குளித்து, சருமத்தை ஈரமின்றித் துடைத்து, துவைத்து, வெய்யிலில் உலர்ந்த ஆடை களை அணிந்து வருவது மிக அவசியம். இதையும் மீறி நோய் தோன்றி விட்டால் தோல் வைத்திய நிபுணரை அணுகி அவரின் ஆலோசனைப்படி நடப் பது நல்லது.

தொகுப்பு : கீதா மோஹன்.



சுபமுகா

அன்பே செம்பு!



அன்பு செம்பு,

இந்தக் கடிதத்தை எழுத வைத்தது ஒரு சாதாரண எலுமிச்சம் பழம் என்பதை என்னாலேயே ஒப்புக் கொள்ள இயல வில்லை. ஆனால் அதுதான் உண்மை!

பனிச்சென்று எலுமிச்சை நிறக் கன்னி நீங்கள்! உங்களைப் பார்த்தாலேயே விரில் சோப் போட்டுக் கொண்டு அருவியில் குளிக்கிற திருப்தி கிடைத்து விடுகிறது. அப்படிப்பட்ட அழகான வதனத்தில் - தொட்டால் ஒடியுமோ எனக்கூடிய விரல் களில் ஒன்றில் எலுமிச்சை! எலுமிச்சையின் விரலில் ஒரு எலுமிச்சையா? ஆஹா! என்ன ஆயிற்று உங்கள் விரலுக்கு? எலுமிச்சம் பழத்தை

விரலில் சொருகிக் கொண்டு வந்தால், ஒரே ஒரு காரணம்தான் இருக்க வேண்டும் என்பது புரிபட்டு நாங்கள் மிகக் கலங்கிப் போனோம். உங்களுக்கு நகச்சுத்து வந்தது குறித்து மிக்க பரிதாபப்பட்டு நான் அழ, எங்கள் தெருப் பெண்கள் இருவர் குடத்துடனேயே வந்து விட்டார்கள் என் றால் என் அன்பின் பரிமாணத்தை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்!

ஆனாலும் - அந்த எலுமிச்சை மேல் எனக்கு எக்கச்சக்க பொறாமை வந்தது மேடம்! என்ன அழகாக உங்கள் விரலைக் கப்பென்று பிடித்துக் கொண்டிருக்கிறது! அந்த எலுமிச்சையாக அட்லீஸ்ட் நான் பிறந் திருந்தால் என் பிறவிப் பயன் பெற்றிருப் பேன் என்கிற ஆதங்கம் என் மனசுள் முகிழ்த்திருக்கிறது.

என்றென்றும் அன்புடன்,
மோகன்.

யோவ்,

உடம்பு எப்படி இருக்கு?

என் பெயர் செண்பகக் குமாரி. அதைக் கண்றாவியாக 'செம்பு', 'குடம்' என்றெல் லாம் சுருக்க உமக்கு முதலில் என்ன அருகதை இருக்கிறது?

பார்க்கிறதுக்கு ஆள் தம்மாத்தூண்டு இருந்துக்கினு என்னென்ன டயலாக் எழுதுற நீ? எலுமிச்சையா நீ பிறந்திருக்க ணுமா? அப்படி நீ பிறந்திருந்தா முதல் காரியமா உன்னை அரிவாள்மணையில் வைத்து இரண்டு கூறா வெட்டி ஜூஸ் போட்டு முழுங்கியிருப்பேன். அக்ஹாங்!

விரலைக் 'கப்'பென்று பிடிக்கிறதுக்கு எலுமிச்சையா ஆகணுமா? ஏன், என் காலில் செருப்பு கூட கப்பென்றுதான் பிடித்திருக்கிறது! செருப்பாகவும் ஆயிட றியா?

கஸ்மாலம்.

அன்பில்லாமல்,
செண்பகக் குமாரி.

அன்புள்ள குமாரி செண்பகக் குமாரி அவர்களுக்கு,

போதுமா? இவ்வளவு நீளமாக எழுதி நம் இருவருக்கும் உண்டான இடைவெளி யின் நீளத்தை அதிகப்படுத்த வேண்டாமே என்றுதான் நான் 'அன்பு செம்பு' என்று 'சிக்'காக இக்காக எழுதினேன். அதற்காகக் கோபப்படுவதா?

உங்கள் கடிதம் கண்டு முதலில் மகிழ்ச்சி. அப்புறம் திகைப்பு. மகிழ்ச்சி என் கடிதத்தை அங்கீகரித்துப் பதில் கடிதம் கொடுத்து விட்டீர்களே என்று. திகைப்பு - நீங்கள் எப்போது மெட்ராஸ் தமிழ் கற்றீர்கள் என்று! மரியாதை திடீரென்று வீசப்பட்டு, 'யோவ்' 'நீ' என்றெல்லாம் எழுதியிருக்கிறீர்கள். நீங்களும் நானும் ஒரே பாதையில் வெற்றி நடை போடப் போகிறவர்கள் என்பதால், நான் மாத்திரம் வேறு பாதையில் போகலாமா? ஆகையால் - 'நீங்கள்' இனி வேண்டாமே!

உன் கடிதம் கண்ட பிறகு போதை கூடி விட்டது. எலுமிச்சையாக நான் பிறந்திருந் தால், நீ என்னை ஜூஸ் ஆக்கியிருப்பாய் என்பது கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந் தேன். அதை நீ குடிக்கும் போது - ஆஹா, உன் உதடு, நாக்கு, உள் நாக்கு இவற்றை நான் ஸ்பரிசிப்பேன்! அந்த அழகான தொண்டையில் இறங்கி, பக்கவாட்டில் உன் இதயத்தையும் தொட்டு, என்னே பாக்கியம்! உனக்கு இதயம் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க ஒரு அருமையான சான்ஸ்! என்ன செய்வது? அந்தப் பாக்கியம் இல்லையே!

உன் காலைக் கப்பென்று பிடிக்க செருப்பாக மாறுவது குறித்து என் பரிபூரண சம்மதம்! அதுவும் புதுச் செருப்பாக வேண்டும்! அப்போதுதான் உன் காலைக் கடித்து ருசிக்கும் பாக்கியம் கிடைக்கும்.

கப்பென்று பிடிக்க வேறு என்னவெல் லாம் ஆகலாம் என்பது குறித்தும் மடல் எழுதவும்.

வெ(ற்)றி அடைந்த அன்புடன்,
மோகன்.

உம்மை எப்படி விளிப்பது என்பது பற்றி விழிக்க வேண்டியிருக்கிறது. அதனால் கடிதத்துக்கு வருகிறேன்.

உமக்கு வேறு வேலையே கிடையாதா?!

உம் கடிதம் கண்டு இனி ஜூஸே சாப்பிடுவதில்லை என்கிற முடிவுக்கு நான் வர வேண்டியதாயிற்று. ஜூஸை நினைத்தாலே அடிவயிற்றிலிருந்து குமட்டுகிறது!

இன்னொரு விஷயம் - உமது கடிதம் கண்டு அங்கீகரித்து நான் பதில் கடிதம் எழுதியதாகக் கோட்டை மட்டும் கட்டாதீர்கள். போலீஸுக்குப் போவ தென்றால் சாட்சியங்கள் வேண்டுமே! உங்கள் கடிதங்கள் எனக்குத்தான் எழுதப்பட்டவை என்கிற போதுமான ஆதாரத்தை வைத்து - நீவிர் கைவிலங் கோடு ஜீப் ஏறும் நாளை எதிர் பார்த்து -

செண்பகக் குமாரி.

அன்புள்ள குரைக்கிற, ஆனால் கடிக்காத நாய்க்கு,

(எப்படி விளிப்பது என்கிற குழப்ப மெல்லாம் யாமறியோம்!)

உங்கள் கடிதம் கண்ட பிறகு பயந்து விடலாம் என்றுதான் முயற்சி செய்தேன். உங்கள் அழகுவதனம் அந்த முயற்சியைத் திருவினையாக்கவில்லை என்பதால் இந்த மடல்!

'உமக்கு வேறு வேலையே கிடையாதா?' என்பது உங்கள் கேள்வி. என்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. யான் பட்டதாரி - தெரியாத்தனமாய் வங்கியில் வேலை கொடுத்து விட்டார்கள். நல்ல வேலை - அருமையான சம்பளம் - இப்போது செமத்தியான, 'பலான' மனைவி வேறு கிடைக்கப் போகிறாள் என்கிற எக்கச்சக்க மகிழ்ச்சியிலிருக்கிறேன்.

என்றென்றும் வாஞ்சையுடன்,
மோகன்.

ஏய் பூஞ்சை உடம்புக்காரா,

என்ன தைரியமிருந்தால் என்னை நாய் என்பாய்? எனக்கிருக்கிற கோபத்துக்கு அப்படியே கடித்துக் குதறியே விடுவேன். அப்புறம் வயிற்றைச் சுற்றி ஊசி போட்டுக் கொள்ள நீதான் டாக்டரிடம் போக வேண்டியிருக்கும். இந்த கெக்கே பிக்கே விவ காரத்தை என் அண்ணனுக்குக் கோடி காட்டினால் கூட போதும். ஒரு படையுடன் திரண்டு வந்து உன் காலுக்குக் கட்டுப் போட ஆவன செய்தே தீருவான். எப்படிச் சௌ கரியம்?

எனது விரல் பூரண குணம் பெற்று விட்டது. உமது தலைக்கு ஏறியிருக்கும் காதல் ஜுரம் இறங்க இந்த எலுமிச்சம்பழம் உதவும் என்பதால் இத்துடன் இணைத் திருக்கிறேன். தலையில் தேய்த்துக் கொண்டு பயன் பெறவும்.

செண்பகக் குமாரி.

அன்புடையீர்,

எனது மச்சான் - அதுதான் உமது சகோதரர் வந்து எனக்குக் கால்கட்டுப் போடப் போவதாக எழுதியிருந்தீர்கள். அவ்வளவு தூரம் எதற்கு வம்பு? தங்களுக்கு இஷ்டம் இல்லையென்றால் ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள். நான் வேறு பெண் ணைக் கணக்குப் பண்ண வசதியாக இருக்கும். எப்படிச் சௌகரியம்?

(இந்தக் கடிதம் சற்று கோணல் மாண லாக எழுதப்பட்டிருப்பது குறித்து ஒரு பின் குறிப்பு : எலுமிச்சம்பழ மோதிரம் போட்டுக் கொண்டு எழுத முடியாமல் எழுதியிருக்கிறேன்.)

மணந்தால் செண்பகக் குமாரி -
இல்லையேல் வேறு ஏதாவது குமாரி!
இப்படிக்கு,
மோகன்.

அன்புள்ள திரு. மோகன் அவர்களுக்கு,

தங்களுக்கும் நகச்சுத்தி வந்தது குறித்து மிக்க வருந்துகிறேன். எந்த வலியை வேண்டுமானாலும் தாங்கிக் கொண்டு விடலாம். ஆனால் இந்த நகச்சுத்து படுத்துகிற பாடு - அப்பப்பா! அனுபவிப்பவர்களுக்குத்தான் அது புரியும்! பாவம், எப்படித்தான் நீங்கள் சாப்பிடுகிறீர்களோ? விரலைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வும். விரல் குணமாகிக் கொண்டு வருகிற விவரம் குறித்து அடிக்கடி கடிதம் எழுதவும்.

அதென்னவோ, உங்களுக்கு நகச்சுத்து என்று கேள்விப்பட்டதும் எனக்கு உங்கள் மீது எக்கச்சக்க அன்பு வந்து விட்டது.

உங்களைச் சந்திக்க வேண்டும், நகச் சுத்து பற்றி இன்னும் பேச வேண்டும், சுத்தோ சுத்து என்று பீச், மியூஸியம், மகாபலிபுரம் என்று சுற்ற வேண்டும் என்று ஆசை வந்திருக்கிறது.

எப்போது சந்திக்கலாம்?


காதலுடன் தங்கள்,
செம்பு.

செம்பு டார்லிங்,

உன் விரலை அலங்கரித்த எலுமிச்சை என்பதால் அதைத் தூக்கி எறிய மனமில் லாமல் என் விரலில் மாட்டிக் கொண் டேன். நீ மாட்டிக் கொண்டாய். மன்னிக்க வேண்டும், எனக்கு நகச்சுத்தும் இல்லை, தலைசுத்தும் இல்லை.

நம் என்றும் வாடாத காதலுக்குச் சான்றாக, அந்த வாடிப் போன எலுமிச்சையைப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

முத்தங்களுடன்,
மோகன்.


Colts
பாரத நாடு
பழம்பெரும்
நாடு
இந்தியாவின் விடுதலை, உலக
நாடுகளுக்கு ஒரு உன்னத நெறியைப்
போதித்திருக்கிறது. அடக்குமுறையை
அகிம்சைமுறையில் எதிர்கொளவதற்கும்
வெற்றி கொள்வதற்கும் நம் சுதந்திரப்
போராட்டம் சொல்லிக்கொடுத்திருக்கிறது.
மதங்களின் ஒருமையில், இனங்களின்
ஒருமையில் பாரதத்தின் விடுதலையைப்
புதுப்பிப்போம். அடுத்த நூற்றாண்டை
அமைதிமிக்கதாக்க ஆயத்தம் செய்வோம்.
விடுதலைத் திருநாள்
வாழ்த்துக்கள்
KONGARAR
GROUP
விஜயகுமார் மில்ஸ் லிமிடெட்
காலயம்புத்தூர் போஸ்ட் பழனி - 624 615 போன் : 2591 (5 லைன்ஸ்)
டெலக்ஸ் : 04411 201 VKN IN ஃபேக்ஸ் : 04545-2595
SAS/VKM-6-91

சிரிக்க வையுங்கள்;



சிங்கப்பூர் செல்லுங்கள்!

"போலீஸ் ஏன் அந்த அச்சாபீஸ் உரிமையாளரை 'அழைச்சிட்டு'ப் போறாங்க?"

"அவருடைய அச்சாபீஸில் அச்சடிக்கப்பட்ட ஒரு திருமணப் பத்திரிகையில்



'சுபாதினத்தில்,' 'சுபாயோகத்தில்,' 'சுபா முகூர்த்தத்தில்' என்று அச்சாகியிருப்பது அச்சுப் பிழை என்று சொன்னால் நம்ப மறுக்கிறார்களாம்!"

- வாசுகி, ஈரோடு - 1.

OOOOO

"அந்த நடிகை கில்லாடிதாம்பா."

"எப்படிச் சொல்லறே?"

பதவி போன பிறகும் அரசு வீட்டைக் காலி செய்யாதது ஏன்?



"கல்யாணத்துக்குப் பிறகு நான் நடிக்கப் போறதில்லை; ஆனா டைவர்ஸுக்குப் பிறகு கண்டிப்பா நடிப்பேன்'னு பத்திரிகையில பேட்டி கொடுத்திருக்காங்களே!"

- நிவேதிதா, திருச்சி - 2.

OOOOO

O நண்பர் சீனு 'விட்' அடிப்பதற்குக் காத்திருப்பார். ஒரு நாள் நண்பர் ரகு புதிதாக வாங்கிய அளவு பெரிதான காலணியை எங்களிடம் காண்பித்தார். பிறகு எல்லோரும் நடக்கையில்



புதிய ஷூ அணிந்த நண்பர் ரகு மட்டும் மெதுவாக நடந்து வரவே, நான் திரும்பிப் பார்த்து, "என்னப்பா ஆச்சு?" என்று கேட்டேன். உடனே நண்பர் சீனு, "நாம் ரோட்டில் நடக்கிறோம்; ரகு ஷூவுக்குள்ளேயே நடக்கிறான், அதான்" என்று கிண்டலடிக்க, அங்கே சிரிப்பலை ஓய வெகு நேரமாகியது.

- எஸ். உமாபதி, சென்னை - 61.



''நம்ம நாட்டு நாணயத்தோட மதிப்பு குறைஞ்சு போயிருச்சாமே...!''

''அதனால பரவாயில்லே. எங்கிட்ட கடன் வாங்கின நூறு ரூபாயைக் கொடுத்திடு!''

- அ. அப்துல் பரீது, திருப்பத்தூர்.

O O O O O



''லஞ்சம் வாங்குவதைச் சட்டபூர்வமாக அனுமதித்த பின்பும் அரசு ஊழியர்கள் எதற்காகப் போராட்டம் நடத்தறாங்க?''

''ஒவ்வொரு வேலைக்கும் அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் லஞ்சம் மிகவும் குறைவாக உள்ளதாம்! எனவே, தொகை நிர்ணயத்தை நீக்கக் கோரிப் போராட்டம் நடத்தறாங்க!''

- அ. மணிவாசகன், சேலம் - 3.

O O O O O

O மாவட்டக் கல்வி அதிகாரி பள்ளி தணிக்கைக்கு வந்த போது, நான் எட்டாம் வகுப்புக்கு வரலாறு பாடம் நடத்திக் கொண்டிருந்தேன். என் வகுப்பில் நுழைந்த அவர் ஒரு மாணவனைப் பார்த்து, ''இந்தியாவின் குடியரசுத் தலைவர் யார்?'' எனக் கேட்டார்.




அந்த மாணவன் விழித்தான். நான், ''அதான்டா ஜனாதிபதி'' எனக் கூறி பதில் வர வழைக்க உதவி செய்தேன்.

உடனே அந்த மாணவன் தைரியமாக, ''இந்தியாவின் குடியரசுத் தலைவர் ஜனாதிபதி!'' என்றானே பார்க்கலாம்! அதிகாரி உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்.

-- கே. ராமலிங்கம், படாளம்.

O O O O O



கான்ஸ்டபிள்: சார்! ஐஞ்சு வருஷமா நாம தேடிட்டிருந்த கேடி கந்தப்பன் லெட்டர் போட்டிருக்கான்!''

இன்ஸ்பெக்டர்: என்ன எழுதியிருக்கான்?

கான்ஸ்டபிள்: இந்த ஐஞ்சு வருஷத்திலே அவன் உருவத்தில் ரொம்பவும் மாறிட்டானாம். அதனால அவனோட லேட்டஸ்ட் போட்டோவை அனுப்பி, இனிமே பத்திரிகையில் இதைப் பிரசுரம் பண்ணுங்கன்னு எழுதியிருக்கான்!

- என். உஷாதேவி, மதுரை.

O O O O O



''பதவி போன பின்னும் அரசு வீட்டைக் காலி பண்ணாம முரண்டு பிடிக்கறீங்களே... நியாயமா?''

''பதவியிலிருக்கும் போது நான் பண்ணின ஊழலுக்கு அரசு இன்னும் என்னை விசாரிச்சிட்டிருக்கே... இது மட்டும் நியாயமா?''

- பி. ஜி. பி. இசக்கி, சிவசைலம்.

O O O O O

முன்னேற்றப் பாதையில் பெண் சுதந்திரம்

'உன் மூக்கு ரொம்பச் சின்னதா இருக்கு. பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிச் சீராக்கணும். உன் அப்பாவிடம் சொல்லி ஏற்பாடு பண்ணு...' புகுந்த வீட்டார் ஒரு பெண்ணிடம் இப்படிப் பேசினால் என்ன நடக்கும்...?

பத்து வருடங்களுக்கு முன் இது நடந்திருந்தால் அந்தப் பெண் இந்த அநியாயத்துக்குப் பணிந்து போயிருக்கக்கூடும். ஆனால் இன்று அவள் ஒரு வழக்கறிஞரின் ஆலோசனையை நாடுகிறாள். விவாகரத்தை அப் பெண்ணின் தந்தை அச்சுறுத்தலாகத்தான் கையாள்கிறார், என்றபோதிலும் சட்ட ரீதியான நடவடிக்கையில் இறங்க அப் பெண் தயார் என்பதே பெரிய முன்னேற்றம் அல்லவா?



* சுமக்க மட்டுமே சுதந்திரம்...?

- இந்தச் சம்பவத்தை விவரித்தவர் இளம் வழக்கறிஞர் கிரிதர். இவர் மனைவி கீதாவும் வழக்கறிஞர். அவர் கூறினார் :

''ஒரு பெண் வேற்று ஜாதிக்காரரைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டாள். இருவரும் தத்தமது பெற்றோருடனேயே தொடர்ந்து வாழ்ந்தனர் என்பதால் இரு தரப்புப் பெற்றோருக்கும் உண்மை தெரியாமலே இருந்தது. கணவனுக்குத் திடீரென்று வெளியூருக்கு வேலை மாற்றலானது. அவன் பெற்றோர், அவனுக்கு வேறு திருமணம் நிச்சயிக்கப் போவதை அறிந்து, அப் பெண் அதைத் தடுக்கும் முயற்சியில் உண்மையைச் சொன்னாள். இரண்டாவது திருமணத்தை நிறுத்திவிட்ட போதிலும் பையனின் பெற்றோர் இவளை மருமகளாக ஏற்க மறுத்தனர். அந்த வாலிபனும், பெற்றோரைப் பகைத்துக் கொள்ளப் பயந்து மனைவியைக் கைவிட்டான். அப் பெண் அவன் பேரில் வழக்குத் தொடர்ந்தாள். வழக்கு அவளுக்குச் சாதகமாக முடிந்து அவன் அவளுக்கு maintenance தொகை வழங்க வேண்டும் என்று தீர்ப்பாகியது. இந்தக் கட்டத்தில் அந்தப் பெண் அப் பணத்தைப் பெறவே தயக்கம் காட்டினாள். காரணம், 'இவ்வளவு தூரம் வஞ்சித்தவனிடம் ஏன் கை நீட்டிப் பணம் வாங்க வேண்டும்?' என்ற மனக் கசப்புத்தான். அந்தப் பொருளாதார ஆதரவு இன்றியே தன்னால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையும்தான்.''

''இதைப்போன்ற பல சம்பவங்கள் பெண் சுதந்திரம் முன்னேற்றப் பாதையில் போய்க் கொண்டிருப்பதை உணர்த்துகின்றன'' எனக் கூறிய இந்த வழக்கறிஞர் தம்பதி, பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டனர் :

O வரதட்சணை தடைச் சட்டம் - இது அமுலுக்கு வந்த பிறகு துணிந்து பலர் புகார் செய்து வழக்குத் தொடுக்கின்றனர். திருமணம் ஆன பிறகு கேட்கப்படும் சீர் சௌத்திகள், அதன் விளைவாகப் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் போன்றவை வெளிச்சத்துக்கு வந்து விடுகின்றன.

O பணியிடத்தில் பெண்கள் ஆண்க

ளுக்கு இணையாகக் கருதப்பட்டு அவர்களுக்கு ஊதியமும் இதர வசதிகளும் பாரபட்சமின்றி வழங்கப்பட வேண்டும் என்று நமது அரசியல் சாசனத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இதைத் தவிர பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் விசேஷ கவனிப்பும் சலுகைகளும் தர அரசாங்கத்துக்கு அதிகாரம் உள்ளது.

O அமெரிக்காவில் கூட இல்லாத பேறு கால விடுப்பு வசதி (சம்பளத்துடன் மூன்று மாதங்கள்) நம் நாட்டில் சட்டபூர்வமாக அமுலில் உள்ளது.

O பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கும் பங்கு வழங்கும் சட்டம் 1989 இல் அமுலுக்கு வந்துள்ளது. இதன் மூலம் பெண்களுக்குக் கூடுதல் பொருளாதார சுதந்திரம் கிடைக்க வழியிருக்கிறது.

♦ நடை, உடை பாவனையில் சுதந்திரம்!



இவை போன்ற வேறு பல சட்டங்களும் உள்ளன என்றாலும் சமுதாயத்தில் நிலவும் சில முட்டுக்கட்டையான அம்சங்கள் இச்சட்டங்களின் முழுப் பயனையும் பெண்கள் அனுபவிக்க விடாமல் தடுக்கின்றன என்கின்றனர் கிதாவும் கிரிதரும்.

''உதாரணமாக, பெண்ணுக்குச் சொத்துரிமை இருந்தாலும், அவள் திருமணச் செலவைச் சுட்டிக்காட்டி அவ்வுரிமையை அவள் விட்டுக்கொடுத்திட வேண்டும் என்று வற்புறுத்திக் கையெழுத்துப் பெறும் சகோதரர்கள்தான் அதிகம்.

''வரதட்சணைத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் புகார் செய்ய முன்வருபவர்கள், பிறகு, 'எப்படியிருந்தாலும் நம் வீட்டுப் பெண் அவர்களுடன்தானே குடித்தனம் நடத்தணும்' என்று பின்வாங்கி விடுகிறார்கள்.

''சட்டமும் சில அம்சங்களில் சாதகமாக இல்லை. உதாரணமாக, (சதி) உடன்கட்டை ஏறுபவரும் சட்டப்படி குற்றம் புரிந்தவராகிறார். இதை எப்படி ஏற்பது? மூளைச் சலவை செய்யப்பட்டோ, வற்புறுத்தப்பட்டோதான் பெண்கள் உடன்கட்டை ஏறுவார்களேயொழிய விரும்பி அல்ல.

''கணவனால் கைவிடப்பட்ட பெண்ணுக்கு மாதாந்திர ஈட்டுத் தொகையாக ரூ 500 1973 இல் நிர்ணயிக்கப்பட்டது. இதுவே அதிகபட்சத் தொகையாக இன்று வரை வழக்கத்தில் உள்ளது. அவள் தனி மனுஷியானாலும் குழந்தைகளை உடையவளானாலும் இதே தொகைதான்! இத் தொகையைப் பெற அவள் மாதா மாதம் நீதிமன்றத்துக்கு வர வேண்டும். நகரங்களில் குடும்ப நீதிமன்றம் மூலம் இத் தொகை வழங்கப்பட்டாலும், குடும்ப நீதிமன்றங்கள் செயல்படாத ஊர்களில் கிரிமினல் கோர்டில் போய் ஒரு பெண் காத்திருக்க வேண்டும்!

'' 'ஒரு ஜனநாயக நாட்டில், குடும்ப அளவில் சமத்துவம் நிலவாவிட்டால், அந்த ஏற்றத்தாழ்வு எல்லா நிலைகளிலும் தொடரும். அங்கே ஜனநாயகம் வெற்றி பெற முடியாது' என்பது, அம்பேத்காரின் கருத்து. அதனால் தனிமனித அளவில் சிந்தனைகள், நோக்குகள் மாற ஆரம்பித்தால்தான் சட்டங்களாலும் சட்ட மாற்றங்களாலும் முழுப் பயன் கிடைக்கும்.

''இதற்கு மகளிர் அமைப்புக்கள் பெரிதும் உதவலாம். உதவிக் கொண்டிருக்கின்றன. ஆனால் வட இந்தியாவில் ஒலிப்பது போல் தென்னிந்தியாவில் இவர்கள்

குரல் பலமாக ஒலிப்பதில்லை...''

சட்டங்கள் உதவ வேண்டுமெனில் அவை என்ன என்பது முதலில் பெண்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமல்லவா? இன்றையக் கல்வி முறை இந்த அம்சத்தில் கவனம் செலுத்துகிறதா...? அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் லக்ஷ்மியிடம் கேட்டோம்.

''இந்த அம்சத்தில் போதுமான அளவு கவனம் செலுத்தப்படவில்லை என்பதுதான் உண்மை. கல்வித் துறையைச் சேர்ந்தவள் என்றாலும் அதை நான் வருத்தத்துடன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

''ஆனால் இதன் காரணமாகப் பெண் சுதந்திரம் முன்னேறாமல் இருக்கிறது என்று சொல்ல முடியாது. நிறைய முன்னேற்றங்கள் இருக்கின்றன. பெண்கள் முன்னை விட அதிகமாகக் கல்வி கற்கிறார்கள், வேலைக்குப் போகிறார்கள். இந்த இரண்டின் பொருட்டும் வீட்டை விட்டு வெளியுலகத்துக்கு வருகிறார்கள். மொபெட்டில் ஆபீஸுக்குப் போகிறார்கள். சில காலம் முன்பு இதை யாரும் சிந்தித்துக் கூடப் பார்த்திருக்க முடியாது. இப்படி தோற்றத்தில், நடை, உடை, பாவனைகளில் தன்னம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் இதெல்லாம் மட்டும் போதாது. இன்றையப் பெண் இன்னும் தன்னை உணரவில்லை; தன் பலத்தை உணரவில்லை. அதை அவள் அதிகமாக உணர உணரத்தான் பல கற்பனையான, நிஜமான தளைகளிலிருந்து விடுபட்டு நிற்பாள்.''

கொஞ்சம் விளக்கமாகச் சொல்லும்படி கேட்டதன் பேரில் டாக்டர் லக்ஷ்மி தொடர்ந்தார்:

''பெண், வீட்டுப் பணிகளை மட்டும் செய்து கொண்டிருந்தது போய் அதனுடன் வேறு வேலைகளையும் செய்ய ஆரம்பித்திருக்கிறாள். இதை தனது சுதந்திரத்தின் வெளிப்பாடாக அவள் எண்ணாமல் தன் பொறுப்பு அதிகமாகி விட்டதாக உணர்கிறாள். அதைப் பளுவாக, சுமையாக எண்ணுகிறாள். இது வருந்தத்தக்கது. வீட்டுப் பணிகளை ஆணும் பகிர்தல் அவசியம் என்று அவளுக்குத் தோன்றுகிறது. ஆனால் அதற்கு இடம் கொடுக்கவும் மனம் வரவில்லை. தொன்மையான மரபுக் கூறுகள் குறுக்கே நிற்கின்றன. இந்தச் சங்கடம் தீர வேண்டுமானால் அவள் தன்னை மாற்றிக் கொள்வது ஒன்றே வழி. கல்லூரியில் பிஸிக்ஸ் அல்லது எலக்ட்ரிகல் எஞ்சினியரிங் படித்த பெண், வீட்டில் ஒரு ஃப்யூஸ் மாற்றக் கணவனை எதிர்பார்ப்பதை நிறுத்த வேண்டும். தானே அதைச் செய்யலாமே என்று முனைய வேண்டும். அப்போதுதான் ஆண் வேலை, பெண் வேலை என்ற தீர்மானிக்கப்பட்ட எல்லைக் கோடுகள் அழியும். இந்த மாற்றங்கள் படிப்படியாகத்தான் வரும். அதுவரை பல துன்பங்கள் இருக்கத்தான் செய்யும். அவற்றைத் துணிவுடன் தாங்கத்தான் வேண்டும்.''

''ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பெண்ணே எல்லாவற்றுக்கும் முதல் முயற்சியை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் பலன் இருக்குமா?''

''ஆண் ஆதிக்க சமுதாயம் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. பெண் விரும்பினால் மிகவும் சுதந்திரமாக இருக்கலாம். இடையில் எதனாலோ ஒருவித தேக்கம் வந்து விட்டது. அந்தத் தேக்கத்திலிருந்து விடுபட பெண்கள் மீண்டும் வெளிக் கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள். புதிய சுதந்திரம் புதிய பொறுப்புகளோடு இணைந்து வருவதால், அதை ஏற்கத் தயக்கமும் ஒருவித

பெண் சுதந்திரம் பற்றி ஆண்கள் நால்வர்!




எல். ஜெயகுமார் (தி. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்) :

அன்னை இந்திரா பாரத நாட்டின் பிரதமராகவே இருந்திருக்கிறார். எங்கள் புரட்சித் தலைவி இன்று தமிழ்நாட்டை ஆள்கிறார். இந்தியாவின் (தேர்தல்) வ ர லா ற் றி லே யே கண்டறியாவண்ணம் மு ப் ப து பெண்கள் இன்று தமிழக சட்டமன்றத்தில் உ று ப் பி ன ர் களாகி இருக்கிறார்கள். இந்தப் பெருமையும் முதல்வரையே சாரும். பெண்கள் சுயமாகச் சிறு தொழில் தொடங்க Single window clearance அ னு ம தி யுடன், கடன் வசதிகளும் அளிக்கப்பட்டால் நிச்சயம் முன்னேற்றம் ஏற்படும். இதற்கு வழி வகை செய்ய அரசு திட்டமிட்டு இருக்கிறது.


பேராசிரியர். டாக்டர் ஆர். தியாகராஜன் (மாநிலக் கல்லூரி) :

என்றுமே பெண்கள் சுதந்திரப் பறவைகள்தான். வேத காலத்திலேயே பெண்களுக்குக் கல்வி கற்க, வேதம் பயில,

கலைகள் கற்க, போர், விஞ்ஞானத்தில் ஈடுபட - உரிமை வழங்கப்பட்டு இருந்தது. நம் புராணங்களில் கணவனுக்குத் தேரோட்டிய மனைவியர் உண்டு; ஆண்களுக்குச் சமமாகச் சபையில் சொற்போர் நிகழ்த்திய பெண்கள் உண்டு. வாழ்க்கை முழுவதும் கல்வி கற்ற பெண்களும் உண்டு. ரிக் வேத சூக்தங்கள் இயற்றிய 27 பெண் கவிஞர்கள் இருந்திருக்கின்றனர். இத்தகைய பெண்கள் வரலாற்றில் என்றும் உண்டு; இன்றும் இருக்கிறார்கள். எனவே, தற்காலப்



பெண்கள் தங்கள் சுதந்திரத்தை ஆண்கள் பறிப்பது போல் பேசுவதும், எழுதுவதும், ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானம் என்று கூறுவதும் கூட அவர்களின் குறையறிவையே காட்டுகிறது. உரிமைகள் மறுக்கப்படுகிற போதல்லவா எழுச்சிக் குரல் எழுப்ப வேண்டிய நிலை? அவர்களாகவே கட்டுப்பட்டாலொழிய யாராலும் பெண்களைக் கட்டுப்படுத்தி அடக்கி ஆள முடியாது. அப்படி நினைத்தால் அது அறியாமை.



எம். எம். செல்வராஜ் (சில்டம்ஸ் - இன்சார்ஜ் ஏ. எம். ஜெயின் கம்ப்யூட்டர் சென்டர் - தி. நகர்) :

1982-ல் பெண்களுக்கெனத் தனியாக கம்ப்யூட்டர் வகுப்புகள் துவங்கிய போது சுமார் 4, 5 பெண்கள் கூடச் சேராத நிலை. ஆனால் இன்றோ எங்களிடம் பயிற்சி பெறுபவர்களுள் 40 சதவிகிதம் பேர் பெண்கள். ஆனால் எத்தனைதான் சிறப்பாக உயர் கல்வி பெற்ற பெண்களாயினும் திருமணம் முடிந்த பின்பு கணவருக்குப் பிடிக்கவில்லை என்ற ஒரே காரணத்தால் பலர் வேலையை விட வேண்டிய நிலை!



ரவீந்திரன் (அட்டெண்டர் - தனியார் பள்ளி) :

நான் திருமணம் செய்து கொண்ட பெண் ஒரு சிறிய கிராமத்தில் ஐந்தாம் வகுப்பு வரை படித்து, வீட்டு வேலை செய்ய மட்டுமே தெரிந்தவள். இங்கு வந்த பிறகு நான் வேலை செய்யும் பள்ளியிலேயே அவளும் ஆயாவாகச் சேர்ந்து பணிபுரிய ஆரம்பித்தாள். சில வருடங்களிலேயே தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் எனப் பல மொழிகள் பேசவும், குழந்தைகளுக்கு 'ரைம்ஸ்' போன்றவை சொல்லித் தரவும் பழகிக் கொண்டு விட்டாள். சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தால் பெண்கள் முன்னேறிக் காட்டுவார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம் என்று நான் நினைக்கிறேன்.

சந்திப்பு :

வைதேகி தேசிகன்

சோம்பலும் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். பொறுப்புடன் இணையாத சுதந்திரம் என்பது கிடையாது என்பதை உணர்ந்து தயக்கத்தை உதறி விட்டுப் புறப்பட்டால் மனப் போராட்டங்கள் இல்லாத புத்துணர்ச்சி படைத்த இளைய தலைமுறையைப் பெண்களால் உருவாக்க முடியும்.''

''மீண்ட சுதந்திரத்தைப் பெண்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற கருத்து பற்றி....''

''தவறு செய்பவர்கள் எப்போதும் எக்காலத்திலும் உண்டு. மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப அத்தகையவரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதேயொழிய கவலைக்கிடமான நிலை ஏதும் இல்லை.''

''ஆனால் தவறு செய்யும் பெண்களைத்தான் பழைமைவாதிகள் தங்களுக்குச் சாதகமான உதாரணங்களாகச் சுட்டிக் காட்டுகிறார்கள்...''

''மிகவும் கட்டுப்பட்டு வளர்ந்த பெண்கள் வேலைக்குப் போய்ச் சம்பாதிப்பது போன்ற ஒரு சுதந்திரத்தைப் பெறும் போது ஆண்களுக்கு இணையாக நடக்க அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. இந்தத் திடீர் சமத்துவம் அவர்களைத் தடுமாறச் செய்யாமல் இருக்க வேண்டுமானால் அவர்களுக்கு நல்ல அடிப்படைக் கல்வி அளிக்கப்பட வேண்டும். அடிப்படைக் கல்வி என்பது எண்ணும் எழுத்தும் மட்டும் அல்ல... சுயமாகச் சிந்தித்து முடிவுகள் எடுக்கும் ஆற்றல், அதன் விளைவாகப் பெறும் நற்பண்புகள் போன்றவற்றுக்குக் கல்வி வழிகோல வேண்டும். இவற்றோடு என்னென்ன உரிமைகள் பெண்களுக்கு உண்டு என்பதையும் கல்வி உணர்த்தினால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ள பெண் சுதந்திரம் வெகு வேகமாக முன்னேறும்.

- சிஷ்யா.

அட்டையில் : சுஜாதா ராமநாதன்

வண்ணப்படம் : உத்ரா

நீங்கள் கேட்டவை - தராசு

இடைத் தேர்தல் முடிவு பற்றி ஒரு க்ளூ...?

O எஸ். திருமலை, மதுரை – 7

? மைய அரசின் பட்ஜெட் மூலம் ஏற்படும் விலைவாசி உயர்வு, மத்யதர குடும்பத்தைப் பாதிக்கும் என்கிறீர்கள், தலையங்கத்தில். வாஸ்தவம். அப்படி இருக்க, கல்கி பத்திரிகையின் விலையை ஏற்றாமல் இருந்திருக்கலாம் அல்லவா?

! என்ன ஸார் இது, 'விடிய விடிய ராமாயணம் கேட்டு...' என்ற கதையாக இருக்கிறது.... மத்திய அரசின் ரயில்வே பட்ஜெட், பார்சல் கட்டணங்களை உயர்த்தியுள்ளது. பொது பட்ஜெட், கம்பெனிகளுக்கான வருமான வரியை உயர்த்தி, "டிப்ரிஸியேஷன்" எனப்படும் தேய்மானச் சலுகையைக் குறைத்திருக்கிறது. வங்கிக் கடனுக்குக் கட்டும் வட்டிக்கு வரி விதித்திருக்கிறது! இதெல்லாம் கல்கி காரியாலயத்தையும் பாதிக்காதா? அது போகட்டும் என்றால், பத்திரிகைகளின் அடிப்படைத் தேவையான காகிதத்தின் விலையை நிர்ணயம் செய்வதே மத்திய அரசுதானே. பத்திரிகைக் காகிதத்தின் விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போவதை - இரு ஆண்டுகளில் முப்பது சதம் உயர்ந்திருப்பதை - எடுத்துக் காட்டியிருக்கிறோமே! இன்னொரு வேடிக்கை கேளுங்கள் : இந்தியப் பத்திரிகைகளிடமிருந்து அவ்வப்போது பெறப்பட்ட பணத்தைப் பத்திரிகைக் காகிதம் சப்ளை செய்த அயல் நாட்டவருக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்காமல் தாமதம் செய்ததால், அரசாங்க வர்த்தக கார்ப்பரேஷன் 60 கோடி இப்போது (ரூபாய் மதிப்புக் குறைப்புக்குப் பிறகு) கூடுதலாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. தனது இந்தத் தவறை மூடி மறைத்து, அறுபது கோடியையும் பத்திரிகை நிறுவனங்களிடமிருந்தே பெற முயல்கிறது அந்த அரசு நிறுவனம்! இவ்வாறிருக்க, கல்கி மட்டுமின்றி எல்லாப் பத்திரிகைகளின் விலையும் ஏறத்தானே செய்யும்? எப்படி இந்த விலை உயர்வைத் தவிர்க்க முடியும்?

O மா. வித்யப்ரியா, தஞ்சாவூர்

? நடக்கப் போகும் இடைத் தேர்தல் முடிவு பற்றி ஒரு 'க்ளூ' கொடுங்க சார்...?

! காங்கேயத்துக்கு உதய சூரியன் சின்னமே கிடைக்கவில்லை என்னும் போது தி.மு.க.வுக்குச் சகுனம் சரியில்லை என்று தான் கூற வேண்டும். தேர்தலுக்கும் இடைத் தேர்தலுக்கும் இடையே பெரிய மாற்றம் ஏதும் இராது.

O வி. கே. சீனிவாசன், வைப்பூர்.

? இன்னாம்மே இது, படா பேஜாரா கீது, கடையை மூடிட்டோம்னு சொல்றாங்க; அப்பால தொறக்கப்படலாம்னும் சொல்றாங்க...?

! அம்மா ஸ்டெடியா இருப்பாங்க நயினா. பாக்கெட் தண்ணி ஓடாது. ஒயின் ஷாப் கீது பாரு... அதை மூடறதா இல்லியான்றதுலதான் தள்ளாடறாங்க. என்னைக் கேட்டா அல்லாத்தையும் மூடி ஸீல் வைக்கிறதுதான் கெலிச்சதுக்கு அர்த்தம்னுவேன்.

O பாலகிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

? அரசியல், அறிவியல், ஆன்மீகம் – எது மனிதவள மேம்பாட்டுக்கு உதவுவது?

! ஆன்மீகத்தை ஒதுக்காத அரசியல், அறிவியலுடன் கைகோத்துக் கொள்ளும் போதுதான் மனிதவளம் மேம்பட முடியும்.

O மீ. தமிழ் ஷாஜஹான், கம்பம்.

? ரூ. 100 கோடி செலவழித்து ராஜீவ் பெயரில் அறக்கட்டளை தொடங்கும் எண்ணத்தை மத்திய அரசு கைவிட்டது பற்றி?

! அறக்கட்டளை இருக்கிறது. கைவிடப்படவில்லை. தனியார் நிறுவிய அந்த அறக்கட்டளைக்கு அரசு நூறு கோடி ரூபாய் நன்கொடை வழங்குவதுதான் தவிர்க்கப்பட்டிருக்கிறது - எதிர்க்கட்சிகளின் விழிப்புணர்ச்சி காரணமாக. அரசு முன் வைத்த காலைப் பின் வைப்பதா என்று தர்ம சங்கடத்துடன் தடுமாறிய போது ஸோனியாவே இந்த நன்கொடை வேண்டாம் என்று கூறி, ஒரு இக்கட்டிலிருந்து அரசைக் காப்பாற்றியிருக்கிறார்.

O எஸ். சுந்தமாறன், தூத்துக்குடி.

? நியாயம் நம் பக்கம் இருக்கும் போது வீணில் பதற்றமடைவது அவசியம்தானா?

! பரபரப்பு ஓரளவுக்குத் தேவைதான். 'நியாயம் நம் பக்கம்தானே இருக்கிறது' என்று அலட்சியத்துடன் கைகட்டியிருந்த பலர் உரிமையைக் கோட்டை விடவே நேர்ந்திருக்கிறது.

O கே. ஏ. காளிமுத்து, இராணிப்பேட்டை.

? 'முன்பு கமகமவென்று மணம் வீசிய சோவியத் கம்யூனிஸம் இப்போது ஊசிப்

போன கோழி பிரியாணி ஆகி விட்டது' என்று பி. பி. சி. வர்ணித்திருப்பது குறித்து?

! 'கமகமவென்று மணம் வீசுகிறது' என்று முன்பு பி.பி.சி. வர்ணித்ததா என்பதைக் கேளுங்கள்! திணறிப் போகும்!

O இ. எஸ். வாக, மாடம்பிள்ளைதர்மம் ★

? ஒவ்வொரு விவசாயியின் குமுறலுக்கும் காரணமான உர விலை ஏற்றம் பற்றி...?

! இப்போது உர விலை உயர்வை பத்து சதம் குறைத்திருக்கிறார்கள். இதுவும் விவசாயிக்கு முழு திருப்தி அளிக்காது என்பது நிச்சயம். நிற்க, இந்த மானியம் நேரடியாக விவசாயிக்கு வழங்கப்படுவதல்ல. உர கம்பெனிகளுக்குத் தந்து, அதன் மூலம் உர விலை குறைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் அடிப்படையில் தவறானவை. சுதந்திரமான மார்க்கெட் பொருளாதாரமே நல்லது. இந்த உர மான்யம் வழங்கியதில் நூறு கோடிக்கு மேல் மோசடி நடந்திருப்பதாக அண்மையில் தெரிய வந்திருக்கிறது. உரக் கம்பெனிகள் என்று கற்பனைப் பெயர்கள் சூட்டி, மான்யங்களைக் கொள்ளையடித்துப் போயிருக்கிறார்கள். இதில் பெரிய பெரிய தலைகள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அரசின்தலையீடற்ற சுதந்திரப்பொருளாதாரத்தில் தான் இதுபோன்ற மோசடிகளுக்கும் இடமில்லை; விலையும் போட்டா போட்டி காரணமாக நியாயமான அளவில் இருக்கும். மான்யங்களையும், அது தொடர்பான மோசடிகளையும், எல்லா நஷ்டங்களையும் கடைசியில் வரி செலுத்தும் குடிமகனே தாங்குகிறான் என்பதை மறவாதீர்கள்.

O லவ்லி பாலகிருஷ்ணன், மங்களக்குடி.

? வசதியற்ற கோயில்களைக் கவனிக்க, முதல்வர் அறிவித்துள்ள திட்டம் எப்படி?

! செல்வந்தர்களிடமும் இதர பொது மக்களிடமும் நன்கொடை வசூலித்து எல்லாக் கோயில்களையும் பராமரிக்க முடியாது. சில கோயில்களுக்கு விமோசனம் பிறக்கலாம். அவ்வளவே. கோயில்களுக்கு - பெரிதோ, சிறிதோ - சொத்து எழுதி வைத்திருக்கிறார்கள் முன்னோர்கள். அந்தச் சொத்துக்கு உரிய வருவாய் ஒழுங்காகக் கோயில்களுக்குக் கிடைக்கச் செய்தால் போதும். பெருமளவு பிரச்னை தீர்ந்து போகும். கோயில் நிர்வாகிகள் கோயில் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதைத் தவிர்க்கவும் உரிய நடவடிக்கை தேவை. இவற்றைச் செய்தால், பணக்காரக் கோயில்களிலிருந்து உபரி வருமானம், ஏழை கோயில்களுக்குக் கிடைக்கவும் வழி ஏற்படும். அது சரி, நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியாரின் அறிக்கை என்ன ஆயிற்று? தூசு தட்டிப் பார்க்கலாமே?




◆ அறக்கட்டளைக்கு நன்கொடை?

◆ அறிக்கை என்ன ஆயிற்று?



◆ பெண்களே ஆசிரியர்கள்!





◆ தர்மசங்கடம் தவிர்த்தார்!

O வ. ஆறுமுகராஜன், சென்னை.

? தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை பெண்களே ஆசிரியராகப் பணிபுரிய அரசு ஆணை பற்றி?

! ஆண்களுக்கு மட்டுமல்ல; பெண்களுக்கும் இழைக்கப்படும் அநீதி. அவர்களுக்குச் சம உரிமை தரப்பட வேண்டுமே தவிர, இட ஒதுக்கீடு அல்ல. இப்படியே போனால் எல்லா ஆண்களுமே பிற்படுத்தப்பட்டவர்களாகி விடுவார்கள்!

★ ரூ. 25 பரிசு பெறுபவர் :
இ. எஸ். வாக,
286, அரசடி தெரு,
மாடம்பிள்ளை தர்மம்,
ராஜகிருஷ்ணாபுரம் (அஞ்சல்)
நெல்லை - 627 114.

நேற்றுவரை நந்தவனம்

19

மீராவின் வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்தபடி, தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள் கீர்த்தியின் தாய். முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாவிட்டாலும், மூக்கு மட்டும் துடித்தது.

''இது தப்பா, சரியான்னு எனக்குத் தெரியலை. உங்க பிள்ளையோட ஆத்மாவுக்கு நான் செய்யற துரோகம்னு மட்டும் தெரியறது...''

''சிச்சீ... அசடு... துரோகமாவது? போறவன் போய்ச் சேர்ந்துட்டான். அதுக்காக இருக்கறவ நாக்கைப் பிடுங்கிக்க முடியுமா? இப்ப இதே ஆக்ஸிடென்ட்டுல நீ போய், கீர்த்தி பிழைச்சிருந்தான்னா - அவனை ஆயுசு மட்டும் ஒத்தையாவே நிற்க வைப்போமா நாங்க? அவனுக்கு இஷ்டமோ இல்லையோ சடசடன்னு மாத்து மாலையை எடுத்துக் கையில கொடுக்க மாட்டோமோ... ஆம்பிளைக்கு என்ன தர்மமோ அதுவேதான் பொண்களுக்கும்.''

''இல்லே... இதைப் பத்தி உங்க அபிப்பிராயத்தை நான் கேட்கறதே - குழம்பிக் கிடக்கற மனசுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்திக்கறதுக்குத்தான்.. உங்களைக் கேட்கறது மானசீகமா உங்க பிள்ளையைக் கேட்கற மாதிரி. என் முடிவு உங்க மனசுல கொஞ்சம் ரணத்தை உண்டுபடுத்தும்னு எனக்குத் தெரியும்.. ஆனா... வேற வழியில்லே...''

அந்த அம்மாள் - மீராவின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

''ஏன்மா, இந்த வயசுல எனக்கு ஒரு பொண்ணு இருந்து - அவளுக்கு இப்படியொரு கொடுமை நேர்ந்துடுத்துன்னா - வீட்டுல உட்கார வச்சு - அவ மெழுகா உருகறதைப் பார்த்துண்டிருப்பேனா...நீ தங்கமான குழந்தை. இந்த வீட்டு மனுஷாளுக்குத்தான் கொடுத்து வைக்கலை. சரி. உங்க அம்மாவுக்குத் தெரியுமா.. லெட்டர் எழுதினியா?''

''இன்னும் இல்லே.''

மீரா, குனிந்த தலைநிமிராமல் பதிலளித்தாள். சித்தி, சற்று முன்பு தேங்காய் துருவி விட்டு, அப்படியே நிறுத்தி வைத்திருந்த அரிவாள்மனையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரிவாள் மனை - தலைகுனிந்து உட்கார்ந்திருக்கும் கல்யாணப் பெண் போல... அதன் உச்சியில் படர்ந்திருந்த தேங்காய் துருவல் - மணப் பெண்ணின் தலையை அலங்கரிக்கும் மல்லிகைப் பூச்சரம் போல..

''அடியே கப்பு... அடுப்பைத் தணிச்சு வை. பீன்ஸ் கறியில தேங்கா போடாம - பெரியப்பாவுக்குக் கொஞ்சம் எடுத்து வச்சுட்டு, மீதியில தேங்காத் துருவலைக் கலந்து, குழந்தைகளுக்குப் பரிமாறு...''

சித்தி, எவளையோ விரட்டினாள்.

அடுத்த ஒரு நிமிஷத்தில் அரிவாள் மனை தன் தலை அலங்காரத்தைக் கலைத்து



விட்டு - மூலையில் முடங்க, அதன் வெறுமையைத் துக்கம் விசாரிக்க வந்தாற் போல சாரி சாரியாய் தேனீக்கள் அந்தப் பக்கம் படையெடுத்தன.

''இப்ப எனக்கு என்ன ஆச்சு? ஆனானப்பட்ட கீர்த்தியைப் பறிகொடுத்துட்டே இந்த மீரா கொஞ்சமும் கலங்காம, அடுத்தவனுக்குக் கழுத்தை நீட்டப் போறா.. எனக்கென்ன,... சாயந்திரமோ, ராத்திரியோ - மறுபடியும் மணக்கோலத்துல உட்கார்ந்திட்டுப் போறேன்...''

அரிவாள் மணை கூடப் பேசுமா...?

அவளது எண்ண ஓட்டம் பற்றிப் புரியாமல் கீர்த்தியின் தாய் பேசிக் கொண்டே போனாள்:

''நீ கவலையே படாதே! உங்க அம்மாவுக்கு நான் லெட்டர் போடறேன். விஷயத்தை எத்தனை நாசூக்கா எடுத்துச் சொல்ல முடியுமோ - அப்படிச் சொல்லப் பார்க்கறேன். ஜாதி வித்தியாசம் எல்லாம் பார்க்க வேண்டாம். அவனும் மனுஷன்தான். கட்டினவளை மனசு கோணாம, கண் கலங்காம வச்சுக்கறவன் எல்லாருமே ஒசந்த ஜாதிதான்...''

மீரா, மெள்ள தலையை நிமிர்த்திப் பார்த்தாள். அவளைச் சுற்றி ஏழெட்டு முகங்கள். எல்லா முகங்களிலும் கனிவையும், பரிவையும் தவிர வேறில்லை.

சித்தப்பா, கரகரத்த குரலில் சொன்னார் :

''ஆனா, இது விஷயம் எதுவுமே பட்டண்ணா காதுல விழப்படாது மன்னீ... அவராலே இதையெல்லாம் தாங்கவே முடியாது.. இத்தனை நாளாகியும் அவராலே - கீர்த்தி போனதையே மறக்க முடியலே.. அப்பப்போ, 'மெட்ராஸ்லேயிருந்து லெட்டர் வந்ததா... கீர்த்தி சௌக்கியமா'ன்னு கேட்கறதும், 'ஏண்டா கீர்த்தி வந்திருக்கானா.. அவனோட பர்ஃப்யூம் வாசனை அடிக்கறதே'ங்கறதும்... சுத்தியிருக்கறவங்க எல்லாரையும் பைத்தியமாக்கற மாதிரின்னா இருக்கு?''

கீர்த்தியின் தாய் தழுதழுத்த குரலில் சொன்னாள்:

''ஆமாம்மா. அவருக்கு இது பத்தி எதுவுமே தெரிய வேண்டாம். தாங்க மாட்டார். அப்புறம்... இதோ பாரு, உனக்குச் சீதனமாக் கொடுத்த வெள்ளிப் பாத்திரம், குத்து விளக்கு.. இதெல்லாம் கூட எங்க கிட்டத்தான் இருக்கு. எப்ப எடுத்துண்டு போறதாயிருந்தாலும் சொல்லு... இல்லே, உன் கல்யாணத்துக்கு என்னைக் கூப்பிடுவே இல்லையா.. கூப்பிடறது என்ன, நாங்க தானே வந்து நடத்தித் தரப் போறோம்? அப்ப, சபையில கொண்டு வந்து வைக்கிறோம்.''

மீரா, மெதுவாக அங்கிருந்து விடைபெற்றாள். பள்ளிக்கூடம் கிளம்பிய குழந்தைகள் அனைவரும், புறப்பட மனசில்லாமல், உள்ளே வந்து மீராவின் புடைவைத் தலைப்பை 'வெடுக்'கென இழுத்து விட்டு ஓடினார்கள்...

கீர்த்தியின் தாய்க்கும் அவளை அனுப்ப மனசே இல்லைதான். ஆனாலும், நாகு வருவதற்குள் அவளை அனுப்பி விடுவதுதான் நல்லது என்று அவள் நினைத்தான்.


''நாகு வந்தா 'காச் மூச்'சுனு கத்துவான். அவன் குரலை அடக்கவே முடியாது. அவன் வர்றதுக்குள்ளே நீ கிளம்பு குழந்தை...''

''நான் இந்தச் சம்பவத்துக்கும் அவருக்கும் கூட ஏதாவது தொடர்பு இருக்குமோன்னு சந்தேகப்பட்டேன்..''

மீராவின் வார்த்தைகளைக் கேட்டு, கீர்த்தியின் தாய், ஈரத்தில் கனத்த இமைகளை ஒரு தரம் அழுந்த மூடித் திறந்து தலையை அசைத்தாள்.

''அவன் இந்த மாதிரியெல்லாம் செய்யக்கூடியவன்தான். ஆனா, டைம்பாம், வெடிகுண்டு விவகாரமெல்லாம் அவனுக்குத் தெரியாது. கோபம் வந்தா - ஒண்ணு அரிவாளைத் தூக்கிட்டு கிளம்பிடுவான். இல்லைன்னா லங்காபுரிக்கு நெருப்பு வச்ச ஆஞ்சநேயர் மாதிரி, தீப்பந்தத்தை எடுத்துட்டுக் கிளம்பிடுவான்... அவன் கோபம்





''உங்க சர்வரைக் கொஞ்சம் கண்டிச்சு வைங்க!''

''ஏன் ஸார்?''

''என்ன இருக்குன்னு கேட்டதுக்கு ஐந்து கிலோ அரிசி, இரண்டு கிலோ உளுந்து ஊற வெச்சு ரெடியா இருக்குங்கிறார்!''

- வேதபுரி எஸ். இரமேஷ்

நிமிஷமாச் சரியாயிடும்.''

''......''

''இனிமே, இந்த விபத்துக்கு யார் காரணம், என்ன, ஏதுன்னு தேடிட்டு அலையாதே! தேடறதுனால என்ன பெரிசா கிடைச்சிடப் போறது? எதுவுமில்லே.. விட்டுடு. எல்லாருக்கும் மேல கடவுள்னு ஒருத்தர் இருக்கார். அவர் பார்த்துப்பார்..''

மீரா புறப்பட்ட பொழுது, அந்த அம்மாள் வெற்றிலைப் பாக்குத் தட்டில் - ஒரு ரவிக்கைத் துணியை வைத்து அவளிடம் கொடுத்தாள்.

''எடுத்துக்கோ குழந்தை...''

''நான்... எனக்கு...''

''இங்கே பாரு.. நீ எல்லாரையும் போலத்தான். பத்து நாள், உன் சினேகிதியோட வீட்டுல போய்த் தங்கினதா நினைச்சுக்கோ. உனக்கு வெத்தலைப் பாக்கோட ரவிக்கைத் துணி வச்சு கொடுக்கறப்ப - சொன்னா நம்ப மாட்டே - என் கீர்த்தி, என்னோட முதுகுக்குப் பின்னாலே வந்து நின்னு, ரெண்டு கையாலேயும் என்னைக் கட்டிப் பி டி ச் சி ண் டு, 'ரொம்ப தாங்க்ஸ்'மான்னு சொல்ற மாதிரி இருக்கு... நீ வாங்கிக்கோ சொல்றேன்...''

மீரா பொலபொலவென அழுதே விட்டாள்.

அவளுடன் வந்த கூட்டம் - கோடு கிழித்து நிறுத்தினாற் போல - பின் கட்டு வாசலுடனேயே நிற்க - கீர்த்தியின் தாய் மட்டும் - தன் குஞ்சைப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லும் தாய்க் கோழி போல மீராவை ஒரு கையால் அணைத்தபடி பம்மி, பதுங்கி வாசலுக்கு வந்தாள்.

வாசற்படியை மீரா தாண்டியிருக்க மாட்டாள். அவளது முதுகுக்குப் பின்னாலிருந்து அடித் தொண்டையில் ஒரு குரல் ஒலித்தது.

''அம்மா மீரா...''

''......''

''உன்னைத்தானேம்மா மீரா... எனக்குத்தான் கண் தெரியலே. உனக்குக் கூடவா காது கேட்கலை?''

மீரா, படபடக்கும் நெஞ்சை ஒரு கையால் அழுக்கியபடி அப்படியே நின்றாள்.

கீர்த்தியின் தாய் - வியர்வை வெள்ளத்தில் குளித்தே விட்டாள்.

அத்தனை அசந்தர்ப்பமான நேரத்திலும் தன்னால் முடிந்த வரையில் சமாளிக்கப் பார்த்தாள் அவள்.

''உங்களுக்கென்ன ஆச்சு? எதிர் வீட்டுப் பஞ்சாமி பொண்ணைப் பார்த்து... ராமா... இவரை ஏண்டாப்பா இப்படிச் சோதிக்கறே?''

''நாம செஞ்ச பாவத்துக்கு ராமனை எதுக்கும்மா இழுக்கறே... மீரா, இங்கே வா...''

மீரா, சப்தநாடியும் ஒடுங்கி, மெள்ள அடியெடுத்து வைத்து, அவரது அருகில் போய் நின்றாள்.

படுத்திருந்தவர் தம்பியின் உதவியுடன் நிதானமாய் எழுந்து சுவரில் சாய்ந்தார்.

''கிட்ட வா. எனக்குக் கண்ணு அத்தனை போதாது. எங்கே கையைக் கொடு...''

கீர்த்தியின் தாய், புடைவைத் தலைப்பால் வாய் பொத்திக் கண்ணீர் வழிய நின்றாள்.


''மீரா, எனக்குப் பார்வைதான் கோளாறு.. காது துல்லியமாக் கேட்கும்.

அவர் சற்று நிறுத்தி, பழுதடைந்த கண்களை நன்றாகத் துடைத்து விட்டுக் கொண்டார் :

''நீ உள்ளே வர்றச்சே - பஞ்சாமி பொண்ணுன்னு உன் மாமியார் சொல்லி, உன்னை, என் கண்ணுலே இருந்து மறைக்கப் பார்த்தா... சரிதான்.. ஆனா, கூடத்துல மாட்டியிருக்கற கீர்த்தியோட போட்டோவைப் பார்த்துட்டே நடந்து, தடுமாறி, தடுக்கி விழப் பார்த்தியே குழந்தை... கவனிக்காத அளவுக்கு முட்டாளா நான்...''

''.........''

''மருதாணி பறிக்க வந்தவ, ரெண்டாங் கட்டு ஜனங்க கிட்ட மட்டும் பேசிட்டுப்



''எங்க பெண்ணுக்குப் போட்ட இருபது பவுன் நகையையும் அடகு வெச்சுட்டீங்களாமே! இது நியாயமா மாப்பிள்ளை!''

''அப்படி ஒண்ணும் நாட்ல நடக்காத காரியத்தை நான் செய்யலையே மாமா!''

- ஞா. ஞானமுத்து

போனா எப்படிம்மா? உம்? நீ எந்த எண்ணத் தோட மறுபடி இந்த வீட்டுக்குள்ளே வந் திருந்தாலும் சரி. இந்தக் கிழவன்கிட்டயும் ஆசீர்வாதம் வாங்கிட்டுப் போ.. என்ன.. ஏதாவது பேசேன்.. உன் குரலையாவது கேட் கறேன்..''

மீரா, அதற்கு மேல் தாங்க மாட்டா தவளாய் முகத்தை மூடிக் கொண்டு அழு தாள்.

''உங்ககிட்டச் சொன்னா உடம்புக்கு ஏதாவது ஆகிடப் போறதுன்னு மன்னிதான் அண்ணா...''

- சித்தப்பா தயங்கியபடி சொன்னார்.

''எனக்கென்னடா... இன்னும் எத் தனை நாளைக்கு வயசாகி, மக்கிப் போன இந்த உடம்பைத் தூக்கிண்டு அலையறது? அலுத்துப் போச்சுடா. மன்னி கிடக்கா. மீரா, உனக்குக் கல்யாணமாச்சன்னா - எனக்குப் புதுச் சட்டை என்ன.. புது உடம்பே கிடைக் கும்...''

அவர், மீராவின் தலையைக் கோதிய படியே சொன்னார்.

''குழந்தைகள் சாப்பாட்டை முடிச் சிட்டு, ஸ்கூலுக்குக் கிளம்பறதுக்கு முன் னாலே - அங்கேயும், இங்கேயுமா கூடிக் கூடிப் பேசிட்டிருந்தாங்க... புது மன்னி கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஒரு கோஷ்டி... கூடாதுன்னு ஒரு கோஷ்டி... நான், கிட்ட கூப்பிட்டு விசாரிச்சப்ப அத்தனையும் பறந்துடுத்து...''

மீரா, அவரது பாதங்களில் பணிந்து எழுந்திருந்த அதே நேரத்தில் -

குமரனின் மைத்துனன் ரவி, நிர்மலா விடம் அழுத்தமான குரலில் கூறிக் கொண்டி ருந்தான்.

''அந்த மீராவைத் தனியே வரவழைச்சு, கன்னத்துல நாலு அறை வச்சா, உண்மைய ஒத்துக்காமலா போயிடுவா?''

(தொடரும்)

''நாட்டு நிலவரத்தைக் கண்ட றியத் திருடனாக மாறுவேடம் போட் டுக் கொண்டு போனது தப்பாப் போச்சு மந்திரியாரே!''

''ஏன் மன்னா?''

''காவலாளிகள் மாமூல் கேட்டு நச்சரித்து விட்டனர்!''

- குடந்தை எல். ராம்பிரபு



கல்லூரி மாணவர்
கட்டுரைப் போட்டி

லட்சியக் கணவர்

ரூ. 50 முதல் பரிசுக் கட்டுரை

எனக்கு வரப் போகும் கணவர் ஏகப் பட்ட தன்னம்பிக்கையும், என் மீது மாறாத அன்பும் உள்ளவராக இருக்க வேண்டும். தனக்கிருக்கும் நெடுநாளைய பழக்கங்களையும் (சிகரெட், வெற்றிலை போன்றன) தேவைப்பட்டால் அடியோடு நிறுத்தி விடும் நெஞ்சத் துணிவு உள்ளவராக விளங்க வேண்டும். பிற பெண்களை மதிப்பவராக, அதாவது; ''இன்னிக்குக் குள்ளமா, நல்ல சிவப்பா, அழகா ஒருத்தி உன்னைத் தேடிண்டு வந்திருந்தா'' என்று கூறாமல், ''இன்னிக்கு உன் தோழி சாந்தி வந்திருந்தாங்க'' என்று கூறுபவராக இருக்க வேண்டும்.

என் சமையலில் ஏதேனும் குறையிருந்தால் ''என்னடி வாயில் வைக்க சகிக்கலை'' என்று கூறாமல், ''கொஞ்சம் உப்பு ஜாஸ்தியாயிடுத்தில்லே? அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்'' என்று கூறுபவரையே எதிர்பார்க்கிறேன். என்றைக்காவது நான், என் புது மானேஜர் என்னைக் கடிந்து கொண்டதற்காக வருந்தி அழும் போது, ''தப்பு செய்தா திட்டத்தான் செய்வாங்க'' என்று கூறாமல், ''அவர் உன்னை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. உன் திறமை தெரிந்த பிறகு அவர் உன்னை எப்படி நடத்தப் போகிறார் பார்'' என்று எனக்கு ஆதரவளிப்பவராக அவர் விளங்குவது நல்லது.

ஏதாவது சோகக் கதை படித்து விட்டு நான் ரொம்பத் துக்கப்பட்டுப் போகும் போது, ''வெட்கமாயில்லே! போயும் போயும் ஒரு கதை புக் படிச்சுட்டு இப்படி அழுவாங்களா?'' என்று கேலி பண்ணாமல் ''வாழ்க்கைல கஷ்டங்கள் சகஜம். புக் தானே! மறந்திடு'' என்று என் உணர்ச்சிகளை மதிப்பவராகவும்; தினமும் வீட்டுக்கு வரும் போது அர்ச்சனா ஸ்வீட் வாங்கி வரா விட்டாலும், நான் எப்போதாவது கேட்கும் ரோஜாப் பூவோ கண்ணாடி வளையல்களையோ 'ஸில்லி' என்று கருதாமல், மறக்காமல் வாங்கி வருபவராகவும் என் கணவரைப் பற்றிக் கனவு காண்கிறேன்.

எனக்கு மனவேதனை அளிப்பதாக இருந்தாலும் எப்போதும் என்னிடம் உண்மையே பேசுபவராகவும்; எந்தச் சூழ்நிலையிலும் அவர் மீது எனக்கிருக்கும் அன்பைக் கொஞ்சம் கூட சந்தேகிக்காதவராகவும்; என்னை மதித்துத் தமது பிரச்னைகளை என்னிடம் மனம் திறந்து சொல்லி என் யோசனைக்கு முக்கியத்துவம் அளிப்பவராகவும்; எனக்கிருக்கும் சிற்சில திறமைகளில் அவருக்கு ஆற்றல் இல்லாவிட்டாலும் ஆர்வம் உள்ளவராகவும் என் இல்லத்தரசரைக் கற்பனை செய்து பார்க்கிறேன்.

மொத்தத்தில், இந்த உலகிலேயே அவருடைய முழு அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவளாக என்னை (மட்டுமே) வைத்திருப்பவராக அவர் விளங்க வேண்டும்.

இத்தகையவர், என்னை விடப் பதினைந்து வயது மூத்தவராக இருந்தாலும், தோற்றப் பொலிவு இல்லாதவராக இருந்தாலும், உயர்ந்த படிப்பு படிக்காதவராக இருந்தாலும், கொஞ்சமே சம்பளம் வாங்குபவராக இருந்தாலும் அவரையே என் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய கணவராக நான் தேர்ந்தெடுப்பேன்.

- அ. சுதா,
பி.எஸ்.ஸி., கணிதவியல்,
வைணவா மகளிர் கல்லூரி,
குரோம்பேட்டை,
சென்னை - 600 044.

உணர்வுகளை மதிக்கட்டும்

எந்த ஒரு பெண்ணும் தனக்கு அமையப் போகும் கணவன் படித்தவராக, அழகுள்ளவராக இருக்க வேண்டும் என்றுதான் முதலில் கருதுவாள். என்னைப் பொறுத்தவரை என்னுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பவராக இருக்க வேண்டும். 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற குறிக்கோளை உடையவள் நான். அதற்கேற்ப நடந்து கொள்ள அவர் எனக்கு முழுச் சுதந்திரம் தர வேண்டும். எந்த ஒரு சிறு நிகழ்ச்சியாக இருந்தாலும் எனது கருத்துக்களையும் பரிசீலனை செய்து, சரியானவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

என்னுடன் கருத்து மாறுபட்டாலும் மாறுபடாது போனாலும் அவற்றுக்கான காரணங்களைத் தெளிவுபடக் கூற வேண்டும். மனசுக்குள் புதைப்பது என்பது சுத்தமாக இருக்கக் கூடாது.


படிக்காதவர் என்றபோதிலும் என்னைப் போன்ற சில பெண்கள் இரு மணத்திற்குச் சம்மதம் தெரிவிப்பார்கள். 'என் கணவர் இவ்வளவு படித்திருக்கிறார்' என்று பெருமையாகக் கூறும் பெண்க


விடையே 'என் மனைவி இவ்வளவு படித்திருக்கிறாள்' என்று அதே அளவு பெருமிதத்துடன் கூறும் ஆண் மகனை நான் எதிர்பார்க்கிறேன்.

இதுவரை தன் அம்மாவின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்தது போல் மனைவியையும் நடத்துபவராக இருக்க வேண்டும். மாமியார் மருமகள் பிரச்னைகளுக்கு இடமிருக்கக் கூடவே கூடாது. அம்மாவுக்கு அதிக மதிப்புக் கொடுப்பவராக இருப்பினும், மனைவியின் உணர்வுகளையும் மதிப்பவராக இருக்க வேண்டும்.


வரதட்சணை நிச்சயம் கொடுக்கவே மாட்டேன். நிபந்தனைகள் என்ற பேச்சிற்கே இடமில்லை. தவறு இருப்பின் தட்டிக் கேட்கத் தயங்க மாட்டேன்; அவரும் தயங்கக் கூடாது.

- இ. சாந்து உஸ்மானி,
எம்.ஃபில் - பொருளாதாரம்,
பாரதி தாசன் பல்கலைக் கழகம்,
திருச்சி - 24.





இலக்கியக் காவலரும் இலக்கியக் காதலரும்



''கல்கி'' அவர்களுக்குப் பிறகு இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய மீ. ப. சோமு அவர்களுக்குக் கல்கி பொன் விழா ஆண்டில், அவரது இலக்கியப் பணிக்காக ராஜாசர் முத்தையா செட்டியார் நினைவுப் பரிசாக ரூ 50,000 வழங்கப்பட்டதில் பெருமிதம் அடைந்து, நமது மகிழ்ச்சியைக் கல்கி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

மீ. ப. சோமு, இசைக் குடும்பத்தில் பிறந்து இசைத் துறையிலேயே சென்றிருக்க வேண்டியவர். அவரை இலக்கியத்தின்பால் திசை திருப்பியவர் ரசிகமணி டி. கே. சி. சோமுவின் இலக்கியப் பணிக்கு உரமிட்டு நீர் வார்த்தவர் அமரர் ''கல்கி''. இந்த இருவரது ஆதரவு பெற்ற சோமுவுக்கு ராஜாஜியின் அறிமுகம் கிடைத்தது வியப்பில்லை. அது ஆழ்ந்த நட்பாக மாறி, இலக்கியக் காதலாக மலர்ந்ததுதான் சிறப்பு. ஏனெனில், ராஜாஜியுடன் நெருங்கிப் பழகவே ஒருவருக்கு ரொம்பத் தகுதிகள் இருக்க வேண்டும். சோமுவோ அணுக்கத் தோழராக மட்டுமின்றி, ராஜாஜியுடன் இணைந்து இலக்கியப் பணியாற்றும் பேறும் பெற்றார்! ராஜாஜி - சோமு என்ற கூட்டுப் பெயரிலேயே கல்கியில் பல தொடர் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

ஆரம்ப காலத்தில் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதி வந்த சோமு, பிறகு சமூக நாவல்களும் சரித்திர நாவல்களும் எழுதிப் பிரபலமடைந்து பல பரிசுகளும் குவித்தார். அகில இந்திய ரேடியோவில் உயர் பதவிகளில் பணியாற்றியதுடன், வானொலித் துறையில் சிறப்புப் பயிற்சி பெற லண்டன் பி.பி.ஸிக்குச் சென்றார். திரும்பி வந்து அவர் கல்கியில் எழுதிய பயண நூல் சாகித்ய அகாதமி பரிசு பெற்றது. பின்னர், ராஜாஜியுடன் நெருக்கம் ஏற்பட்ட காலகட்டத்தில், நீதி இலக்கியத்திலும் பக்தி இலக்கியத்திலும் அவர் மனம் திரும்பியது. திருமூலரின் தத்துவங்களை ராஜாஜியுடன் அலசிய அவர், கடைசியில் சித்தர் இலக்கியங்களை ஆய்வு செய்கின்ற முதிர்ச்சி பெற்றார். அவர் மனத்தின் படிப்படியான பரிணாம வளர்ச்சியை இது உணர்த்தும்.

சித்தர் இலக்கியத்தில் மீ. ப. சோமு ஆய்வு நடத்த உதவியது, ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்களும் அண்ணாமலை பல்கலைக் கழகமும். முத்தையா செட்டியாருக்குப் பிறகு அவரது புதல்வர் எம். ஏ. எம். ராமசாமியும் தொடர்ந்து இலக்கியக் காவலராக இப்பணியில் ஈடுபாடு காட்டி, மீ. ப. சோமு வைப் பல விதங்களிலும் ஊக்குவித்தார். பல பாகங்களைக் கொண்ட இந்த நூல், மீ. ப. சோமுவின் இலக்கியப் பணிக்கு மணிமகுடமாக அமைந்துள்ளது.

இசைக் குடும்பத்திலே பிறந்த சோமு வின் மனம் இலக்கியத்தின் பக்கமாகத் திசை திருப்பி விடப்பட்டாலும் இசையையும் அவர் விட்டு வைக்கவில்லை! கச்சேரி செய்யவில்லையே தவிர, இசை நுணுக்கங்களை நன்கு அறிந்தவராகவும் பண் ஆராய்ச்சியில் சிறந்தவராகவும் விளங்கி, தமிழிசைச் சங்கத்தின் இசைப் பேரறிஞர் பட்டத்தையும் பெற்றார்.

சோமுவுக்குப் பரிசளிப்பதற்காக நடந்த விழாவில், நீதிபதி கோகுல கிருஷ்ணனும் அமைச்சர் ராஜாராமும் பங்கேற்று சிறப்பித்தார்கள். அந்த நாளில் சென்னை நகர மேயராக இருந்த முத்தையா செட்டியார் செய்தளித்த அலங்கார நாற்காலியும் பொன்னாபரணமும் தான் இன்றளவும் சென்னை நகர மேயர்களால் பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டார் ராஜாராம். (அதாவது தேர்தல் நடந்து மேயர் பதவி உயிர்ப்பிக்கப்பட்டால்!) ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவரான முத்தையா செட்டியார் விருப்பு வெறுப்பின்றி செயலாற்றியவர். 1937-ல் ராஜாஜி அமைச்சரவையின் ஹிந்தி பாடத் திட்டத்தை எதிர்த்தார்; ஆனால் அதே அளவு தீவிரத்துடன் அரசின் ஆலயப் பிரவேச திட்டத்தை ஆதரித்தார். ராஜாசர் அண்ணாமலை செட்டியாரும் மகன் முத்தையா செட்டியாரும் ஒரே சமயத்தில் அண்ணாமலை பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களாக் விளங்கினார்கள். மலேசிய அரசு இங்கே ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க இரண்டு கோடி பணம் தருவதாகச் சொன்ன போது, அது குறித்து முத்தையா செட்டியாருடன் விவாதித்தார் ராஜா ராம். ''மருத்துவக் கல்லூரி தொடங்கலாம்; ஆனால் அதற்கு மலேசிய அரசிடம் பணம் பெறுவது நம் நாட்டின் கௌரவத்துக்கு உரியதா?'' என்று கேட்டு, அந்த நிதி இன்றியே அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்கியவர் ராஜாசர் முத்தையா செட்டியார். இப்படிப் பல அரிய தகவல்களை வெளியிட்டார் அமைச்சர் ராஜாராம்.

ராஜா சர் முத்தையா செட்டியார் பிறந்த நாள் விழா, தமிழ்ச் செல்வத்தையும், அறச் செல்வத்தையும், பண்புச் செல்வத்தையும் வளர்க்கும் விழாவாக விளங்கியது.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

REGISTERED NO. M. 4392

